www.tamilarangam.net

# எரிமலை



மார்ச் 1996

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## புத்துணர்வு

அன்புடையீர்
வணக்கம்.

புலிகளின் குரல் "எரிமலை" இதழ் கண்டேன். தமிழீழச் செய்திகள், விடுதலைப்புலிகளின் வீரவரலாறுகள் மற்றும் உலகச் செய்திகளைத் தாங்கிவரும் எரிமலைக்கு நெஞ்சார்ந்த பாராட்டுக்கள். தமிழீழ விடுதலைக்கு ஆதரவாகக் குரல்கொடுக்கும் 'தமிழ் தமிழர் இயக்கத்'தின் அங்கத்தினராக தமிழகத்தில் செயல்படுகிறேன். எரிமலை இதழ் எமக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. எங்கள் பகுதிக்கு கூடுதலான இதழ்கள் கிடைத்தால் மேலும் நண்பர்கள் தமிழீழச் செய்திகளை அறிய வாய்ப்பாய் அமையும்.

பொன். இளங்கோவன்
இராசப்பாளையம்
தமிழ்நாடு.

## கிளைபரப்பி வானுயர

'எரிமலை' இதழ் சகல இடங்களிலும் கிளைபரப்பி வானுயர வளர வேண்டும். அதுவே எனது அவா. உலகிலுள்ள சகல தமிழ் மக்கள் கைகளிலும் தவழ்ந்து அனைவருக்கும் எமது போராட்டத்தின் புனிதத்தை இலட்சியத்தை தலைமையை உணர்த்தவேண்டும். இதுவும் எனது நீண்ட அவா. இப்படி ஒரு புனித ஏற்பாட்டை நிகழ்த்தி வரும் எமது தேசியத் தலைவருக்கும் ஆசிரியர் இயக்குனர்கள் அனைவருக்கும் எனது மகிழ்ச்சியுடனான நன்றிகள்.

அன்பின் வாசகன்
ம. வாணன்.


## தோள் கொடுக்க முடியவில்லையே

பெருமதிப்புக்குரிய எரிமலை
இதழ் ஆசிரியருக்கு!

எனது நன்றி கலந்த வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கின்றேன்.

உங்களது பொறுப்பு மிக்க நற்சேவையால் என்னைப்போன்ற விடுதலை விரும்பிகளுக்கு தமிழீழத்தில் என்ன நடக்கின்றது என 'எரிமலை' இதழ் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. மாதம் தவறாமல் கிடைத்து விடுகிறது. உங்கள் துரித சேவைக்கு இங்கு வாழும் தமிழர்களின் இதயம் கனிந்த பாராட்டுக்கள். இவ் விடுதலைப்போராட்டத்தில் உங்களோடு நின்று தோள் கொடுக்க முடியவில்லையே என்று ஏக்கமும் வேதனையும் எங்களை வாட்டுகின்றது.

www.tamilarangam.net




## அக்கறைப் பூக்கள்

தமிழனுக்கு தமிழன் எதிரியாகிக் கொண்டு வருகிறான். தங்கள் பத்திரிகையில் வெளியான எட்டப்பனின் புகழ் சொல்லும் அந்த கயவர்களை சரியான முறையில் தலைவர் தண்டிக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். இன்னும் இதுபோன்ற சதிகாரர்களை அடையாளம் கண்டு துடைத்தொழிக்க வேண்டும். இந்த கைக்கூலிகளை சரித்திரத்தில் இடம் பெறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

உயிரை போர்க் கருவியாக நினைத்து போராடுகின்ற விடுதலை வீரர்களுக்கு எங்களது பூரண நல்லாசிகள் எப்பொழுதும் உண்டு.

சிங்கள இராணுவம் புரிகின்ற கொடுமைகள் அனைத்துக்கும் பக்கபலமாக இருந்து வரும் ரத்தவெறி பிடித்த சந்திரிகாவை எதிர்த்து இங்கு தமிழ் மக்கள் ஒன்று கூடி ஐ.நா. முன் குரல் எழுப்பினோம். யாழ்ப்பாணத்தில் சிங்கள ராணுவம் கொடியேற்றி கொண்டாட்டம் போடுகிறார்கள். ஆனால் அந்த கொண்டாட்டம் அடங்கி ஒடுங்கி அழிந்து போகும் காலமும் கூடிய விரைவில் மலரத்தான் போகிறது. எங்களது தமிழ் வீரர்கள் 'யாழ்ப்பாணத்தை மீண்டும் மீட்பார்கள். எதிரிகளை வீழ்த்துவார்கள் என முழுமனதோடு நம்புகிறோம்.

நம் தலைவரின் வழிகாட்டலில் புலிப்படை வீரர்கள் ஆத்மபலத்தோடு புயலென புறப்பட்டு வரப் போகிறார்கள். வரவேண்டும். அதுவே எங்களது மிகப் பெரிய பிரார்த்தனை! மலேசிய தமிழர்களின் அன்பும் ஆதரவும் தமிழ் ஈழத்திற்கு என்றும் உண்டு.

இதுவரை உயிரை துச்சமாக மதித்து தமது உயிரை அர்ப்பணித்த, ஆண், பெண் புலிவீரர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எனது உயிரினும் மேலான தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் என்றென்றும் வாழவேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

விடுதலை விரும்பி
ஜே. ராஜேந்திரன்.
மலேசியா மேற்கு.

## அரிய பொக்கிசம்

அன்புடன் ஆசிரியர் குழுவிற்கு

எரிமலை பத்திரிகையை தற்செயலாக ஓரிடத்தில் காணும் பாக்கியம் பெற்றேன். இதுதான் நான் முதல் முறையாக பார்த்த போராளிப் பத்திரிகை. தங்களின் இந்த வெளியீடு மற்ற பத்திரிகைகளைப் போல் படித்ததும் தூக்கி எறிந்து விடக்கூடியதன்று. இது பொக்கிஷமாக பாதுகாத்து நம் வாரிசுகளுக்கும் கொடுக்க வேண்டிய அபூர்வ வெளியீடு.

ஹபீப்
டோகா.

**அருமையான எரிமலை வாசகர்களே!**

**புலம்பெயர் மண்ணின் அவலங்களைச் சுட்டெரிக்கவேண்டும். இந்த வாழ்வின் அவலத்தை, துயரத்தை வென்றாக வேண்டும். தாய் நிலத்தில் இருந்து வேரறுந்து போய், அன்னியமாகும் நிலை எங்களை வாட்டுகிறது. அலைக்கழிக்கிறது. இந்த வாழ்க்கையின் நிதர்சனத்தை எங்களின் இதயத்துக்குள் மட்டும் வைத்திருக்கப் போகின்றோமா? எங்களைச் சதாகாலில் இடறி விழுத்திட ஆயிரம் கண்ணிகள். வாழ்க்கையைத் தேடி ஓடி நாங்கள் என்னவாய்க் களைத்துப் போக நேர்ந்துள்ளது. உயிர்ப்பில்லை, இனிமையில்லை, அமைதியில்லை, அழகில்லை, ... ஓராயிரம் துயரங்கள். இத்தகைய வேதனைக்குள் மனம் கசங்கி, விதியென வீழ்ந்து போகாமல் துயர் தொலைய எழுவோம். இன்னுமொரு எங்களின் இளைய சகோதரனையாவது இந்த சகதிக்குள் வீழாமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற துடிப்பைச் சித்தரிப்போம்; கலையாக்குவோம். தாயகம் நோக்கிய எமது பயணம் தொடரட்டும்.**

**உங்களின் கலையாக்கங்ளுக்கு எரிமலை களம் அமைக்க இருக்கிறது.**

**- ஆசிரியர் குழு.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு
மார்ச் 1996

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# போராடுவதே வாழ்வுக்கு வழி

**யாழ்** குடாநாட்டின் மீதான, சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கிறது. அவ் ஆக்கிரமிப்பால் அகதிகளாக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் சொல்லொணாத் துன்பங்களும் குறையவில்லை. ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து சிங்கள இராணுவம் வெளியேறவேண்டும்; அல்லது வெளியேற்றப்படவேண்டும். அப்போதுதான் விரும்பிய அகதிகள் தங்கள் சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பி சகஜ வாழ்க்கையை ஆரம்பிக்க முடியும். மூன்றாவது தரப்பொன்றின் மத்தியஸ்தத்தோடு, சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமெனில், சிங்கள இராணுவம் குடாநாட்டில் ஆக்கிர மித்த பகுதிகளில் இருந்து வெளியேறி, பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலை உரு வாக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஆணித்தரமாக வலியுறுத்தி வருகின்றது. அதேவேளை, இராணுவம் அங்கு நிலலைகொள்ள முடியாத வாறான கெரில்லாத் தாக்குதல்களை அதிகரித்தும், விநியோகங்களைத் தடைசெய்தும் வருவதோடு, பாரிய தாக்குதல் ஒன்றுக்கான ஆயத்தங்களையும் செய்துவருகின்றது.

சிறீலங்கா அரசாங்கம், இத்தகு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து, தனது இராணுவத்தை அவமானமின்றி வெளியேற்றும் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றது. அதேவேளை, பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த யாழ் குடாநாட்டின் ஏனைய பகுதிகளையும், வன்னி, மற்றும் கிழக்குப் பகுதிகளையும் கைப்பற்றி விடுதலைப் புலிகளை தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்குள் ஒழித்துக் கட்டுவேன் என்று தனது மாபெரும் திட்டங்களையும் (Grand designs) வெளிப்படுத்தி வருகின்றார். அத்தோடு பிரதமர் பதவியைக் கைப்பற்றுவதும் அவரது கனவுகளில் ஒன்றாக உள்ளது. அனுருத்த ரத்வத்த தலைமையிலான இராணுவ ஆட்சி பற்றியும் பேசப்படுகிறது. எனவே, இப் பதவிப் போட்டிகளில் வெற்றி பெறவும், தேர்தல் ஒன்றை நடாத்தி தனது தலைமையை பெரும் பலத்துடன் உறுதிப்படுத்திக் கொள்ளவும் தமிழ் மக்கள் மீதான, விடுதலைப் புலிகள் மீதான இராணுவ வெற்றிகள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அவசியமாகின்றன. போரில் வெற்றி கண்ட இராணி என்ற மகுடம் சூட்டிக்கொள்ள அவர் விரும்புகிறார். எனவே, இராணுவத் தீர்வும், அதற்கான இராணுவ நடவடிக்கைகளும் தொடர்ந்தும் அரசாங்கத்தினதும், ஜனாதிபதியினதும் முழுமையான திட்டங்களாக அமைகின்றன. குடாநாட்டுக்குள் இராணுவம் சிக்குண்ட நிலைமை, பொருளாதார நெருக்கடி, உலக அபிப்பிராயம் அரசாங்கத் துக்குப் பாதகமாக மாறி வருவது, கிழக்கில் பெரும் பகுதிகளை இழந்து வருவது, விடுதலைப் புலிகளை போரில் வெல்ல முடியாது போன்ற யதார்த்த உண்மைகளை சந்திரிகா உணர்ந்த போதிலும், முன்கூறிய குறுகிய அரசியல் லாபம் என்ற காரணி அவரது இராணுவ நடவடிக்கைகளை வழிநடத்துகிறது. இந்த இராணுவத் தீர்வு முயற்சியில், சரிந்து வரும் உலக அபிப்பிராயத்தை தனக்குச் சாதகமாகத் திருப்ப ஜனாதிபதி தனது தீர்வுத்திட்டத்தை தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார். கடந்த வருடம் ஒகஸ்டில் ஜனாதிபதி முன்வைத்த தீர்வுத்திட்ட ஆலோசனைகள் சட்ட ரீதியான வரைவு என்ற வடிவத்தைப் பெறும் போது, அவராலேயே பாரதூரமான, தமிழர்களுக்கு இன்னும் பாதகமான மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளதை உலகம் உணர்ந்தே உள்ளது. அது, பாராளுமன்ற தெரிவுக்குழு, பாராளுமன்றம், குடியொப்பம் போன்ற தடைகளை மேலும் கடக்கும் போது சிங்கள இனவாதச் சிந்தனைகளைத் திருப்திப்படுத்துவதாய் இன்னும் மலினப்படும்; ஒன்றுக்கும் உதவாததாய், பழையபடி ஒற்றையாட்சி முறைமைக்கும், சிங்கள மேலாதிக்கத்துக்கும் வழிவகுக்கும் என்பதையும் உலகம் கண்ணாரக் கண்டுவருகின்றது. ஆயினும் எதையும் ஏற்றுக்கொள்ள அவரது காலின் கீழ் தவம் கிடக்கும் கொழும்புத் தமிழ்க் குழுக்கள் மூலம், இத் தீர்வுத் திட்டத்திற்கு முண்டுகொடுக்க ஜனாதிபதி முனைகிறார். ஏதாவது ஆட்சேபனை எழுப்பும் குழுக்களை மிரட்டி அடிபணிய வைக்கும் முயற்சியில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதராலயம் ஈடுபட்டுள்ளது.

சிறீலங்கா கடற்படையுடன் இணைந்து இச்சந்தர்ப்பத்தில் இந்தியக் கடற்படை, விடுதலைப் புலிகளின் கப்பல் மீது நடத்திய தாக்குதல் முக்கியத்துவம் பெறுகிறது. சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு முயற்சிக்கும், தமிழினப் படுகொலைக்கும் இந்தியா கூட்டான இராணுவ நடவடிக்கை மூலம் ஆதரவளிக்க முன்வந்துள்ளதை அது எடுத்துக் காட்டுகின்றது. அம் முயற்சியை முறியடித்து, தமிழினத்தை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை செய்யும் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டுக்கு எதிராக இந்தியா நேரடியாக களத்தில் இறங்கிவிட்டதையும் அது வெளிப்படையாக எடுத்துக்காட்டுகின்றது. சிறீலங்கா, இந்தியா ஆகியவற்றின் இக்கூட்டு அடாவடித்தனத்தை உலக வாழ் தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்? தமிழ்நாட்டு மக்கள் இன்னும் ஏமாளிகளாகப் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறார்களா? அடக்குமுறைகள் எதிர்ப்பின்றி அடிபணிந்ததாக வரலாறு இல்லை. எனவே தமிழர்கள் அனைவரும் இணைந்து போராடுவதே வாழ்வுக்கு வழி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண்களின் விடுதலைப் போராட்டம்: இயக்கத்தின் அக்கினிக் குழந்தை

www.tamilarangam.net

**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் உலக மகளிர் தினத்தையொட்டி விடுத்த அறிக்கையிலிருந்து**



எமது சமூகம் மாறிக்கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக்கொண்டிருக்கும் வரலாற்றுப் புயல் எமது மண்ணில் காலம் காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்தி வருகிறது. எமதுமனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப் போர் இன்று முனைப்புப் பெற்று வருகிறது. பெண் விடுதலை என்ற இலட்சியப் போராட்டமானது எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும், எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச் சரித்திரம். மண்ணின் விடிவிற்காகவும் பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழப் புரட்சிப் பெண் புலியாக மாறிவிட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கிறாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழி சமைத்துக்கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாகப் பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டு வடிவங்களிலும் இந்த, சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகிறது. பெண்ணைத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால் ரீதியான உடற்கூற்று வேறுபாடு என்பது இயற்கையின் திருவிளையாடலாக இனவிருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை. உயிர்ப் படைப்பிற்காக சிருஷ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்தி சமத்துவமற்ற உறவுகளை சமூகம் பின்னிவிட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை பெண்மீது பதித்துவிட்ட படிமங்களும், பார்வைகளும், ஆண், பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.


மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கிறது. அது மனிதப் பிறவிகளுக்குப் பொதுவானது.

இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்கமுடியாது. எதையும் பெண்ணால் சாதிக்க முடியும் என்பதற்கு எமது போராட்டம் ஒரு உன்னத உதாரணமாகத் திகழ்கிறது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம் கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக்கரம் நீட்டுகிறது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக்கொள்ளும் போதுதான் ஆண் பெண் சமத்துவம் சாத்திய மாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




சண்டித்தனக் கனவுகளை நிறைவேற்ற முயன்று தோல்விகண்ட முயற்சிகளுக்கு தமிழீழம் தவிர்ந்த இன்னொரு உதாரணம், மாலைதீவு சதிப்புரட்சி. அண்டை அயல் நாடுகளை சகல வல்லமை பொருந்திய தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு 'றோ' அமைப்பு பல தில்லுமுல்லுகளைச் செய்தாலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் தொடர்ந்து தோல்வியையே சந்தித்துள்ளனர். எனினும் அவர்கள் ஓய்ந்துவிடவில்லை. ஏதோ ஒரு விதத்தில், ஏதோ ஒரு வகையில் தமது ஆதிக்கக் கரங்களை நீட்டி தமிழீழ விடுதலைப் புலிகளையும், விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கி விடுவதில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றனர் என்பதை அண்மைக் காலத்துச் செய்திகளின் அடிப்படையில் தெரிந்துகொள்ள முடியும்.

# 'றோ'வின் ஆதிக்க கனவைத் தகர்த்து எழுகின்ற விடுதலைப் போர்

"ஆயுதத்தையும் ஆட்பலத்தையும் மட்டுமே நம்பி வந்தோம்" என தமிழ் மண்ணை ஆக்கிரமிக்க வந்து பின் மறக்கமுடியாதவொரு வரலாற்றுத் தோல்வியுடன் நாடு திரும்பிய இந்திய இராணுவத்தின் கடைசிப் போர்வீரன் தமிழீழ மண்ணை விட்டு வெளியேறிய போது கூறியிருந்தான். அமைதிப் படை எனக் கூறிக்கொண்டாலும் ஒரு கொடுமை வாய்ந்த ஆக்கிரமிப்புப் படையாகச் செயற்பட்ட இந்திய இராணுவம் தமிழீழ மக்களின் தீரம் செறிந்த விடுதலைப் போராட்டத்துக்கு முன் தாக்குப் பிடிக்க முடியாமல் தலைகுனிந்து திரும்பி ஆறு ஆண்டுகள் முடிந்து விட்டன. ஆனால், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்தியா மேற்கொண்டு வரும் அணுகுமுறைகளைப் பார்க்கும் போது வெளிப்படையாக இல்லாவிடினும் எப்படியாவது இந்தப் போராட்டத்தை நசுக்கியே தீருவது என்பதில் பிடிவாதமாக இருந்து கொண்டு செயற்படுவதாகவே தோன்றுகின்றது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பிரதானமானதொரு நாடாகவும் அதேவேளை தென்கிழக்கு ஆசியாவின் வல்லரசுக் கனவுடனும் இருப்பதால், அந்தப் பிராந்தியங்களில் எங்கு பிரச்சினைகள் நடந்தாலும் அழையா விருந்தாளியாக வலியச் சென்று மூக்கை நுழைப்பது இந்திய உளவுத்துறையான 'றோ' (RAW) இன் இயல்பு. இவர்களின் **பிராந்திய** முகத்தையும் விடுதலைப் போராளிகளுக்கு இன்னொரு முகத்தையும் காட்டிக்கொண்டிருந்தது. விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் மூலம் சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் அதேவேளை, போராட்ட அமைப்புக்களையும் தனது சொந்தக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே விரும்பியது. இதற்கு விடுதலைப் புலிகள் தவிர அனைத்து அமைப்புக்களும் பலியாகின. அதிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தவிர, அனைத்து விடுதலை இயக்கங்களும் இந்தியாவின் கைக்கூலிகளாக மாறி பின்னர் காலப்போக்கில் சிறீலங்காவின் அடிவருடிக்கூட்டங்களாகிவிட்டனர். 1985-ம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் இந்தியா விடுதலைப்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலங்களில், விடுதலைப் போராட்ட அமைப்புகள் என்று தம்மைச் சொல்லிக்கொண்ட பல்வேறு போராட்டக் குழுக்களுக்குமே இந்தியாவின் 'றோ' அமைப்பு நேரடியான உதவிகளைப் புரிந்துள்ளது. சிறீலங்கா அரசுக்கு ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




போராளிகளை தனது கட்டுக்குள் வைத்திருக்க முழுமூச்சாக முயன்றது. பின்னர் பெங்களூர் பேச்சு வார்த்தை -இப்படியாகத் தொடர்ந்த இத் தலையீடுகள் வெற்றியளிக்காத பட்சத்தில் ராஜீவ் காந்தி -ஜெயவர்த்தனா ஒப்பந்தம் 1987-ல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

தமிழீழ மக்களில் எவரையும் கலந்தாலோசிக்காமல் அவர்கள் சார்பில் இந்தியாவே ஜே. ஆருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதுடன் அதனைத் தமிழீழ மக்கள் ஏற்றுக் கொண்டேயாகவேண்டும் எனவும் வற்புறுத்தியது. சமாதானத்தைத் தோற்றுவிக்கவே இவ் ஒப்பந்தம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்தியாவின் இச் செயலுக்கு உடன்படாவிட்டாலும் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருக்க விரும்பாத விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தனர்.

1987-ம் ஆண்டு அமைதியைத் தோற்றுவிக்க இந்தியா அனுப்பிய படையில் கிட்டத்தட்ட ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் இருந்தனர். போர் விமானங்கள், கனரக பீரங்கிகள், தாங்கிகள் என ஒரு பிரமாண்டமான படையெடுப்புக்கான தயாரிப்புக்களுடன் அப்படையணி வந்திறங்கியபோது மாவிலைத் தோரணம் கட்டி, சூடம் ஏற்றி, தீபம் காட்டி ஆரத்தியெடுத்தார்கள் தமிழீழ மக்கள். அமைதியைத் தோற்றுவிப்பார்கள் என்ற நம்பிக்கை விரைவிலேயே கானல்நீராய் போனது.

அமைதியைத் தோற்றுவித்து ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வந்த இந்திய இராணுவம் போராளிகளிடமிருந்து ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டுவிட்டு, அங்குள்ள மாங்காய், இளநீர் இவைகள் பற்றியே கவனம் செலுத்திக்கொண்டிருந்தது. சிறீலங்கா அரசு வழமையை விட இன்னும் அதிகமாக தனது அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருந்தும் அவர்கள் அதைக் கவனித்ததாகத் தெரியவில்லை. முறையிட்டும் பயனில்லை. நல்லை நகர் ஆலய முன்றலில் திலீபன் பட்டினிப் போர் நடாத்தினான். ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டினான். உண்ணா நோன்பிருந்த திலீபன் உயிர்நீத்த பின்பும் அவர்கள் கண்திறக்கவில்லை. தளபதிகள் குமரப்பா புலேந்திரன் உட்பட பன்னிரண்டு போராளிகளை சதிசெய்து கொன்றனர். இந்தியப் படைக்கு எதிரான போர் ஆரம்பமானபோது, தமிழர்கள் வாழ்விடங்களைச் சேதப்படுத்தி - சொத்துக்களை அழித்து கைதுசெய்து சிறைகளில் துன்புறுத்தியது போக, ஈவிரக்கமற்ற முறையில் கொன்றொழித்த தமிழ் மக்களின் தொகையே ஆறாயிரம் எனப் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளின் பின், தனது வல்லரசுக் கனவுக்கு தமிழீழத்தில் கிடைத்த மரண அடியினால் நொந்துபோன இந்தியா தமது படைகளை திருப்பி அழைத்துக்கொண்ட போது, “ஆயிரக்கணக்கான படைவீரர்களை இழந்ததற்கும், அங்கவீனர்களாகியதற்கும் புலிகளிடம் தோல்வியடைய வேண்டியேற்பட்டதற்கும் உளவு அமைப்பான ‘றோ’வே காரணம்” என இந்திய அமைதிப்படையின் பல தளபதிகள் கூறியிருந்தனர்.

ஆனால், அதன் பின்னரும் தனது அணுகுமுறைகளை இந்தியா மாற்றிக்கொண்டதாக இல்லை. ராஜீவ் காந்தி கொலையில் எந்தவிதமான விசாரணைகளையும் ஆரம்பிக்க முன்னரே புலிகளைக் குற்றவாளிகளாக்கியது. தளபதி கிட்டு பயணம் செய்த கப்பலை சர்வதேசக் கடல் எல்லைக்குள் வைத்து வழிமறித்து அவரின் சாவுக்குக் காரணமாயிருந்தது. மேலும் சிறீலங்கா அரசுடன் கைகோர்த்துக்கொண்டு தமிழீழ விடுதலைப் போரை நசுக்கவும், விடுதலைப் புலிகளைத் தீர்த்துக்கட்டவும் தொடர் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறது.

தற்போது சிறீலங்காவில் ஆட்சி நடாத்தும் பொதுஜன முன்னணி அரசுடனும் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் இறுக்கமான நட்பைப் பேணி வருவதுடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சதிச் செயல்களிலும் அவதூறுப் பிரச்சாரங்களிலும் இந்தியாவே சிறீலங்காவுக்கு உற்ற துணையாக இருந்துவருகிறது. எந்தச் சிங்கள அரசாங்கத்தின் காலத்திலும் இல்லாதவாறு சுமார் நான்கு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் ஒரேநாளில் உடுத்த உடையுடன் இருப்பிடங்களை விட்டு வெளியேறி அகதிகளானது சந்திரிகா அம்மையாரின் காலத்தில்தான் நடந்தது. ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து உலக நாடுகள் அனைத்தும் சிறீலங்காவின் செயலைக் கண்டித்தபோது எதுவும் கூறாமல் மௌனமாக

| | |
|---|---|
| 04-06-1987 | இந்திய விமானப் படை விமானம் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்குள் போட்டது. |
| 29-07-1987 | இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. |
| 30-07-1987 | இந்திய அமைதிப்படை (?) யாழ். வந்திறங்கியது. |
| 28-09-1987 | சிறீலங்காவிற்கான இந்தியத் தூதுவர் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினார். |
| 03-10-1987 | குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 புலிகள் சிறீலங்கா கடற்படையால் கைதுசெய்யப்பட்டனர். |
| 05-10-1987 | கடற்படையால் கைதுசெய்யப்பட்ட 17 பேரில் 12 பேர் தற்கொலை செய்துகொண்டனர். |
| 10-10-1987 | இந்திய இராணுவம் ஈழமுரசு, முரசொலி பத்திரிகைக் காரியாலங்களைக் குண்டு வைத்துத் தகர்த்ததுடன் தனது ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஆரம்பித்தது. |
| 22-10-1987 | யாழ்ப்பாணம் முழுவதும் இந்திய இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டது. |
| 24-03-1990 | இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தோல்வியுடன் இந்தியா திரும்பியது. |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்துகொண்டு சிறீலங்கா அரசின் தமிழினப் படுகொலையை அங்கீகரித்து வருகின்றன.

உணவும், மருந்தும், வாழ்வின் அடிப்படைகளும் இல்லாமல் தமிழர்கள் துன்பத்தில் துடித்தபோதும் ஆதரவாக ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்லாத இந்தியா, கொழும்பில் சிறீலங்காவின் பொருளாதார மையங்களில் ஒன்றான கொலன்னாவை - உருகொடவத்தை எண்ணெய் குதங்கள் எரிந்தபோது ஓடோடிவந்து உதவி புரிந்தது.

இந்தியாவின் கடல் எல்லைகளில் பாதுகாப்பைப் பலப்படுத்துவதாகக் கூறிக்கொண்டு கடல் பிரதேசமெங்கும் தனது கடற்படையைக் குவித்துவைத்துள்ளது. புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த சிறீலங்கா அரசுக்கு உதவுவதாகக் கூறிக்கொண்டு இந்தியக் கடற்படையின் அப்பாவி மீனவர்களை அடித்து துன்புறுத்துவதுடன் சுட்டுக் கொலையும் செய்து வருகின்றனர். அதேவேளை இந்திய மீனவர்களை சிறீலங்கா கடற்படையினர் சுட்டுக் கொல்லும் போது அதற்கெதிராக எந்த நடவடிக்கையை மேற்கொள்ளாமல் தன் சொந்தத் தமிழ் மக்களின் பாதுகாப்பையே கருத்திற்கொள்ளாமல் இந்தியா உள்ளது.

இந்தியக் கடல்வழியாகச் செல்லாமல் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளுடன் சர்வதேசக் கடற்பரப்பில் தளபதி கிட்டு சென்றுகொண்டிருந்த கப்பலை, இந்தியாவுக்கு அச்சுறுத்தல் என வழிமறித்துக் கைதுசெய்ய முயன்ற இந்தியா - தற்போது இந்தியக் கடல் எல்லைக்குள் திருவனந்தபுரம் கொச்சின் துறைமுகத்துள் தங்கியிருந்து உளவறிந்ததாகக் கருதப்படும் வெளிநாட்டுக் கப்பல் மீது எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அத்துடன் மேற்குவங்க மாநிலமான புருஸியா என்னும் இடத்தில் எங்கிருந்தோ மர்மமாக வந்த விமானமொன்று ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் வீசிவிட்டுப் போனதை தனது பாதுகாப்புக்கான அச்சுறுத்தலாகக் கருதவில்லை. ஆனால், சிறீலங்காவின் கடல் எல்லைக்குள் சிறீலங்கா கடற்படைக்கு எதிராகப் புலிகள் நடத்தும் யுத்தம் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறுவது நகைப்புக்கிடமானது. கடந்த 14-02-96 அன்று காலை முல்லைத்தீவு கடலில் கடற்கரும்புலிகளின் படகொன்றின் மீது சிறீலங்காவின் கடற்படையும் விமானப்படையும் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இந்திய கடற்படைப் படகுகளும் முக்கிய பங்கு வகித்திருந்தன என்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதொன்று. இவைகளை விட அண்மைக் காலத்தில், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களைச் சந்தித்த இந்தியத் தூதரக அதிகாரி, 'சிறீலங்கா அரசு முன்வைத்துள்ள இனப்பிரச்சினைத் தீர்வுத் திட்டத்தை எந்தவிதமான நிபந்தனைகளோ, மறுப்போ இன்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்' என மிரட்டியுள்ளார். எப்போதும் நக்கிப்பிழைத்து எதற்கும் வாலையாட்டும் எசமான் விசுவாசம் நிரம்பிய முன்னைநாள் தமிழீழ விடுதலைக் குழுக்களாகவும் தற்போது தமிழ்த் தேசவிரோதக் குழுக்களாகவும் செயற்பட்டு வருபவர்கள் அதற்கும் வாலை அல்லது தலையை ஆட்டியுள்ளனர் எனத் தெரியவருகிறது.

இவை எல்லாவற்றையும் விட கடந்த டிசம்பர் மாதத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இந்திய உளவுத்துறையான 'றோ' இரகசியக் கூட்டமொன்றை நடாத்தியது. 'றோ'வின் முக்கியமான அதிகாரிகள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்தை இந்தியக் கொமாண்டோக்கள் அழித்தால் இந்தியாவுக்கு ஏற்படக்கூடிய சாதக - பாதகமான விளைவுகள் ஆராயப்பட்டது. மேலும் சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளை அழித்து தமிழீழப் போராட்டத்தைச் சிதைத்து அழித்தால் அதனால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள், இந்தியா சிறீலங்கா அரசுடன் ஒத்துழைத்தால் தமிழ்நாட்டில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஆகியவையும் அலசப்பட்டது. தொடர்ந்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் என்பன பற்றியும் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில், தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றியடைவதை இந்தியா என்றைக்குமே விரும்பியதில்லை. இந்தியாவின் ஆதிக்கத்தை ஏற்று அதற்குத் தலையாட்ட மறுக்கும் வரை அது தனது சதி வலையைப் பின்னிக்கொண்டே இருக்கும். எனினும் தமிழீழ மக்கள் ஒரு விடயத்தில் மிகவும் தெளிவாக உள்ளனர். அது, "தமிழீழ விடுதலையை - எமது சுயநிர்ணய உரிமையை - எமது விருப்பு வெறுப்புக்களை நிர்ணயிப்பது இந்தியாவும் அதன் உளவுத்துறையான 'றோ'வும் அல்ல." என்பதாகும். அடக்கி ஒடுக்கப்பட்ட மனித இனங்கள் விடுதலை வேண்டி வீறுகொண்டெழும் போது அதனை எந்தச் சக்தியாலும் அழித்தொழிக்கவோ அன்றி தடுத்துநிறுத்தவோ முடியாது என்பதையே உலக வரலாறும் விடுதலைப் போராட்டங்களும் காட்டி நிற்கின்றன.

தென்கிழக்கு ஆசியாவில் ஒரு ஜனநாயக நாடாகவும் பிராந்தியத்தின் காவலனாகவும் நேரு - இந்திரா காலம் தொட்டு இந்தியா இருந்து வந்திருக்கின்றது. இன்று, அந்நிலையை இழந்து ஒரு ஆக்கிரமிப்பாளன் என்ற நிலைக்கு இந்தியா உள்ளாகியிருப்பது மட்டுமல்ல, தென்கிழக்காசியப் பிராந்திய மக்களின் நலன்களைப் பேசுவதற்கே அருகதையற்ற ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டது. அதற்குக் காரணம் உளவுத்துறையான 'றோ'தான் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் நாளை எழுதுவார்கள். ஏனெனில், கைகளால் பொத்தி சூரியனை மறைக்கவும், வேலி போட்டு புயலினைத் தடுக்கவும் யாருக்கு முடிந்தது?

**- ஆதிரையன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனைத்துலக அங்கீகாரத்திற்கான நிபந்தனைகள்



அனைத்துலக உறவுகள், உலக அபிப்பிராயம் என்பன எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் நிகழ்வுகளினதும் வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. உலகம் மிக விரைவாகச் சுருங்கி வரும் நிலையில் இவற்றைக் கணக்கிலெடுக்காது விடுதலைப் போராட்டம் ஒன்றை நடத்திவிட முடியாது.

உலக உறவுகளை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, உலக அபிப்பிராயத்தை எமது விடுதலைக்கு ஆதரவாகத் திரட்டுவதிலேயே எமது வெற்றி பெரிதும் தங்கி உள்ளது.

உலக மக்கள், நாடுகள், நாடுகளின் கூட்டமைப்புக்கள் (multilateral organisations), அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவும், அவற்றிற்கிடையிலான செயல்பாடுகளும் உலக அரசியலை இயங்க வைக்கும் சக்திகளாக அமைகின்றன. உலக மக்கள் எனும்போது சாதாரண மக்களையும், புத்திஜீவிகளையும் குறிக்கிறது. நாடுகள் எனும் போது பல்வேறு சிறிய, பெரிய நாடுகளையும், வல்லரசுகளையும் குறிக்கிறது. நாடுகளின் கூட்டமைப்புகள், உலகளாவிய ரீதியிலும் பிராந்திய அடிப்படையிலும் அமைகின்றன. அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை, மனிதாபிமான உதவி, கலை, கல்வி, பண்பாடு, தகவல், இலக்கியம், சமூகம், அரசியல், இராணுவம் என்ற ரீதியில் பல்வேறு செயல்பாட்டுத் தளங்களில் இயங்குவனவாக உள்ளன.

ஒரு விடுதலை இயக்கம், தனது மக்களின் விடுதலைப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு இவற்றின் ஆதரவைப் பெறுதல் வேண்டும். வெளிநாட்டுச் செயற்பாடு என்ற புறம்பான பிரிவொன்றை உருவாக்கி, அதற்கான முழுநேர, நிரந்தர செயற்பாட்டாளர்களை நியமித்தல் வேண்டும். அவர்கள் திட்டமிட்ட, தொழிற்திறமை வாய்ந்த (Professional) ராஜதந்திரச் செயற்பாடுகளை ஆற்றுதல் வேண்டும். உலக நாடுகளினதும், வல்லரசுகளினதும் ஆதரவைப் பெற்று, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தையும் அங்கத்துவத்தையும் பெறுவதே இச் செயற்பாட்டின் உச்ச நோக்கமாக உள்ளது. சர்வதேச சமூகம் என்று கூறும்போது, உலக மக்கள், அவர்களை உள்ளடக்கிய நாடுகள், அனைத்து நாடுகளையும் உள்ளடக்கிய ஐக்கிய நாடுகள் சபை என்று குறிப்பிடப்படும். ஐக்கிய நாடுகள் சபையில் இடம்பெற பாதுகாப்புச் சபையிலுள்ள அனைத்து வல்லரசுகளின் ஆதரவும், பொதுச்சபையிலுள்ள பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவும் தேவை. இவ் ஆதரவுக்கான அபிப்பிராயத்தை ஒவ்வொரு நாட்டு மக்களிடையேயும் ஏற்படுத்தல் வேண்டும். இவ்வபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் அந்நாடுகளிலுள்ள புத்திஜீவிகள் தாக்கமான பங்களிப்பைச் செய்கிறார்கள். மக்கள் அபிப்பிராயம், ஜனநாயக விருப்பமாக ஒவ்வொரு அரசாங்கத்தையும், அரசியல் தலைவர்களையும் பாதிக்கிறது. அந்நாடுகளிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் செயல்பாடுகள், மக்களின் அபிப்பிராயத்தை ஒரு இலக்கு நோக்கித் திரட்டுவதாயும், நாட்டு அரசாங்கங்கள் மீதும், நாடுகளின் கூட்டமைப்புகள் மீதும் அவ்விலக்குகளை ஏற்றுக்கொள்ளுமாறு அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும் உள்ளன. இவற்றின் இறுதி விளைவு என்னவெனில், உலக நாடுகளின் அங்கீகாரமும், நாடுகளின் கூட்டமைப்புக்களில் அங்கத்துவமும் ஓர் போராட்ட அமைப்புக்கோ அல்லது விடுதலை பெற்ற தேசத்துக்கோ கிடைக்கின்ற சூழ்நிலை உருவாகுதலாகும். இவ்விலக்குகளை குறிக்கோளாக வைத்தே விடுதலை இயக்கங்களும், அவற்றின் வெளிநாட்டுப் பிரிவுகளும், அதன் செயற்பாட்டாளர்களும் இயங்குகின்றனர்.

ஓர் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தும் கிளர்ச்சி அல்லது போராட்டம் சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்டது, சட்டரீதியானது என்ற அங்கீகாரம் முதலில் ஏற்பட வேண்டும். அங்கு நிலைபெற்றிருக்கின்ற அரசாங்கம், அப்போராட்டத்தை நடத்துபவரைக் குற்றவாளிகள், பயங்கரவாதிகள் என்று கணித்துச் செயல்பட்ட போதிலும், அவர்கள் சர்வதேச சட்டவரையறையுள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளிகள் (Combatants) என்ற அந்தஸ்தைப் பெறவேண்டும். கிளர்ச்சிக்கார இராணுவத்தில், கட்டளைப் படிமுறை (Command structure) இருப்பதோடு, சர்வதேச போர்ச் சட்டங்களுக்கு அமைவாகவே தனது போர் நடவடிக்கைகள் நடைபெறுமென அது கண்காணித்தல் வேண்டும். மேலும், அந்த அரசியல் இராணுவ அமைப்பின் கட்டுப்பாட்டில் ஒரு நிலப்பரப்பு இருக்குமாயின் அப்பகுதியில், சர்வதேசப் போர்ச்



சட்டங்கள் அனுசரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பும் அந்தஸ்தும் அவ்வமைப்புப் பெறுகின்றது. கீழ்மட்ட உறுப்பினர்கள் இச்சட்டங்களை மீறிச் செயல்படும் சந்தர்ப்பங்கள் எழும்போது, அப் போராட்ட அமைப்போ அல்லது அதன் தலைமைப்பீடமோ முழுப் பொறுப்பையும் ஏற்க முடியாது. அவ்வமைப்பினுள் கட்டுப்பாடு இன்மை அவ்வமைப்பின் அந்தஸ்தைக் குறைக்கச் செய்யும். மேலும், அவ்வாறு தவறு செய்த கீழ்மட்ட உறுப்பினர்கள் உரிய தண்டனைக்கு உட்படுவதை தலைமைப்பீடம் உறுதிசெய்தல் வேண்டும். அரசாங்கப் படைகளுக்கும், கிளர்ச்சிக்கார இராணுவத்துக்கும் இடையிலான இத்தகு போர் நிலையே உள்நாட்டுப் போர் என்ற சட்ட அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கிறது. உள்நாட்டுப் போர் (Civil war) என்பது ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை (Internal problem) என்ற வரையறைக்குள்ளேயே அடங்குகிறது. ஆயினும், உள்நாட்டுப் போரிலும் இரு பகுதி இராணுவங்களும் நிறைவேற்ற வேண்டிய சில கடப்பாடுகளை உறுதிப்படுத்தவும், பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு உதவும் பொருட்டும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகள் உள்ளே வர அனுமதிக்கப்படுகின்றன. ஒரு அரசாங்கத்தின் அனுமதியின் பேரிலேயே இத்தகு சர்வதேச அமைப்புகள் ஒரு நாட்டினுள் இயங்குகின்ற போதிலும், இரு பகுதி இராணுவங்களுக்கிடையிலும் ஒரு நடுநிலையைக் கடைப்பிடிக்கவே அவை முயலுகின்றன. இத்தகு நிலை, போராட்ட இயக்கத்தின் சர்வதேச அங்கீகாரத்தை அதிகரிக்கச் செய்கிறது. ஓர் அரசாங்கம், அவர்களைக் குற்றவியலாளர்கள் (Criminals) கிளர்ச்சிக்காரர் (rebels) என்று அழைக்கவே விரும்பும் உள்நாட்டுப் போர், போராளிகள் என்பன போன்ற அந்தஸ்தை வழங்குவதற்கே தயக்கம் காட்டும். ஆயினும், போராட்ட வளர்ச்சி, அரசாங்கம் விரும்பாது விட்டாலும் அத்தகு அந்தஸ்துக்கான நிலைமைளைத் தோற்றுவிப்பதோடு, சர்வதேச சமூகத்தையும் அவ்வாறு அங்கீகரிக்க வைக்கிறது.

இப்போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமாக இருக்கும்போது அது புதியதொரு பரிமாணத்தைப் பெறுகின்றது. உள்நாட்டுப் பிரச்சினை, சர்வதேசப் பிரச்சினை என்ற வடிவத்தைப் பெறுகின்றது. சர்வதேச அக்கறைக்கும் தலையீட்டுக்கும் வழிவகுக்கிறது. ஓர் அரசாங்கத்தின் பிரத்தியேக விடயமாக மட்டுமல்லாது சர்வதேச விடயமாகவும், அவ்வரசாங்கத்தின் இறைமையைப் பாதிக்கும் விடயமாகவும் அமைகிறது. ஒரு பிரச்சினை தன் கையை விட்டு விலகி வெளியாரின் தலையீட்டுக்கு இடம் கொடுப்பதை எந்த அரசாங்கமும் விரும்புவதில்லை. உலக அரசியல்ச் சட்ட வரையறையினுள் சுயநிர்ணய உரிமை என்பது குடியேற்றவாத ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளும், மக்களும் பிரயோகிக்கும் விடயமாக உள்ளது. சர்வதேச சமூகம், அந்நாடுகளுக்கோ, மக்களுக்கோ சார்பாகத் தலையிட்டு அவற்றின் சுயநிர்ணய உரிமையை அல்லது விடுதலையை உறுதிப்படுத்த வேண்டும் என்பது நடைமுறை விதியாக உள்ளது. ஆயினும், பல்வேறு அங்கீகரிக்கப்பட்ட நாடுகளுக்குள்ளேயே தேசிய இனங்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன. பாகிஸ்தான், சோவியத் யூனியன், யூகோஸ்லாவியா, எத்தியோப்பியா ஆகிய ஸ்தாபிக்கப்பட்ட நாடுகளில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் வலுப்பெற்று புதிய நாடுகள் தோற்றம் பெற்றுள்ளன. அதே போன்று, இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, சீனா போன்ற பல நாடுகளில் இத் தேசியப் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. எனவே, சர்வதேசச் சட்ட வரையறை போதியதாக இல்லை என்ற காரணம் காட்டி அலட்சியப்படுத்த முடியாதவாறு தேசிய எழுச்சிகள் விஸ்பரூபம் எடுத்து வருகின்றன. எனவே, வெடித்துக் கிளம்பும் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குத் தீர்வுகாணவும், புதிய சட்டவரையறைகளை உருவாக்கவும் சர்வதேச சமூகம் நிர்ப்பந்திக்கப்பட்டு வருகின்றது. எனவே, தற்போதைக்கு, குடியேற்றவாதத்துக்கு உட்பட்ட மக்களே சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கத் தகுதிவாய்ந்தவர்கள் என்ற சட்ட அடிப்படையில், ஒரு நாட்டினுள், பெரும் எண்ணிக்கை வாய்ந்த தேசிய இனம், சிறிய எண்ணிக்கை உள்ள தேசிய இனத்தை நசுக்குவதை உள்நாட்டுக் குடியேற்றவாதம் (Internal colonialism) என்று வரையறுத்துக் கொள்கின்றனர்.

ஒரு நாட்டிலுள்ள பெரிய, சிறிய தேசிய இனங்களின் சமத்துவத்தின் அடிப்படையிலேயே அண்மையில், பொஸ்னியா கெஸிகோவினாவில் தீர்வு காணப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டினுள்ளே ஏற்படும் தேசிய இனப் பிரச்சினையை, ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, உலக அரசியலில்

**வளவன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனிக்க வேண்டிய முக்கிய சில பிரச்சினைகளில் ஒன்றாக வகுத்துள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. ஒரு நாட்டின் எல்லையைக் கடந்தால் தான் அகதிகள் என்று கருதப்படுவார்கள் என்ற நிலைமை மாறி, ஒரு நாட்டினுள் இடம்பெயர்ந்தவரும் அகதிகளே என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஐ.நா. சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் அமைப்பின் சேவை வழங்கப்படும் நடைமுறை தோன்றி வருகின்றது.

இவ்வுலக நிலைமையை எமது தேசிய விடுதலைப் போராட்டத்தோடு இணைத்துப் பார்த்து அலசி ஆராய்வதோடு, நடைமுறைச் செயல்பாட்டிலும் கைக்கொள்ளுதல் அவசியமாகிறது. எமது போராட்டத்தின் தீவிரம், வேகம் காரணமாக உலக மக்கள் எமது போராட்டம் குறித்து மேலும் மேலும் அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. உலகின் புத்திஜீவிகளும், இப்போராட்டம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் என்பதை தவிர்க்கமுடியாதவாறு ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் பல உண்மையானவையாகவும் பல போலியானவையாகவும் உள்ளன. கொள்கை உறுதிகொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களும், மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக வாதாடும் அமைப்புக்களும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிப்பதோடு ஆதரிக்கவும் முற்படுகின்றன. அரசாங்கங்களின் தேவைகளை நிறைவுசெய்ய உருவாக்கப்பட்ட போலி அமைப்புக்களும் உள்ளன. இவை, எமது விடுதலைப் போராட்டத்தைக் குழிதோண்டிப் புதைப்பதில் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன. பல் நாட்டுக் கூட்டமைப்புகளும் எமது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகி வருகின்றன. இவை எமது மக்களின் சுயநிர்ணய உரிமையையும் எமது தாயகத்தையும் தனிப்பட்ட முறையில் (Privately) அங்கீகரிக்கின்றன. தொடர்ச்சியான, விடாப்பிடியான ஆயுதப் போராட்டத்தின் விளைவாக, தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் திகழ்கிறார்கள் என்பதையும், அந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சமத்துவ அடிப்படையில் பேசி ஆயுத முரண்பாட்டுக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதையும், அதற்குத் தாம் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்பதையும் தெரிவிக்கின்றன.

ஆயினும், பலம் நிறைந்த, வல்லரசுத் தன்மை வாய்ந்த சில உலக நாடுகள் இவற்றை ஏற்றுக்கொண்டதாக வெளிக்காட்டவில்லை. தனிப்பட்ட (Privately) ரீதியில் ஏற்றுக் கொண்ட போதிலும், வேறு காரணங்களினால், வெளிப்படையாக மறுக்கவும் மழுங்கடிக்கவும் முற்படுகின்றன. புவிசார் அரசியல் காரணங்களும், வர்த்தக காரணங்களும் இங்கு முன்னிலை வகிக்கின்றன. சிறீலங்காவும், இந்தியாவும் தமது மேலாதிக்க நிலைப்பாடுகளினால் எமது போராட்டத்தை நசுக்க முற்படுகின்றன. இந்து சமுத்திரப் பிராந்திய புவிசார் அரசியல் முக்கியத்துவம், சந்தைப் பொருளாதாரம் ஆகியவை காரணமாக அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகள் இன்னும் எமது போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டமாக அங்கீகரிக்க முன்வரவில்லை. அவை வெளிப்படையாக அங்கீகரிக்காது போயினும், போராட்டத்தின் தேசியத்தன்மையை மறுக்க முடியாது, சிறீலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேசிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற அளவிலாவது தமது கருத்தை முன்வைக்கின்றன.

இப்படித் தடுமாறும் நிலை இருக்கும்போது, அதனைப் பயன்படுத்தி, சிறீலங்கா அரசு, அந்நாடுகளில் இருந்து உதவியைப் பெற்று எமது போராட்டத்தை நசுக்க முற்படுகின்றது. எமது இயக்கத்தை ஒரு பயங்கரவாத, சர்வதேச குற்றச் செயல்களில் ஈடுபடும் இயக்கமாகக் காட்ட முற்படுகிறது. வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தாம் செல்லும் நாடுகளில் எல்லாம் விடுதலைப் புலிகள், மிரட்டிக் காசு சேர்ப்பதாகவும், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாகவும் சொல்லி வருகிறார். அண்மையில், சிறீலங்காவின் இப்பிரச்சாரக் கருத்தையே, ஐரோப்பிய கூட்டமைப்பின் தென்னாசியப் பிரதிநிதி பிரான்சின் ஹென்றிச் (Francine Henrich) கொழும்பில், லக்ஷ்மன் கதிர்காமரைச் சந்தித்த பின்னர் வெளியிட்டார். இதில் எவ்வித உண்மையும் இல்லை என்றும், இது எமது இயக்கத்தின் பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் பொய்ப் பிரச்சாரம் என்றும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் அறிக்கை வெளியிட்டார். வெளிநாட்டு மூன்றாவது தரப்பொன்றின் மத்தியஸ்தத் தீர்வை முறியடிக்கவே சிறீலங்கா அரசாங்கம் இத்தீய பிரச்சாரத்தில் ஈடுபடுவதாக விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலக அறிக்கை கூறியது. இவ் எதிர்ப்பிரச்சாரங்களை முறியடித்து, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தையும், அதில் அங்கத்துவத்தையும் பெற, உலக வாழ் தமிழ் மக்கள் அனைவரும் திட்டமிட்ட அரசியல் செயல்பாட்டில் ஈடுபடவேண்டும். இச்செயல்பாட்டுக்கு தாயகத்தில் நடைபெறும் ஆயுதப்போராட்டம் ஆதாரமாகவும் வெளிநாட்டு மக்களின் ஆதரவு உறுதுணையாகவும் அமையும். ★

## யுத்தத்தில் பலனில்லை!

விடுதலைப்புலிகளின் தந்திரோபாயங்கள் பற்றி சரியாக அரசாங்கம் அறிந்திருக்குமாயின் புலிகள் மக்களிடமிருந்து பெருமளவு ஆதரவினை பெறுவதையே கண்டிருப்பார்கள். இவ்வாறான மக்கள் ஆதரவை அடித்தளமாகக் கொண்டே ஈழத்தைப் பெறுவதற்காக யுத்தத்தை அவர்கள் நடாத்துகின்றார்கள். புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் விடுதலைப் புலிகளிடமிருந்து மக்களை வேறுபடுத்தவே அது முயன்றது. ஆனால் அரசின் முயற்சிகள் மக்களை மேலும் புலிகளின் பக்கமே தள்ளின. விடுதலைப்புலிகள் பற்றியும் அவர்களது தந்திரோபாயங்கள் பற்றியும் அறிந்திராமல் யுத்தத்தை நடத்துவதால் பலனேற்படாது.

'வீக்எண்ட் எக்ஸ்பிரஸி'ல் லோர்ட் புட்டால்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## வானம் எம் வசமாகிறது

www.tamilarangam.net

# MI-17ன் இறுதிப் பயணம்

**MI-17** உலங்குவானூர்தி ஆகாய வெளியில் முகில்களுக்கூடாக பறந்து கொண்டிருக்கின்றது. 'சூரியக்கதிர்' சூரர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. உலங்குவானூர்தி பருத்தித்துறைக்கும் வெற்றிலைக்கேணிக்கும் இடைப்பட்ட கொந்தளிக்கும் கடற்பரப்பூடாக பறந்து கொண்டிருக்கின்றது.

உயரமான மணற் குன்றுகள், எதற்கும் அசைந்து கொடுக்காது நிமிர்ந்த கரும்பனைகள். எப்போதும் அமைதியாக, வான் பரப்பில் எதிரி விமானங்களின் இரைச்சல்களை உற்றுக் கேட்டபடி நிற்கிற விமான எதிர்ப்புப் படையணியைச் சேர்ந்த புலிவீரனின் கண்களைச் சிவப்பாக்குகிறது.

சந்திரிகா அரசுக்கு பேச்சுவார்த்தைக் காலத்தில் விடுதலைப்புலிகள் அழுத்தம் திருத்தமாக, தெளிவாகப் பின்வருமாறு கூறியிருந்தார்கள். "சமாதானத்துக்கான தூதுவர்களைச் சுமந்து வரும் விமானங்கள் வந்து இறங்கும் ஓடுபாதைகளை நாங்கள் இன்றும் பாதுகாத்து வைத்திருக்கிறோம்." சந்திரிகா அலட்சியம் செய்தார். அக்காலத்தில் இருந்து இன்று வரை தமிழீழ மண்ணை ஆக்கிரமிக்கும் நோக்குடன் பறந்த விமானங்கள் தமிழீழ வான்பரப்பில் பெரிய வெடி அதிர்வுகளோடு வெடித்து, தீக்கொழுந்து விட்டெரிந்து போயின. 'அவ்ரோ' விமானங்கள் அடுத்தடுத்து வீழ்ந்தன. ஒன்று விழுந்தது எப்படி என்று ஆராய நிபுணர்கள் குழுவோடு வந்த அடுத்ததும் வெடித்துச் சிதறியது.

A.N-32 விமானங்கள் இரண்டு காணாமற்போயின. அவை தொடர்பாக பல புரளிகளும், வதந்திகளும் எழுந்தன. காலநிலைக் கோளாறு காரணமாக வீழ்ந்திருக்கலாம், ஆழ் கடலில் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை எனவே கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற விதமாக வெல்லாம் பேசினார்கள். தமிழீழ வான் பரப்பில் விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரின் அமைதியான செயற்பாடு எந்த எதிரி விமானங்களையும் இலகுவாக நுழைய விடாது என்ற உண்மையைத்தான் அவர்கள் நம்பத் தயாரில்லை.

கடலின் நீல வர்ணத்தை வானூர்தியின் சன்னலூடாக ரசித்துக் கொண்டிருந்த விமானப்படை அதிகாரிகள், கடற்படையைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த உயரதிகாரிகள் ஒரு போதும் நினைத்திருக்க மாட்டார்கள், உலங்குவானூர்தி கடலுள் வீழுந்து நொருங்கும் என்று. அவர்கள் எதிர்பாராத நிகழ்வு கண்ணை மூடித் திறப்பதற்குள் நிகழ்ந்து விட்டது. குண்டுகளையும், கண்ணிகளையும், அகற்றுவதிலும், செயலிழக்க வைப்பதிலும் விசேட பயிற்சி பெற்ற இராணுவப் பொறியிலாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுமாக 39 பேர் இதில் பலியாகியிருக்கின்றனர்.

இந்த MI-17 எப்படி வீழ்ந்தது? வானொலித் தொடர்பு மூலம் விமானி தொடர்புகொள்ள முடியாமல் போகக் காரணம் என்ன?

'வீக்என்ட் எக்ஸ்பிரஸ்' இராணுவ ஆய்வாளர் எழுதிய கட்டுரையொன்றில், 'எவ்வளவு காலத்துக்கு விமானப்படை, விமானங்களை இழந்து கொண்டிருக்கப் போகிறது என்பதே மிகப் பெரிய கேள்வியாக உருவெடுத்துள்ளது. இழக்கப்பட்ட விமானத்திற்கு மாற்றாக வேறு விமானம் அவ்விடத்தை நிரப்பலாம்; ஆனால் அனுபவம் வாய்ந்த விமானிகளை அவ்வாறு பெறமுடியுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார் அவர், 'விமானப்படை முன்னரைப் போன்று செயற்பட முடியாது செயலிழந்து போயுள்ளது' எனவும் கூறியுள்ளார்.

சிறிலங்காவின் விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள், உலங்குவானூர்திகள் தொடராக சுட்டு வீழ்த்தப்பட்டு வருவது சிறிலங்காவின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் கொழும்பின் பாதுகாப்புப்பற்றியும், அரசியல் ஸ்திரத்தன்மை பற்றியும் கூட கேள்வி எழுகிறது.

நாட்டை 17 வருட காலமாக கட்டி ஆண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறளயை, "நாங்கள் தருவித்த விமானங்கள் இன்று கடலுக்குள் காணப்படுகின்றன" என்று சொல்லி அழவைத்திருக்கிறது.

### MI-17 ரக ஹெலிகொப்டர்

வகை: போக்குவரத்து, விநியோகப் பணிகளில் ஈடுபடுபவை

உபகரணங்களுடன் வெற்று எடை: 7200 கி.கிராம்

வெளிப்புறச்சுமை (கயிற்றில் தொங்கல்): 3000 கி.கிராம்

வழமையாக தரையிறங்கும், மேலெழும் எடை: 11100 கி.கிராம்

ஆக்கூடிய தரையிறங்கும் மேலெழும்பும் எடை: 13000 கி.கிராம்

வேகம்: மணிக்கு 155 மைல்

வானில் அசையாது நிற்கக்கூடிய உயரம்: 1160 மீற்றர்

ஆக்கூடிய எரிபொருளுடன் 5 வீதம் சேம இருப்புடன் பறக்கக்கூடியசெல்லக்கூடிய தொலைவு: 425 கி.மீற்றர்

மேலதிக எரிபொருளுடன் தொலைவு: 950 கி.மீற்றர்

கொண்டு செல்லக்கூடிய எரிபொருள்: 1770 லீற்றர்

எரிபொருள் வைப்பிடம்: பயணிகள் அறையின் இருபுறம்

பயணிகள்: 28 பேர்

போர்த்தளபாடம்: 23 மில்லி மீற்றர் பீரங்கிகள்



MI-17 ரக ஹெலிகொப்டர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "பெண்" ஆய்வுகளும் அதன் தேவைகளும்

**எமது வரலாற்றில் பெண்ணின் நிலை பற்றிய, பெண்ணின் வெவ்வேறு பரிமாணங்கள் பற்றிய ஆய்வும் முக்கியமானதாகும்.**

எந்தவொரு நாட்டுக்கும் அந்தந்த நாடு சார்ந்த தனித்துவமான அரசியல், பொருளாதார சமூக வாழ்வு காணப்படுவதை இலக்கிய வரலாற்று ரீதியாகவும் அரசியல் வரலாற்று மூலகங்களில் இருந்தும் நாம் அறிந்துகொள்ளலாம். நாட்டின் அமைவிடம், நாடு அமைந்துள்ள இயற்கைச் சூழ்நிலை, தட்பவெட்பநிலை, அங்கு வாழும் மக்கள், அவர்கள் பேசும் மொழி, அவர்களது இனம் என்பவற்றுக்கு ஏற்ப அந்தந்த நாட்டு மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் என்பன வேறுபடும். ஒரே நாட்டிலே கூட அந்நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வாழும் மக்களிடையே இன, மொழி, மத வேறுபாடு காரணமாக இத்தகைய வேறுபாடுகள் காணப்படும். "புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கமையக் காலமாறுபாடு காரணமாகவும், அரசியல் மாற்றங்களினாலும், விரைவாக முன்னேறி வரும் அறிவியல் தொழில்நுட்பம் காரணமாகவும், எத்தனையோ மாற்றங்களும் வளர்ச்சிப் போக்குகளும் சமூகம் சார்ந்த நடைமுறைகளில் ஏற்பட்டு வருகின்றன.

சமூக அசைவியக்கத்தின் தொடர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் வெவ்வேறு வழிகளில் துணையாகிறாள் என்ற நிலையில் எந்தவொரு சமூகத்திலும் பெண்ணானவள் முக்கியம் பெறுகிறாள். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று பெண்ணின் ஏழு பருவங்களை வரையறை செய்யும் இலக்கியங்களிலாகட்டும், சிறுமியாக, மகளாக, மனைவியாக, தாயாக, விதவையாக, கணவனால் கைவிடப்பட்டவளாக, விவாகரத்துப் பெற்றவளாக என்று நாம் அன்றாடம் எமது வாழ்க்கை அனுபவத்தில் காண்கின்ற பெண்களாகட்டும் இந்த நிலைகள் யாவற்றிலும் பெண்ணாக இருத்தல் காரணமாக நாளாந்தம் எத்தனையோ துன்பங்களும் துயரங்களும் அவளோடு தொடர்ந்து கொண்டே வருகின்றன. வாழ்ந்து



கொண்டிருக்கின்ற, வாழவேண்டிய நிலையிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் தமது வாழ்நிலையில் எத்தனையோ இடர்களையும், பல்வேறு சோதனைகளையும் தாண்ட வேண்டியிருப்பது பொதுவான நிலைதான். எனினும் தான் பிறந்த சமூகத்தில் 'பெண்ணாக இருத்தல்' காரணமாக அவள் வாழும் சமூகம், சமூக அமைப்புச் சார்ந்த பிரத்தியேகமான பண்பாட்டுக் கூறுகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்துள்ளமையை நாம் அனைவரும் அறிவோம்.

**ச. கலாநிதி**

சமூகத்தின் அங்கத்தவர்களாக உள்ள ஆண்களும் பெண்களும் இணைந்து நடந்தால்தான் நம்பிக்கையுள்ள, உறுதியான எதிர்காலத்தை நோக்கி முன்னேற முடியும். தந்தையாக, சகோதரனாக, கணவனாக, மகனாக. மாமனாக, நண்பனாக பெண்ணின் வாழ்வில் அவளது ஒவ்வொரு நிலையிலும் ஆணானவன் பங்கு கொள்கிறான். இதே போன்று ஆணின் வாழ்க்கையிலும், தோழியாக, தாயாக, மகளாக, சகோதரியாக, மனைவியாக, அண்ணியாக, மாமியாக என்று பெண்ணும் தன்னை இணைத்துக்கொள்கிறாள். குடும்பம் சார்ந்த உறவு நிலைகளிலும் சரி, சமூகம் சார்ந்த நடைமுறைகளிலும் சரி ஆணும் பெண்ணும் அன்பு செய்தும், ஆதரவு அளித்தும், உற்றவிடத்து உதவியும் வாழும் நிலை இயல்பானதாகும். ஆனால், சமூக நடைமுறைகளில், பண்பாட்டில், மத நம்பிக்கைகளில், சட்டரீதியான செயற்பாடுகளில், பெண்ணினது உடலியல் ரீதியான, உளவியல் ரீதியான, குடும்ப அமைப்பு ரீதியான, தொழில் ரீதியான நிலைகளில், பெண் தொடர்பான மரபுவழி நடைமுறைகளில், கொள்கைகளில், சமூக எதிர்பார்ப்புகளில் என்று பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் ஏராளம். ஆகவே பெண்ணினது பிரச்சினைகளும் இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய வழிகளும் பற்றி நாம் சிந்திக்கும் போது, பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் பொதுவானவை. எனினும் பிரச்சினைகளுக்குரிய காரணங்களும், பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளும் நாட்டுக்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் வித்தியாசப்படும் என்பதில் ஐயமில்லை.

உதாரணமாக இந்தியாவில் உள்ள பெண்களுக்கும், ஈழத்தில் உள்ள பெண்களுக்கும் பிரச்சினைகள் உண்டு. அதிலும் குறிப்பாக இந்தியாவில் உள்ள தமிழ்ப் பெண்களுக்கும் ஈழத்தில் உள்ள தமிழ்ப் பெண்களுக்கும் பிரச்சினைகள் உண்டு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ஆனால், அந்தப் பிரச்சினைகளுக்கான காரணங்களில் வேறுபாடு உண்டு. திருமணமானதும் கணவனின் வீட்டில் வாழ்வது இந்திய மரபு. திருமணமானதும், பெண் வீட்டில் கணவன் வாழ்வது ஈழத்து மரபு. (கூட்டுக் குடும்ப அமைப்பும் தனிக்குடித்தனமும் இருநாட்டிலும் உண்டு) தாய்மாமனைத் திருமணம் செய்தல், சீதனப் பொருட்களாக தளபாடங்கள், எவர் சில்வர் பொருட்கள், ஸ்கூட்டர் போன்றவற்றை கொடுத்தல், சீமந்தம், வளைகாப்பு போன்ற சடங்குகள் செய்தல் திருமணம் தொடர்பான இந்திய நடைமுறைகள். இந்த நடைமுறைகள் ஈழத்தில் இல்லை. இந்தியாவில் திருமணம் செய்த பின்னர் கணவன் வீட்டில் வாழ்வதனால்தான் வாயு அடுப்பு வெடித்து சாவடையும் மருமகளின் பரிதாப நிலைகளும் மாமியார் கொடுமை பற்றிய தகவல்களும் கூடுதலாக வருகின்றன. ஈழத்தில் மாமியார் கொடுமையும், மருமகளின் சாவுகளும் இல்லாமல் இல்லை. ஆனால் இவற்றுக்கான காரணங்களில் வேறுபாடு உண்டு. இதேபோன்று உணவு, உடை போன்ற விடயங்களிலும் வேறுபாடு உண்டு.

ஒருவனுக்கு ஒருத்தியையும், ஒருத்திக்கு ஒருவனையும் வரையறை செய்து தமிழ்ப் பண்பாட்டில் வாழும் பெண்களுக்கும், இந்த வரையறையற்ற அல்லது இந்த வரையறையை இறுக்கமாகப் பேணாத சமூகமொன்றில் வாழும் பெண்களுக்கும் இடையில், அவர்களின் பிரச்சினைகளுக்கிடையிலும் நிறைய வேறுபாடு காணப்படுகின்றது. பிரச்சினைகளுக்கான காரணகாரியங்களில் வேறுபாடு காணப்படுவதைப் போன்று அவற்றுக்கான தீர்வுகளிலும் வித்தியாசமான நிலை காணப்படும்.

எனவே ஈழத்தில் உள்ள பெண்களுக்கான அனைத்துப் பிரச்சினைகளையும் எடுத்து நோக்கும் போது குடும்பம் சார்ந்த, சமூகம் சார்ந்த, தொழில் ரீதியான, உளவியல் ரீதியான, உடலியல் ரீதியான என்ற அனைத்து நிலைகளிலும் எமது மண்சார்ந்த மரபுகளின் அடிப்படையில் அமைந்த ஆய்வு அவசியமானதாகும்.

ஈழத்தில் பெண்ணாக இருத்தல் காரணமாக ஏற்படும் பிரச்சனைகளுக்கான தீர்வை முன்னெடுக்கும் போது அந்தப் பிரச்சனைகளுக்கான மூலகாரணங்களை இனங்காண வேண்டும். இந்த இனங்காணும் முயற்சி சரியாக இருந்தால்தான் அவற்றுக்கான தீர்வுகளும் சரியாக அமையும்.



எமது தாய்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நாம் ஈழத்தமிழர் வரலாற்றில் மிக முக்கியமான கால கட்டம் ஒன்றில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இங்கு நடக்கும் விடுதலைப் போராட்டம் பல்வேறு துறைகளிலும் புதிய வரலாற்றை தொடக்கி வைத்துள்ளது. இத்தகைய முக்கியமான காலகட்டத்தின் ஒரு திருப்புமுனையாக பெண்போராளிகளின் வீரமும் அவர்களின் செயற்பாடுகளும் அமைந்து காணப்படுகின்றன.

ஒரு சமூகத்தின் நிலையை ஆராய்வதற்கு சிறந்த வழிகளில் ஒன்று அந்த சமூகத்தில் பெண்ணின் நிலையை ஆராய்வதாகும் என்பதற்கமைய எமது வரலாற்றில் பெண்ணின் நிலை பற்றிய வெவ்வேறு பரிமாணங்கள் பற்றிய ஆய்வும் முக்கியமானதாகும்.

வரலாற்றினடிப்படையில் அரசியல் சார்ந்த, சமூகம் சார்ந்த உண்மையான ஆய்வு எவ்வளவு அவசியமானதோ அதே போன்றுதான் பெண் சார்ந்த ஆய்வுகளும் முக்கியமானதாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விழித்தெழுவோம்!

உரிமை என்பது மனிதனுக்கு பொதுவானது. "ஆணும் பெண்ணும் நிகரென கொள்வதால் அறிவிலோங்கி இவ் வையம் தழைக்கும்" என்றான் மகாகவி பாரதி. ஆனால் உண்மையில் நடப்பது என்ன? உரிமையற்று சமூக விலங்குகளுக்குள் சிறைப்பட்டு தனது உணர்வுகளே சிதைக்கப்பட்டு உயிர்ப்பை இழந்து கொண்டிருக்கின்றது பெண்ணினம்.

எந்த நாட்டில் பெண்மைக்கு மதிப்பும் பெருமையும் இருக்கின்றதோ அந்த நாடு முன்னேற்றம் அடைந்த நாடு. பெண்ணுக்கு சிறுமையும் இழிவும் கற்பிக்கும் நாடு அடிமை நாடு. வீட்டில் தொடங்கும் பெண்ணடிமையே நாட்டின் அரசியல் அடிமைத்தனத்திற்கும் வழிகோலுகின்றது. வீட்டில் தொடங்கும் பெண் விடுதலைதான் நாட்டின் அரசியல் விடுதலைக்கு கருவியாகின்றது.

எமது தமிழ் இனம் இதுவரை விட்டுச் சென்ற வரலாற்றுப் பதிவேடுகள் வீரத்திலும் அறிவிலும் சிறந்த பல மங்கையரை எமக்கு அறியத்தருகின்றன. தான் பெற்ற மகனையே போருக்கு அனுப்பி வைக்கின்ற புறநானூற்றுத் தாய், புலவர்கள் அவையை ஆட்டுவிக்கும் அறிவில் சிறந்த ஔவை, வாளெடுத்து போர்க்களம் புகுந்த அரச மங்கையர் - அது எமது முன்னோரின் தீரம். இன்று கூட புறநானூற்று வீரம் விஞ்சப்பட்டு ஓங்கி இருப்பதைக் காண்கின்றோம் தமிழீழத்தில்.

கற்பனையில் கண்டு களித்த வரலாற்றுப் பாத்திரங்களை கண்ணெதிரே நாம் தரிசிக்கின்றோம். அறிவும் ஆற்றலும் வாய்ந்த மாதர்கள் எம்மிடையே நடமாடுகின்றார்கள். இதை மறுக்க முடியாது. ஆனால் இவையெல்லாம் காலச் சுவடுகளில் அங்காங்கே சுடர்விடும் அணையாத தீபங்கள். பெரும்பான்மையான இடங்களை இன்னமும் இருட்டு மூடியே நிற்கிறது. ஒரு சிலர் சமுதாய வானில் தாரகைகளாக மின்ன, உலகம் அறியாமல், பிறர் உள்ளமும் அறியாமல் இரவும் பகலும் சமையலறையிலும், வயல்களிலும், தொழிற்சாலைகளிலும், உழைத்து அலுத்து ஓய்ந்து மடியும் பல பெண்களை நமது தமிழ் இனம் கொண்டுள்ளது என்பதை நாம் மறுக்கக்கூடாது.

எமது மண் இன்று அந்நியரின் ஆக்கிரமிப்பில் கிடந்து தவிக்கின்றது. வீட்டு வேலிக்கு நடப்பட்ட கதியால் சற்று அசைந்தாலே ஆக்ரோசக் கூச்சல் போடும் நாம், எமது தேசமே ஆக்கிரமிக்கப்படும் போது பார்த்துக்கொண்டு சும்மா இருக்கின்றோம். அந்நியரின் சுவடுகள் ஒவ்வொரு தமிழீழ ஆணையும், பெண்ணையும் தொட்டு ஸ்பரிசித்த பின்புதான் நாம் கிளர்ந்தெழப் போகின்றோமா? தமிழீழ மண்ணில் பெண் மட்டுமல்ல ஆண் கூட அடிமைத்தனத்துக்குட்பட்டே இருக்கின்றான். இப்போதைய எமது தேவை ஆண், பெண் வேறுபாடின்றி எமது தேசத்தை மீட்பதுதான். இது காலத்தின் நிர்ப்பந்தம்.

சகோதரிகளே! இப்போது தமிழீழ மண்ணில் விடுதலைக் காற்று வீசுகின்றது. சுதந்திர தாகம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இது ஒரு வரலாற்றுக் காலம்; இக் காலத்தில் நாம் வாழ்ந்தோம். தமிழீழ வரலாற்றின் பொற்காலத்தை கண்ணெதிரே கண்டுகளித்தோம் என்பதே எமக்குப் பெருமை தருகின்றது. ஆக்கிரமிப்புக்குட்பட்டு வீடு வாசல் இழந்து, பாசமிக்க கண்மணிகளை, உறவினர்களை இழந்த பின்பும் கூட நாம் எமது உயிர்ப்பை இழந்து விடவில்லை. விரக்தியின் விளிம்பில் இருந்தாலும் கூட வாழும் ஆசை எம்மை விட்டுப் போகவில்லை. இந்த உயிர்ப்பு தான் எம்மை, எமது அடையாளங்களை எமது இனத்தின் தனித்துவத்தை இன்னமும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது. இதற்காக தமிழீழ தேசத்தில் வாழும் ஒவ்வொருவரும் நன்றிக்குரியவர்கள்தான். ஆனாலும் அந்நியரை எதிர்க்கும் மனம் மட்டும் ஏன் உங்களுக்கு இன்னமும் வரவில்லை. இந்நிலை மாற்றப்பட வேண்டும். ஏனென்றால் விரும்பியோ விரும்பாமலோ தமிழீழத்தின் ஒவ்வொரு பிரஜையும் போராட்டத்தில் தானாகவே இணையும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது காலத்தெளிவு. இது காலத்தின் நிர்ப்பந்தம். எனவே சகோதரிகளே! அனைவரும் ஒன்று திரண்டு உங்களது பங்களிப்பைச் செலுத்துங்கள். மண் விடுதலையுடன் பெண்விடுதலையும் பெற்ற சுதந்திர தமிழீழமாக எமது மண் மிளிர உங்கள் ஒவ்வொருவரின் ஆதரவும் தேவை.

**"பெண்ணுக்கு விடுதலை நீரில்லை என்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"**

விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்து நிகரற்ற சாதனைகளைப் படைத்துவரும் பெண்போராளிகளின் வீரம் வெளிக்கொணரப்பட வேண்டும். அத்துடன் போரினால் ஏற்பட்ட அனர்த்தங்களின் விளைவாக அகதியாய், அநாதையாய், விதவையாய், அங்கவீனமுற்றவளாய், கணவனால் கைவிடப்பட்டவளாய், வெளிநாடுகளுக்குச் சென்று வெவ்வேறு வகையான துயரங்களுக்கு உள்ளாகுபவளாய், வீட்டுப் பொறுப்புகளையும் தானே தாங்கி தொழிலையும் செய்யவேண்டிய நிலையிலுள்ளவளாய், சுயதொழில் செய்பவளாய், நாளாந்த கூலிக்கு செல்பவளாய், உயரதிகாரியாய், எழுத்தாளர்களாய் குடும்பப் பெண்ணாய், திருமணமாகாதவளாய் என்று நாம் தினசரி நடைமுறையில் சந்திக்கும் எமது நாட்டுப் பெண்களின் எத்தனையோ பிரச்சினைகளை, வளர்ச்சிகளை, பின்னடைவுகளை, வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றங்களை, மாற்றமின்மைகளை ஆராய வேண்டும்.

பெண்ணினது வளர்ச்சியை, வளர்ச்சிக்குத் தடைகளாக உள்ளவற்றை, பெண்ணினது தளைநீக்கத்தை, சமூக மரபுகளில் ஏற்பட வேண்டிய நெகிழ்ச்சிப் போக்கை, சமுதாய மரபுகளில் காணப்படும் குறைபாட்டை, இக்குறைபாடுகளின் நிவர்த்தியை எடுத்தியம்பும் இலக்கிய வடிவங்கள் ஈழத்தில் குறைவாகவே உள்ளன. பெண் எழுத்தாளர்களது தொகையும் குறைந்தளவே உள்ள எமது நாட்டில் முன்னேறி வரும் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கமைய ஆய்வுகளும் வளர வேண்டிய தேவை உள்ளது. காலத்தின் பதிவுகளாக, தடயங்களாக எமது மண்ணையும் பெண்ணையும் ஆதாரமாகக் கொண்ட ஆக்கங்களின் அவசியம் உணரப்படவேண்டும். அதே நேரம் நாம் அகவளர்ச்சி ரீதியிலும் எமக்குள்ளேயே வளர்ச்சியடைந்தால்தான் இந்த ஆய்வுகளின் தேடலும், ஆய்வுக்கான தீர்வுகளும் வெற்றியளிக்கும். உள்ள வளர்ச்சியும் சிந்தனை விரிவும் கூடிய அகரீதியான உணர்வு மேலோங்கும் போது பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் சாத்தியமாகும்.

"நன்றே செய்க அதை
இன்றே செய்க."

★★

www.tamilarangam.net



இமல்டா!

ஓ என் இனிய தோழி! தமிழீழ விடுதலைப் போரில் உதிர்ந்து விட்ட புனித மலர்களில் ஒன்றாக நீயும் இணைந்து விட்டாயா? மலரவிருக்கும் தமிழீழம் எப்படியெல்லாம் இருக்கவேண்டுமெனக் கனவு கண்டாய். உன் ஆசையெல்லாம் நிறைவேற முன்னரே உன் கனவுகளிற்குக் கரும்புள்ளி வைத்து உன்னை எம்மிடமிருந்து பிரித்த அந்தப் பாதகர்கள் யார்?

# உன் மரணம் எம்மில் புது மூச்சாய்..!

எமது இனத்தின் எதிரிகளான இனவெறி பிடித்த சிங்களக் கைக்கூலி இராணுவத்தினரா? அப்படியானால் கூட எமது மனம் கொஞ்சம் ஆறுதல் அடைந்திருக்கும் - களத்தில் எதிரிகளுடன் மோதி நீ கொண்ட இலட்சியத்திற்காக உன்னைத் தியாகம் செய்திருக்கின்றாய் என்று. ஆனால் எமது இரட்சகர்கள் என்ற போர்வையில் எமது மண்ணில் காலடி வைத்தவர்களின் துரோகக் கரங்களினால் உன் கதை முடிக்கப் பட்டுவிட்டது என்பதை எண்ணும் போது என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை. உனது இறப்பில் உலகின் நான்காவது பெரிய இராணுவம் என்னதான் திருப்தியைக் கண்டதோ?

என்றும் எமது போராட்டத்திற்காகக் குரல் கொடுக்கும் தமிழகத்தைக் கொண்டது இந்தியா - உலகின் நான்காவது பெரிய இராணுவப் படை கொண்டது இந்தியா - கண்ணியமான வீரர்களைக் கொண்டது இந்தியா என்றெல்லாம் நாம் அறிந்திருந்தோம். கடைசி விஷயம் எமது தவறான கணிப்பீடு என்பதைக் காலம் இப்போது எமக்கு உணர்த்தியிருக்கிறது.

உன் மரணம் ஒன்றை மட்டும் எமக்குப் புலப்படுத்துகின்றது. "நேர்மையான எதிரியை விட வஞ்சகமான நண்பர்கள் ஆபத்தானவர்கள்."

உன் நினைவுகளை என்னால் மறக்க முடியுமா? கண்ணீரை கட்டுப்படுத்த முடியவில்லை. ஒரு போராளி இறுகிய மனமுடையவளாக இருக்க வேண்டும். அப்போது தான் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளும் சக்தியை அவள் பெற்றிருப்பாள் என்று சிலர் நம்புகின்றார்கள். உண்மையில் மென்மையான இதயத்தைக் கொண்டவர்கள்தான் போராளிகள் எனப்படுவோர். தனது இனத்திற்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டும் அதைச் சகித்துக்கொள்ளும் கடினமான மனது இல்லாதவர்களே போராளிகளாகிறார்கள். மென்மையான மனதைக் கொண்டவர்கள் என்பதாலேயே நாம் எல்லாம் இணைந்து கொண்டோம்.

"பயிற்சியை முடித்துக் கொண்டு செல்லும் எம்மை சமூகம் சாதாரண பெண்களாகப் பார்ப்பது கிடையாது. இப்படியான இழிநிலையைப் போக்கி எமது இலட்சியப் போராட்டத்தின் பங்காளிகளாகத் தமிழீழப் பெண்கள் அனைவரையுமே மாற்ற வேண்டும். இது படிப்படியாகத் தான் சாத்தியமாகும். ஆனால் எப்படியும் இதை நடைமுறையில் நடத்திக்காட்ட வேண்டும்" என்றெல்லாம் அடிக்கடி கூறுவாயே. அதையெல்லாம் எண்ணிப் பார்க்கிறேன். உன் கனவுகள் நிஜமாகி வருகையில் நீ...

அகிம்சைப் போராட்டங்கள் மூலம் விடுதலை அடைந்து இன்று மகத்துவத்தை மறந்திருக்கும் பாரத நாட்டிற்கே அகிம்சைப் போராட்டத்தின் வலிமையை உணர்த்தியிருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வலிமையை உணர்த்தியிருக்கிறோம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிகழ்ந்த அத்தனை ஊர்வலங்களிலும் மறியல் போராட்டங்களிலும் தமிழீழப் பெண்களின் எழுச்சிமிகு பங்களிப்பைக் கண்டு உலகமே வியக்கிறது. உலகத்திலேயே தண்ணீர் கூட குடிக்காமல் உண்ணா நோன்பிருந்து தியாகியான முதல் பெண் பூபதி கணபதிப்பிள்ளை என்ற தமிழீழப் போராளிதான். அதே போல் வீரத்திலும் கூட (ஆயுதப் போராட்டத்தில்) நாம் யாருக்கும் சளைத்தவர்கள் இல்லை என்பதை வரலாறாக்கி விட்டோம்.

முறத்தால் புலியை விரட்டியவள் தமிழ்ப் பெண் என்று புறநானூறு கூறுகிறது. அது நடந்ததோ என்னவோ ஆனால் புலியாகவே மாறித் தம்மை எதிர்ப்பவர்களை புறமுதுகு காட்டி ஓடவைத்தவர்கள் தமிழீழப்

**லெப். இமெல்டா**
அமிர்தநாதன் மரியகோசி
மணிப்புரி - கொழும்புத்துறை
06-05-63 - 13-03-88
வேனாவில்லில் இந்தியப் படை சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலில் சயனைட் அருந்தி வீரமரணம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெண்கள் என்று புதிய காவியம் படைக்கப்படுகின்றது.

உன்னை நினைக்கையில் எமது நினைவுக்கு வருவது உனது சிரிப்புத் தான். நீ சிரிக்கத் தொடங்கினால் தொடர்ச்சியாகவே சிரிப்பாய். எளிதில் நிறுத்த மாட்டாய். இதற்காகவே 'ஜெனரேற்றர்' என்று அழைப்போம் உன்னை. அந்த 'ஜெனரேற்



றர்' சிரிப்பை பார்க்கவோ கேட்கவோ முடியாத இடத்திற்கு போய் விட்டாயே நீ.

பள்ளிச் சீருடையுடன் வீட்டிலிருந்து புறப்பட்ட உனது வரலாறு இராணுவச் சீருடையுடன் முடிந்து விட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்காளியாக வேண்டும் என்ற ஆவலுடன் யாழ்ப்பாணத்தின் குருநகர்ப் பகுதியில் மத்தியதர குடும்பத்திலிருந்து வந்து இயக்கத்தில் இணைந்து கொண்டவள் நீ. நீயும் நானும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒருவர் வீட்டில் தான் முதன் முதலில் அறிமுகமானோம். எங்களைப் போலவே வேறு சில பெண்களும் அங்கே வந்து எம்முடன் இணைந்தனர். விரைவில் பயிற்சிக்காகக் கூட்டிச் செல்லப்படுவோம் என்ற செய்தி கிட்டியது. இது எமது மகிழ்ச்சியை அதிகரித்தது.

"பயிற்சி பெற்றுத் தமிழீழத்தில் ஆயுதம் தாங்கிப் போராடப் புறப்பட்ட முதல் பெண் போராளிகளாகத் திகழ்வோம் - நாம் தமிழீழத்தை மீட்டெடுத்து எமது வருங்காலச் சந்ததியினர் தலை நிமிர்ந்து வாழ வழி சமைப்போம்." இப்படியான இனிமையான கனவுகள் உடன் பயிற்சி முகாம் நோக்கிப் புறப்பட்டோம். தமிழீழ விடுதலைக்கான இயக்கமென்று எண்ணிப் பெருமைப்பட்டு நாம் இணைந்த இயக்கத்தின் சகோதரிகள் விடுதலைப் பாதையிலிருந்து விலகியிருக்கின்றார்கள். எமது எதிரியைத் தவறாக இனம் காட்டுகிறார்கள் என்ற உண்மை முகாம்களிற்கு வந்த பின்புதான் எமக்குப் புரிந்தது. ஆம்! நாம் இணைந்து கொண்டது விடுதலைப் புலிகள் அமைப்பில் அல்ல. நமக்குத் தெரியாமலே சமூக விரோதக் கும்பல் ஒன்றில் சேர்ந்து விட்டோம். பயிற்சி முகாமில் தமது எதிரிகள் விடுதலைப் புலிகள் என்றே எமக்குப் போதித்தார்கள். தமிழீழ விடுதலையைத் தவிர ஏனைய விடயங்களில் தான் கூடிய அக்கறை செலுத்துகிறார்கள் என்ற உண்மை எமக்குத் தெரியவந்ததும் எமக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. ஆனால் நாங்கள் தமிழீழப் போராட்டத்தின் பங்காளிகளாக வேண்டுமாயின் ஒரு உண்மையான, தெளிவான தலைமையின் கீழ் தான் அணிதிரள வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தோம். அதனால் அந்த அமைப்பிலிருந்து விலகி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகொண்டோம். எமது நிலையை விளக்கினோம்.

www.tamilarangam.net

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவருடன் நாம் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஏற்கனவே இடம் பெற்ற போராட்ட அனுகுமுறைகள் சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு சம்பந்தமாகவும் எமக்கிருந்த சில சந்தேகங்களைக் கேட்டோம். அவரும் விளக்கமாகப் பதிலளித்தார். "இந்தப் போராட்டத்தில் நீங்கள் கஸ்டத்தையும் பட்டினியையும்தான் சந்திக்க வேண்டியிருக்கும். பயிற்சிகளோ மிகக் கடுமையாக இருக்கும். ஆனால் இவையெல்லாம் எமது எதிர்காலச் சந்ததியினரின் நலனிற்காகவே என்பதை நாம் உறுதியாக நம்பினால் இவை எல்லாம் ஓர் அற்ப விசயமாகவே இருக்கும். எதற்கும் சிந்தித்து முடிவெடுங்கள். எங்களைப் பொறுத்த வரை விடுதலைக்காகப் புறப்பட்ட எந்தப் போராளியையும் நடுத்தெருவில் விட நாம் தயாரில்லை" என்று கூறினார். அத்துடன் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களில் பெண்கள் சாதித்த சாதனைகள் என்னென்ன வென்பதையும் எடுத்துரைத்தார்.

தலைவருடனான சந்திப்பின் பின் நாம் புது உற்சாகம் மிகுந்தவர்களாகக் காணப்பட்டோம். "நாளை கூறும் முடிவும் இதுவாகத்தானிருக்கும். அதை இன்றே கூறுகிறோம். எந்தக் கஸ்டத்தையும் சந்திக்க நாம் தயாராகவே இருக்கின்றோம்" என்று உறுதியாகக் கூறினோம்.

இதை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமில் தான் எத்தனை விதமான அனுபவங்கள். அந்த இனிமையான நாட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கள் எமது நினைவில் என்றும் பசுமையானவையே! பயிற்சியின்போது இராணுவ ரீதியாக ஆண்களிற்கு நாங்கள் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தோம். முகாமில் குறும்புச் செய்கைகள் மூலம் நீ இருக்கும் இடத்தையே கலகலப்பாக்கி விடுவாய். முகாமில் எம்மிடையே சின்னச் சின்னப் பிரச்சினைகள் வரும்போது அங்கே சமரசம் செய்வதற்கு நீ தோன்றி விடுவாய். எமது முகாமிற்குத் தேவையான சாப்பாடு மற்றும் பொருட்கள் எமது முகாம் அமைந்திருந்த ஒரு குறிப்பிட்ட இடத்தை வாகனத்தின் மூலம் வந்தடையும். அங்கிருந்து அவற்றை நாமே சுமந்து செல்லவேண்டும். அப்போது எல்லாம் எமது வேலையில் கடினம் தெரியாமலிருப்பதற்காகவே நீ “ஜோக்” அடித்துக்கொண்டே வருவாய். உனது கலகலப்பான போக்கினால் எமது வேலை கடினமானதாகத் தோன்றாது.

ஒரு முறை எம்மால் வெட்டப்பட்ட சுமார் 20 அடி ஆழமுள்ள கிடங்குக்குக் கீழே இருந்த வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட கல்லொன்றை வெளியே எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இது மிகவும் பெரியது. பாரமானது. “இதைத் தூக்க நான் எனது பையன்களை அனுப்புகிறேன்.” என பொன்னம்மான் சொல்லவே “இது எம்மால் முடியும்” என நீ பொன்னம்மானிடம் சொன்னாய். “இல்லை முடியாது. இதற்குப் பையன்கள்தான் சரி” என பொன்னம்மான் கூறியபோது அவர் எம்மைச் சோதிக்கத்தான் கூறுகிறார் என்று தெரிந்து இதை ஒரு சவாலாகவே ஏற்று நாங்கள் அதை வெளியே கட்டி இழுத்தெடுத்தோம். அப்போது எமக்கு ஏற்பட்ட பூரிப்பு! - ஒரு குழந்தையைப் போல் பொன்னம்மானின் முன்னால் “எப்படியம்மான் எங்கட வேலை?” என்று குதூகலித்து ஆர்ப்பரித்தாயே அது



www.tamilarangam.net

# நெஞ்சை நிமிர்த்து!

பெண்ணே உனக்குப் பெயரென்ன? சொல் இந்த
மண்ணோர் விரும்பும் மருக்கொழுந்தா? மல்லிகையா?
ஏழிரண்டாண் டெய்தி இருப்பாயா? நீ சுற்றும்
சீலைத் துணிக்கா உனக்காஇங் காண்டதிகம்?
பூவாடை வீசநீ பூத்த பருவமிந்நாள்
பாவாடை என்றொருபன் னாடையா உன்னாடை?
பூவிட்ட மாதிரியாய்ப் புள்ளி கிழியல்கள்
மேவும் பழையவொரு மேற்சட்டை சீருடையா?

ஏழ்மையும் நீயும் இரட்டைகளா? இந்நாட்டார்
தாழ்வெல்லாம் உன்றன் தலைமேல் விடிந்ததுவோ?
கூடா வறுமையின் கொள்ளிக்கண் பட்டதுவோ?
ஆள்வோர் கொடுமைக் கமைந்த குறியீடோ?
ஏனிந்தக் கோலம்? எவர்பெற்ற புண்ணியமோ?
கூனிக் குறுகிநீ கும்பிட்டுக் கையேந்தல்
ஊழென்பார் கண்கெட்(டு) உழன்று திரியட்டும்!
வாழ்வெல்லாம் இப்படித்தான் வாழ்வாயோ? உன்பொருட்டாய்
பேருலகம் வெட்கிப் பிடிமண்ணாய்ப் போகட்டும்!

ஈரவிழி மாற்றி எரியாய் எழுவாய்!
அரிய இயற்கைஇங் கார்க்கும் பொதுவாம்!
உரிமையோ டாட்சி உழைப்போர்க்குண் டாகுமே!

வாழும் உரிமைக்காய் கையிற் கலந்தூக்கு!
கஞ்சி இரக்கும் கலத்தைத் தொலைவிலெறி!
நெஞ்சை நிமிர்த்து; நெருப்பாகிப் போராடு!
கட்டறுக்க வேண்டின்நீ போராடு! போமகளே!
வெட்டவெளி போலும் விடுதலையை வென்றெடுப்பாய்!
நாளைக்கு நீதானே நாட்டின் அரசியென்பேன்!
ஏழை உருவாக இயன்ற சுரண்டலெனும்
சூழ்ச்சி அனைத்தும் தொலைத்திடவே வேண்டும்!
இயற்கை வளமெல்லாம் இங்குச் சிலரே
முயற்சியின்றித் துய்த்தல் முறையாமோ? மற்றுனக்கு
கண்ணீரும் உந்தக் கலவோடும் கந்தையுந்தான்
மண்ணாள்வோர் தந்த வரிசையுள்ள நன்கொடையோ?

இல்லை; மகளே, இருநிலத்தில் உள்ளநலம்
எல்லாமே எல்லார்க்கும் என்பதன்றோ நன்முறையாம்
கல்விபெற வேண்டும்நீ காதல் செய்யவேண்டும்
பிள்ளைகளை யீன்று பெருமை யுறவேண்டும்
கண்ணைத் திறந்துமே கற்பனலை வீசிடுவாய்!
பெண்ணினத்தின் மேன்மை பிறரறியச் செய்திடுவாய்!
வாழும் உரிமைக்காய் வந்திங்கு போராடு!
நீஞாலகில் நிற்பாய் நிலைத்து!



*- பண்டிதர் பரந்தாமன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றும் என் நினைவில் உள்ளது.

முகாமில் ஒரு கடினமான உழைப்பாளியாய், ஒரு கலகலப்பான போராளியாய், ஒரு சிறந்த நடிகையாய், அருமையான சமையல்காரியாய், குறிதவறாது துப்பாக்கி சுடுவதில் தேர்ச்சி பெற்றவளாய் - இப்படிப் பல்வேறு வகையிலும் நீ முதன்மையானவளாகத் திகழ்ந்தாய். R.P.G (ராக்கட் லோஞ்சர்) பிரயோகிப்பதற்கு நீயும் நானுமே தெரிவு செய்யப்பட்டோம். இப்படியாக எமது பயிற்சிக்காலம் கழிந்தது. எமது நட்பும் உறுதியாக வளர்ந்தது. உனக்கு முன்னரே பயிற்சியை முடித்துக்கொண்டு களத்தில் நின்ற நான் மகிழ்ச்சியுடன் உன்னை வரவேற்றேன். ஆம்! இமல்டா வந்து விட்டாள். எமது முகாம் இனிக் கலகலப்பாகி விடும் என்ற மகிழ்ச்சியே எல்லோருக்கும்.

ஆனால் நீயும் நானும் பிரிய வேண்டிய கட்டம் வந்தது. ஏனெனில் துரதிருஸ்டவசமாக நான் ஆஸ்பத்திரியில் படுத்த படுக்கையாய் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.


ஆனாலும் மன்னாரிலே படையெடுத்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் பலரை பலியெடுத்த மாபெரும் தாக்குதலில் உனது திறமையைக் கேள்வியுற்று மகிழ்ச்சியுற்றேன்.

நான் செய்ய வேண்டிய வேலையையும் சேர்த்து இரட்டிப்புத் திறமையைக் காட்டி எதிரிகளைக் கலங்கவைத்தாய். உனது குழுவினரின் தாக்குலிற்கு ஈடுசெய்ய முடியாத சிங்கள இராணுவம் குண்டு வீச்சு விமானங்கள் மூலம் பாரிய குண்டுகளை வீசிப் பலத்த அழிவை உண்டாக்கி தனது கையாலாகாத் தனத்தைப் புலப்படுத்தியது.

அதன் பின் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இருந்த என்னை நீ வந்து சந்தித்தாய். "வசந்தி! நீ விரைவில் குணமடைந்து விடுவாய். ராக்கட் லோஞ்சருடன் என் வசந்தியைக் காணும் நாள் கிட்டடியில தான் உள்ளது. அப்போது தான் எனக்கும் உனக்கும் முறையான போட்டியுள்ளது." என்றெல்லாம் எனக்கு நம்பிக்கையூட்டுவாய். எங்கோ பிறந்தோம், எங்கோ வளர்ந்தோம், தமிழீழப் போராட்டத்தின் பெயரால் இணைந்தோம். ஆனால் இன்று ஒரே குடும்பம் போன்று அனைவரும் என் மீது பாசமழை பொழிகிறீர்களே என்று திக்குமுக்காடினேன்.

வடமராட்சியில் சிறிலங்கா இராணுவத்துடன் நிகழ்ந்த தாக்குதலிலும் உனது திறமையைப் பற்றி அனைவரும் என்னிடம் வந்து கூறுவார்கள். புதிதாகப் பயிற்சியாளர்களில் ஒருவராக நீயும் திகழ்கிறாய் என்றும் செய்தி கிட்டியது.

வந்தது ஒப்பந்தம், யாருக்காக இந்த ஒப்பந்தம்? இது எமது நலனிற்காகச் செய்யப்பட்டதல்ல என்பது தெளிவாகவே புரிந்தது எமக்கு. ஆயினும் இந்திய மக்கள் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையையும், அன்பையும் வெளிப்படுத்தும் முகமாக எமது போராளிகளின் மகத்தான தியாகங்களினாலும், இரத்தத்தாலும் பெறப்பட்ட ஆயுதங்களை இந்தியப் படையிடம் ஒப்படைக்க வேண்டியேற்பட்டது.



சிங்கள இனவாதப் பூதம் இவ்வொப்பந்தத்தை விழுங்கும் காலம் வெகுதூரத்திலில்லை என்று தலைவர் தீர்க்க தரிசனத்துடன் கூறினார். காலமும் இதை நிதர்சனமாக்கியது. இந்தியப் படையின் துரோகத்தனமும் அம்பலப்படுத்தப்பட்டது. நாம் மீண்டும் ஆயுதங்களை ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

**ஒரு தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்காக ஆயிரக்கணக்கான கறுப்புக் கொடிகளைப் பறக்க விடத் தயாரானோம்.**

இந்தியப் படையின் துரோகத்தனத்திற்கு எதிராக நீ ஒவ்வொரு தாக்குதலிலும் முன்னணியில் நின்று போராடினாய் எனக் கேள்விப்பட்டேன். நாம் பலவீனப்பட்டு விட்டோம் என்று இந்திய அரசு தப்புக்கணக்குப் போடுகிறது. எமது பலமே மக்கள் சக்திதான். தமிழீழத்தை மீட்டெடுக்கும் வரை சந்ததி சந்ததியாக நாம் போராடியே தீருவோம் என்பதைக் காலம் உணர்த்தும் என்றே எண்ணுகிறேன்.

ஆனாலும் என்னுயிர்த் தோழி! வன்னியில் நடந்த முற்றுகை ஒன்றில் உன்னை நாம் பறிகொடுத்து விட்டோம் என்ற வரக்கூடாத அந்தச் செய்தி வந்தே விட்டது. நான் அதிர்ந்து விட்டேன். இனி அந்த 'ஜெனரேற்றர்' சிரிப்பைக் கேட்கவே முடியாது. உனது குறும்புகளைக் காண முடியாது. ஆனால் உனது துப்பாக்கியின் ஓசை மட்டும் நிரந்தரமாக நின்று விடவில்லை. அது வேறொருவர் மூலம் முழங்கிக் கொண்டே உள்ளது. அதிலிருந்து முழங்கும் ஒவ்வொரு வேட்டும் "மலரும் தமிழீழம்! மலரும் தமிழீழம்!" என்றே ஒலிக்கிறது.

உனது ஆத்மா எனக்குள் ஒரு புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. நான் விரைவாகக் குணமாகி வருவதை என்னால் உணர முடிகிறது. இமல்டா! நீ விதைக்கப்பட்டு விட்டாய். இதோ! களத்தை நோக்கி ஆயிரமாயிரம் இமல்டாக்கள்! ஆம் விரைவில் அவர்களில் ஒருத்தியாய் நானும். அதுவரை காத்திருப்பாய் என் தோழி!

**- வசந்தி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



www.tamilarangam.net

தமிழீழத்திலிருந்து வெளிவரும் பெண்கள்
இரு மாத சஞ்சிகையான 'நாற்று' இதழுக்கு

**செல்வி பேபி வேலுப்பிள்ளை**

அவர்கள் வழங்கிய செவ்வியிலிருந்து...

# நேர்காணல்

**கலைத்துறையில் முழு ஈடுபாடு கொண்டு அதற்காகவே உங்களது நேரம் முழுவதையும் ஒதுக்கியிருக்கும் தாங்கள் கலையினூடாக எமது சமூகத்திற்குச் சொல்ல நினைப்பது எது? அதில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றுள்ளீர்கள்?**

எமது இனம் விடுதலைபெற வேண்டும். பெண்விடுதலையுடன் கூடிய தமிழீழ விடுதலையே நான் எடுத்துக்கொண்டிருக்கும் கருப்பொருள். இதற்காகவே முற்று முழுதாக என்னை அர்ப்பணித்திருக்கிறேன். போராட்ட நிகழ்வுகளை கலை வடிவத்தில் நாங்கள் வெளிப்படுத்துவதினூடாக போராட்ட உணர்வை ஊட்டமுடியும் என நினைக்கின்றேன். ஒரு போராளியால் ஊட்டமுடியாத உணர்வை நாம் கலைமூலம் சாதிக்கின்றோம். இது மட்டுமன்றி சமுதாயச் சீர்கேடுகளான குடிப்பழக்கம், பெண் அடக்குமுறை... போன்றவற்றை கருப்பொருளாக கொண்டு மக்களுக்கு புரியக்கூடிய விதத்தில் கலை வடிவங்களாகக் காட்டியிருக்கின்றோம்.

**பெண்ணியம் பற்றி உங்கள் கருத்து?**

நாம் பார்க்குமளவிற்கு பெண்ணடிமைத்தனம் இன்று ஓரளவு உடைந்துவிட்டது. படலைக்கு வெளியே வரத் தயங்கிய, பயந்த, வெட்கப்பட்ட பெண்கள் எல்லாம் இன்று எதிரியை விரட்டி அடிக்கின்ற அளவிற்கு, தைரியம் மிக்கவர்களாக மாறிவிட்டார்கள். ஆனாலும் கூட சமூக அடக்குமுறை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. கிராமப்புறப் பெண்களின் முன்னேற்றத்திற்கு எம்மாலான வகையில் பாடுபட வேண்டும். எல்லாப் பெண்களும் தங்களுடைய விடுதலையை தாமே பெற வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். இதன் மூலம் கணவனின் கொடுமைகளை, பெற்றோரின் கட்டுப்பாடுகளை, சமூக அடக்குமுறைகளை களைந்து எறிவதற்கு தம்மாலானவரை பாடுபடுவார்களேயானால் பெண்விடுதலையுடன் கூடிய சுதந்திர தாயகத்தை நாம் அடையும் நாள் வெகு தூரத்தில் இல்லை. அதே நேரத்தில் பெண் விடுதலை என்ற பெயரில் ஆண்களையே தூக்கி எறியும் பெண்ணியம் எமக்கு வேண்டாம்.

**திருமணம் என்ற அமைப்பு பெண் என்ற வகையில் அவளின் ஆளுமைகளை மழுங்கடிக்கும் என்று எண்ணுகின்றீர்களா?**

நிச்சயமாக அப்படியில்லை. உலகம் போற்றும் பல குடும்பத் தலைவிகளை வரலாறு நமக்கு காட்டியிருக்கின்றது. இன்று நாம் எமது கண்கூடாக பார்த்துக்கொண்டிருக்கின்றோம். புரிந்துணர்வுடன் கூடிய ஒரு கணவனின் உதவியுடன் ஒரு பெண், தான் தாண்டமுடியாது என்று நினைக்கும் எல்லைக் கோட்டையும் கடந்து சாதனை படைக்க முடியும். உலகம் போற்றும் பல உத்தமர்கள், மேதைகள் பின்னால் ஒரு சாதனைப் பெண் இருந்திருக்கின்றாள் என்பது வரலாறு எமக்குணர்த்தும் உண்மை. ஒரு ஆளுமையுடைய பெண்ணிற்கு கணவனின் அனுசரணை இருந்தால் இவ்வுலகில் எவ்வளவோ சாதிக்க முடியும். ஆனால் புரிந்துணர்வுடன் கூடிய கணவர்களை பெரும்பாலும் எமது சமூகம் கொண்டிருக்கவில்லை என்பதுதான் வருந்தத்தக்க உண்மை. ஆண் ஆதிக்க முறையை எமது சமூகம் பலமாகவே பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. பெண்களின் அறிவு வளர்ச்சியினூடாக இது மாற்றப்படும் போது எமது தமிழீழ பெண்கள் பல வியத்தகு சாதனைகளை படைக்க முடியும் என நம்புகின்றேன்.

**எமது சமூக அமைப்பில் ஒரு பெண்ணுக்குரிய சமூக அந்தஸ்து திருமணம் என்ற ஒன்றின் மூலம்தான் தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு பெண் தனது ஆளுமையின் பரிமாணங்களை மிக உயர்ந்தளவு வெளிப்படுத்தினாலும் கூட அவள் திருமணமாகாதவள் என்ற ஒரு காரணத்துக்காக ஒதுக்கி வைக்கப்படுவதை நாம் கண்கூடாக காண்கின்றோம் "திருமணம் என்ற ஒன்றின் மூலம்தான் பெண்மை பூரணத்துவமடைகிறது". எமது சமூகத்தில் மிக ஆழமாக வேரூன்றியிருக்கும் இக் கருதுகோள் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?**

திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு அங்கமே தவிர வாழ்க்கையே திருமணம் அல்ல. பெண்கள் குழந்தைகள் பெறவும், போகத்துக்கும் மட்டுமே உரியவர்கள் என்ற ஆண்நிலைச் சிந்தனைதான் எமது சமூகத்தின் இந்த நிலைப்பாட்டுக்குக் காரணம். எமது இன விருத்திக்கு கரு உற்பத்தி மிகவும்



அவசியம் என்பதை ஒத்துக்கொள்கின்றேன். ஆனால் அறிவற்ற ஆழுமை விருத்தியற்ற கரு எமது சமூகத்திற்கு தேவையற்றது. வெறும் பிள்ளை பெறும் இயந்திரங்களாக பெண்களைப் பார்க்கக்கூடாது. சமூகத்தின் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் சமூகத்தில், தனது தேசத்தில் அக்கறை இருக்க வேண்டும். பாலியல் உணர்வுகளிற்கு வடிகாலாக மட்டும்தான் ஒரு குடும்ப அமைப்பு தேவையெனில் அது எமக்கு அவசியம் இல்லை. தனது ஆளுமையை வெளிப்படுத்தவதற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பாடுபடும் உணர்வுகொண்ட ஒரு பெண்ணிற்கு தனது திருமணம் அந்த உணர்வுகளைச் சிதைக்கும் என்று கண்டால், எதை விடவேண்டும் என்ற தெளிவு பெண்ணிடமே விடப்பட வேண்டும். இந்தத் தெளிவு அவள் தீர்மானத்திலுள்ள தெளிவில் தங்கியிருக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கிறது. அவள் எந்தத் தவறுமே செய்யாத நிலையில் சமூக நிலைப்பாட்டிற்கு அஞ்சவே தேவையில்லை. திருமணம் செய்யாது ஒழுக்க நிலையில் நின்று அச்சமூக முன்னேற்றத்திற்கு சேவைசெய்த செல்விகள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். சமூக சேவையும் வேண்டும், அதற்கு தடை சொல்லாத அனுசரணையுடன் கூடிய கணவனும் வேண்டும் என்று அவள் விரும்பினால் அது அவளுக்கு ஒரு சாபக்கேடுதான். ஆனால் புரிந்துணர்வுடன் கூடிய கணவனைக் கொண்டுள்ள சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபடும் பெண்களும் எம்மிடையே உண்டு. ஆனால் எண்ணிக்கை மிகச் சிறிதளவுதான்.

**கலைத்துறையில் ஈடுபடும் பெண்களை சமூக அந்தஸ்து அற்றவர்கள் என்ற வகையில் ஒதுக்கிவைக்கும் தன்மை எமது சமூகத்தில் இன்னமும் இருக்கிறது. பெண் என்ற வகையில் இந்த நிலைப்பாடு உங்களை எவ்வளவு தூரம் பாதிக்கிறது. கலைத்துறையிலும் ஈடுபட்டு சிறந்த குடும்பப்பெண்ணாகவும் இருக்க ஒரு பெண்ணால் முடியாது என நினைக்கின்றீர்களா?**


கலை தெய்வீகமானது, புனிதமானது. ஆனால் கலை வடிவங்களில் ஒன்றாக கருதப்படும் சினிமாதான் (தென்னிந்திய சினிமா தான் முக்கியமாக) இத்தகைய ஒரு உணர்வு மிக ஆழமாக எமது சமூகத்தில் வேரூன்றுவதற்கு ஒரு காரணம் என நினைக்கின்றேன். கலைத்துறையில் உள்ள ஒரு சிலரின் நடத்தை முழு கலைச் சமூகத்தையும் பாதிப்பது தவிர்க்க முடியாதுதான். ஒழுக்கமும் கட்டுப்பாடும் சிதையும்போது கலைத்துறையில் மட்டுமல்ல எந்தத் துறையிலுமே பெண் மதிக்கப்பட முடியாது. என்னை நான் நல்லவள், ஒழுக்கமானவள் என்று பறைசாற்றுவதன் மூலம் சமூக அந்தஸ்தை பெற்றுவிட முடியுமா?

**கலைத்துறைக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்திருக்கும் உங்களது இறுதி இலட்சியம் என்ன?**

நான் இறந்த பின்பு எனது கண்களை தமிழீழ மக்களுக்கு அர்ப்பணிக்கவும், எனது உடலை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு வழங்கவும் முடிவு செய்திருக்கின்றேன். பெண் விடுதலையுடன் கூடிய தாயக மீட்புக்கு முற்றுமுழுதாக என்னை அர்ப்பணித்துள்ள நான் கலைத்துறையினூடாக உயிருடன் உள்ள வரை எனது நோக்கத்தை செயல்படுத்துவேன். இறந்த பின்பு எனது உடல் இம்மண்ணுக்குப் பயனுள்ள வகையில் அமைய வேண்டும் என்பதே எனது விருப்பம்.

★

www.tamilarangam.net




## TAMIL EXODUS AND BEYOND
## (தமிழர்கள் இடப்பெயர்வும் அதற்கு அப்பாலும்)

முன்னைநாள் B.B.C சிங்கள சேவையின் பொறுப்பாளராகவும், பின்பு சிறீலங்காவின் ரூபவாஹினி தொலைக்காட்சியின் பொறுப்பாளராகவும் பணியாற்றிய திரு. வசந்தராஜா அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். அவர் சந்திரிகா அரசாங்கத்துடனான தனது அனுபவங்களையும், விடுதலைப்புலிகளுடன் ஏற்பட்ட தொடர்புகளில் பெற்ற அனுபவங்களையும் திரட்டி நூலாகத் தொகுத்துள்ளார். தற்போதைய யாழ் மக்களின் இடப்பெயர்வையும் அதனால் சிறீலங்கா அரசிற்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் நடுநிலையோடு ஆராய்ந்துள்ளார்.

சமாதானம் என்ற போர்வையில் சிறிலங்கா அரசு எவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்ற முனைந்தது என்பதையும், எவ்வாறு நீதியின்றி பேச்சுவார்த்தையின் வாக்குறுதிகளுக்கு முரண்பாடாக நடந்துகொண்டது என்பதனையும் கூறி சந்தரிகாவின் முகத்திரையைக் கிழித்துள்ளார் அவர். அதே வேளை தொடரும் போரினால் சிறிலங்கா அரசு அடைந்த பொருளாதார, அரசியல் பின்னடைவுகளையும் சிறப்புற விளக்கியுள்ளார்.

தமிழ் மக்கள் தங்கள் சுயநிர்ணய உரிமைக்காகவே போராடுகின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டத்தை ஒரு தேசிய இன மக்களின் ஜனநாயகப் போராட்டமாக சர்வதேசம் பார்க்க வேண்டும் என்று சர்வதேச சமூகத்திற்கும் ஓர் அறைகூவலை விடுக்கின்றார். பேச்சுவார்த்தைக் காலத்தில் அரசாங்கத்தினுள் இருந்த ஒருவரின் உள்ளக அறிக்கையாக (Inside report) இந்நூல் வெளியிடப்படுவதால், இது சிறப்புப் பெறுகிறது. ஒவ்வொரு தமிழ் மகனும் வாங்கி வாசிப்பதற்கு மட்டுமன்றி, தமிழர்கள் பிரச்சனையை வெளிநாட்டவர்க்கு எளிய முறையில் விளக்குதற்கு கையளிக்கவும் கூடிய ஒரு சிறந்தநூல் இதுவாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாங்கள் சுமைகளில்

## பூம்பாவை

அம்மா இனி வரமாட்டாள். இரத்தமும் சதையுமாய் அந்த வீட்டில் சுறுசுறுப்பாய் வளைய வந்தபடி திரிந்த அம்மா அந்தச் சுவரின் நான்கு சட்டத்துக்குள் அடங்கிவிட்டிருந்தாள். கருகிப்போன மாலை காற்றில் அசைந்தது. அந்த அடையாள அட்டையின் சாய்ந்த புகைப் படத்தில் என்ன இளமையாய் அழகாய் பின்னைய தோற்றத்துக்கும் அதுக்கும் எதுவித சம்பந்தமுமில்லாதவளாய் சிரித்தபடி இருந்தாள். அவள் இதயம் நம்ப மறுத்தது. அம்மாவினது முப்பத்தொருநாட் கிரியைகளும் நேற்றோடு முடிந்துபோய் வீட்டை வெறுமையான அமைதி குடிகொண்டிருந்தது.

"பிள்ளை தண்ணி எடுத்துக் கொண்டு வாமோனை"

அப்பாவின் குரல் மெல்லிதாய் சுரத்தேயில்லாமல் ஒலித்தது. அப்பாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. முப்பத்து மூன்று வருட வாழ்க்கையின் நிழலாய் நின்ற அம்மா, நல்லது கெட்டது எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டு கணவனுக்கு அடங்கிய மனைவியாக வாழ்ந்து மறைந்துபோன வரலாறு. அந்த வாசற்படியில் நின்றபடி கதவு நிலையின் விளிம்பைப் பிடித்தபடி எதற்கும் அவரின் அனுமதி கேட்டு யாசிக்கும் அவள் விழிகள்.... எல்லாமே அந்த வீட்டின் பிரமை போல.... அவளது விழிகள் கலங்கித் துடித்தன. சமையலறைக்குள் அம்மா எரியாத விறகுகளோடு போராடிக் கொண்டு இருமுகிற சத்தம் மனதின் பிரமைபோல இருந்தது. எல்லாமே அம்மாவின் வாழ்ந்து மறைந்து போன சுவடுகளாய் இருந்தன.

அப்பா கதிரையிற் சாய்ந்தபடி கூரை முகட்டை வெறித்தபடி இருந்தார். ஒன்றையொன்று கொழுவி பின்னியபடி இருந்த சிலந்தி வலையில் அவரது பார்வை பதிந்தது. நெற்றியை சுருக்கியபடி எதையோ பற்றி தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தார். ஊருக்கெல்லாம் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்த கனகசபை மாஸ்டரின் அந்தத் துடிப்பான காலங்கள் ஒடுங்கிப் போய் விட்டிருந்தன. வயது முதிர்ச்சியும் கவலைகளும் அவருக்கு மிகுந்த வயோதிபத் தோற்றத்தைக் கொடுத்தது.

சதா கண்களிற் குடிகொண்ட கவலை, மகளின் திருமணம் பற்றிய நினைப்பு இவற்றோடுதான் அவரது காலங்கள் போய்க்கொண்டிருக்கின்றன.

"அப்பா இந்தாருங்கோ!"

மகளின் குரல் கேட்டு கனகசபை மாஸ்டர் சுயநினைவுக்கு வந்தார். செம்பை வாங்கி தண்ணீரை மடமடவென்று குடித்தார். மகளின் முகத்தை ஏறிட்டார். நீண்டதொரு பெருமூச்சு அவரிடமிருந்து சுழித்து அடங்கியது.

"அப்பா.... ஏன் இடிஞ்சுபோய் இருக்கிறியள்!" மகளின் கேள்வி அவரை உலுப்பியிருக்க வேண்டும்.

"இல்லைப்பிள்ளை, அவள் போட்டாள். நல்ல சாவு. இருந்து துன்பப்படாம, ஆருக்கும் கஷ்டம் குடுக்காம போய்ச்சேர்ந்திட்டாள்."

"ஆனால் ஒரேயொரு குறை. அது உன்னை எப்படிக் கரைசேர்க்கிறது எண்டுதான். கடைசிவரைக்கும் அதுதான் அவளுக்கு கவலை."

"என்ரை பிள்ளைக்கு ஒரு நல்ல காரியத்தைச் செய்து பார்க்காமல் போறனே எண்டு கடைசியாச் சொல்லி அழுதாள்." அப்பாவின் உதடுகள் துடித்தன. வாழ்க்கையில் அழுதறியாத கண்களில் நீர் முட்டியது.

அவளுக்கு 'கோ' என்று கதறி அழவேணும் போல இருந்தது.

"அதைவிடு மோனை. கடைசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யாய்ப் பொருந்தின சம்மந்தம் நல்லது மோனை"

பெடியனிலையும் குறை சொல்லுறதுக்கு ஒண்டுமில்லை. ஆனால், சீதனக்காசு தான்.... அவை கேக்கிற தொகையை என்னண்டு குடுக்கிற தெண்டு யோசிக்கிறன். அவள் இருந்தால் ஒருமாதிரி எப்படியோ ஒப்பேத்திப் போடுவாள். அவள் கெட்டிக்காரி. என்ரை சம்பளத்தில் குடும்பத்தைச் சமாளிச்சு மிச்சம் பிடிச்சு எல்லாத்தையும் குருவிமாதிரிச் சேர்த்தாள்.

"அப்பா எனக்கு கலியாணம் வேண்டாம்"

அப்பா அவளைப் புதினமாக ஏறிட்டார்.

"உதென்ன விசர்க்கதை மேனை"

"நாளைக்கு ஊருலகம் என்ன சொல்லும். ஒரேயொரு பெட்டையைப் பெத்த வாத்தி, அதுக்கெண்டு ஒரு நல்ல காரியத்தைப் பண்ணாமல் தனிமரமா விட்டிட்டுப் போட்டான் எண்டெல்லே சிரிக்கப் போகுதுகள்."

அவளுக்கு ஒரு புறம் சிரிப்பாக இருந்தது. முப்பத்திரெண்டு வருட வாழ்க்கையில் எத்தனை திருமணப் பொருத்தங்கள். எல்லாம் முற்றாகி நாள் பார்த்து குழம்பியபோது அவள் உள்ளுக்குள் உக்கிப்போனாள். கனவுகள் உடைந்துபோய் கற்பனைகள் சிதறிப்போய்....

"என்னப்பா, அப்ப வாறமாதம் எல்லாருக்கும் சாப்பாடு தரப்போறீர் எண்டு சொல்லுமன்"

www.tamilarangam.net

அவளது சக ஆசிரியைகள் அவளைக் கேலிசெய்து நின்றபோது அந்தத் திருமணம் குழம்பிப்போனது. எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் கலைந்து போனது. கடைசியில் அம்மா அந்தத் திருமணத்தை தான் நடத்திக் காட்டுவதாகக் கூறி ஓடியலைந்து திரிந்து, அதுவே அம்மாவுக்கு நோய் வரக்காரணமாக அமைய இருந்ததெல்லாம் பழைய கதை.

"உவர் வாத்தியார் அந்த ஐம்பதினாயிரம் டொனேசனைத் தர்றதுக்கு ஏலாதாம். பிறகென்னண்டு நாங்கள் சம்மதிக்கிறது"

மாப்பிள்ளை வீட்டுக்காரர் அடித்துச் சொன்னபோது எல்லாமே நொருங்கிப் போனது. அம்மா மட்டும் உள்ளூர ஒரு நப்பாசையோடு,

"உது நல்ல பொருத்தமப்பா. வாழுற பிள்ளை, எப்படியாவது கடன் பட்டாவது நடத்திப்போட வேணும்"

இந்த நம்பிக்கையின் கடைசித் துளியும் அறுந்துபோனது.

"அம்மா எப்படிக் கஷ்டடப்பட்டாய், எப்படி நம்பிக்கையோடு சொன்னாய்"

அம்மாவின் இதமான பார்வை அவளை ஆறுதற்படுத்துவது போலத் தோன்றியது. கருகிய மாலை காற்றுக்கு அசைந்தது. வாஞ்சையோடு தலையைத் தடவியபடி பள்ளிக்கூடத்துக்கு வழியனுப்பி வாசலிற் பார்த்தபடி நிற்கும் அம்மா!

"எப்படிப் படிச்சும் என்ன பிள்ளை. இன்னொருத்தர் வீட்டுக்குப் போனால் அவையிட்ட நல்ல பேர் வாங்கிறதுதான் பிள்ளை பொம்பிளைக்குச் சிறப்பு"

"அம்மா உன்னைவிட்டுட்டு ஒருடமும் போகமாட்டனணை"

"உதென்ன விசர்க்கதை கதைக்கிறாய். பிறகு எங்களைப் பார்த்துத் தான் சனம் குறை சொல்லும்". அம்மா கடைசியில் சுற்றிச் சுற்றி வந்து அதிலையே நிற்பாள். அவளுக்கு எரிச்சலாக இருக்கும்.

"பிள்ளை இண்டைக்குப் பள்ளிக் கூடம் போகேல்லையே"

அப்பாவின் குரல் அவளை உலுக்கியது. அவளுக்கு பள்ளிக்கூடம் போகாமல் விடவேணும் போல் இருந்தது. அப்பா தனிய யோசித்துக் கொண்டிருப்பார். அந்தக் கடைசியாக வந்த சம்பந்தம் எப்படியாவது திருப்தியாய் முடியவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார்.

"பிள்ளை நேற்று அவன் சிறீராமனைக் கண்டனான். பெடியன் தலையாட்டிப் போட்டுப் போறான். எந்தப் பள்ளிக் கூடத்திலை பிள்ளை படிப்பிக்கிறான்?"

எனக்குத் தெரியாது என்னுமாப் போல அவள் தலையாட்டினாள்.

அவளும் ஒரு ஆசிரியை தானே. அவனைப்போலப் பட்டதாரியாகத் தானே இருக்கிறாள். அந்தப் பத்தாயிரத்தை அப்பாவால் கொடுக்க

# வானளாவப் புகழ என்ன இருக்கிறது?

**"'ரிவிரச' இராணுவ நடவடிக்கை யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கத்தைச் சிறிது கூட நிறைவேற்ற வில்லை." 'த ஜலண்ட்' பத்திரிகையில் முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அக் கட்டுரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் மூலம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் பெரும் வெற்றி பெற்றுவிட்டோம் என்று பொதுஜன ஐக்கிய முன்னணி வானளாவப் புகழ்ந்து வருகிறது.**

**'ரிவிரச' இராணுவ நடவடிக்கை யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமென்று சொல்லித்தான் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், பின்பு அந் நடவடிக்கை திசைமாறி முறையற்ற ஒரு சண்டைக்குரிய முழுத்தன்மையையும் பெற்றுக்கொண்டது. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் 'ரிவிரச' நடவடிக்கை எந்தப்பங்கும் வகிக்காமல் போய்விட்டது.**

**யுத்தம் தொடங்கிய 13 வருடங்களில் பாதுகாப்பு படையினர் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் ஓரளவாவது வெற்றி கண்டுள்ளார்களா? பாதுகாப்புப்படையினர் கேட்டுக் கொண்ட எல்லா நவீன ரக ஆயுதங்களையும் அரசாங்கம் கொள்வனவு செய்து அவர்களுக்கு வழங்கியும் யுத்தம் அப்போதாவது முடிவை நெருங்கியிருக்கிறதா?**

**சக்திமிக்க டாங்கிகளாலோ, ஆட்லறி பீரங்கிகளாலோ புலிகளின் போர்த்தந்திரோபாயத்தை எதிர் கொள்ள முடியாது. படையினருக்கு ஏற்படும் இழப்புக்கள் பற்றியும் முரணான தகவல்களை சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வெளியிடுகின்றது. இவற்றை சரியா என அறிவதற்கும் சுயாதீனமான வட்டாரங்களும் இருப்பதில்லை. இதனால் உண்மையான இழப்புக்கள் பற்றி தெரியவருவதே இல்லை.**

**கடந்த பதின் மூன்று வருடகால போரில் வெற்றியீட்டாமைக்கான காரணங்களில் புலிகளின் நடைமுறை தந்திரோபாயங்களும், நுட்பங்களும் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முடியாது என்பது அவளுக்குத் தெரியும்.

வீடு வளவு நகைகள் அது வேறு விடயம். இது? அப்பாவின் விழிகள் முகட்டுவளையில் படிந்த படியே இருந்தன.

அப்பா எப்பவுமே இப்படித் தான் ஒரு பிரச்சினையெண்டா அதைப்பற்றியே நாள் முழுக்கச் சிந் தித்தபடி இருப்பார். அதை விட்டு அகலமாட்டார்.

பள்ளிக்கூடம் போனாலாவது அந்தப் பிள்ளைகளைப் பார்த்து கொஞ்சம் மனசுக்குத் தெம்பு வரும். வெள்ளைச் சீருடையில் சிறகடித்த படி எவ்வளவு கலகலப்பாகத் திரி வார்கள். அவளது மனம் அவர்க ளைப் போல குழந்தைகளாய் இருக்க ஏங்கியது. எதற்கும் கவலை யற்று புத்தகச் சுமைகளை பைகளிற் தாங்கியபடி அம்மாவிடம் விடை பெற்று துள்ளிவரும் காலங்கள் எவ் வளவு இனிமையான பொழுதுகள்.

"பிள்ளை நேரம் போகுதெல்லே"

"ஓமோம் நான் வெளிக்கிட்டுட் டன்"

அப்பா அவளை வழியனுப்பி வைத்தார்.

வயல் வெளியை ஊடறுத்தபடி சைக்கிளில் போவது மனதுக்கு இதமாக இருந்தது. நேற்றுப் பெய்த மழையால் நெற்கதிர்கள் தண்ணீருக் குள் படுத்துக் கிடந்தன. பார்க்கக் கவலையாய் இருந்தது. எந்தத் தகப் பன் தனது மகளின் திருமணச் செலவுக்கு பட்ட கடனை அடைக் கவென இந்த விளைச்சலை நம்பி யிருந்தானோ? மனம் ஏமாற்றத்தால் கூம்பியிருக்கும்.

எதிர்க்காற்றில் சைக்கிள் மிதிப் பது அவளுக்குச் சிரமமாக இருந் தது. எதிரே வருவது எங்கோ பார்த்த முகமாக. சந்தேகமில்லை, அது அவன்தான். அவனும் அவ ளைக் கண்டிருக்க வேண்டும்.

சிறீராம் பள்ளிக்கூடம் போறான் போலை. அவளுக்குப் படபடப்பாக இருந்தது. அப்பாவின் கவலை நிறைந்த முகம் நினைவில் நின்றது. அப்பா எவ்வளவு கஷ்டப்படுகிறார். அப்பாவால் முடியாது.

சொல்லி விடுவோமோ?

"ஒரு நிமிசம் நில்லுங்கோ" அவ ளுக்கு எங்கிருந்துதான் அந்தத் துணிவு வந்ததோ. "உங்களால கேட் கிற தொகையை எங்களாலை தர முடியாது. நீங்கவேறு இடத்திலை பாருங்கோ"

www.tamilarangam.net

அவனுக்கு அது எதிர்பார்த்தது போல் இருந்தது. அவன் ஒருகணம் அவளை ஏறிட்டபடி 'சரி' என்று தலையாட்டியபடி சென்றான்.

அவளுக்கு இன்னும் நம்பமுடி யாமல் இருந்தது. தானா அப்படிச் சொன்னேன். அப்பாவை நினைக்க ஒருபுறம் பயமாக இருந்தது. ஆனால் தனது பதில் அவளுக்குத் திருப்தி யாக இருந்தது.

அப்பா அன்று மிகுந்த கோப மாக இருந்தார். அப்படி கோபமாக இருந்த அப்பாவை ஒருபோதும் பார்க்கவில்லை. "வெண்ணை திரண்டுவர தாழியை உடைச்சுப் போட்டியே"

"ஏனிப்படிச் செய்தனி"

"நான் கதைச்சு அந்தத் தொகை யைக் குறைச்சு செய்யலாமெண்டு நிண்டனான் மோனை. இப்ப என் னெண்டால் நீ எல்லாத்தையும் குழப்பிப்போட்டாய்"

"உன்ரை கலியாணத்தை இனி எப்படி நடாத்தப்போறன் பிள்ளை"

"நான் சுமை இறக்கிவைச்ச மாதிரி இருந்தன். நீ ஏனிப்படிச் செய்தாய்" அப்பாவின் கைகள் பட படத்தன.

"அப்பா நான் உழைக்கிறன். என்னைச் சுமையா நினையாதை யுங்கோ ஒரு நாளும்"

"அப்ப என்ன நீ காலம் பூராவும் இப்படியே இருக்கிறதெண்டு முடி வெடுத்திட்டியே?"

அப்படியில்லை.

"என்னைப் புரிஞ்சுகொண்ட ஒருத்தரா சொத்துக்காக என்னை வாங்குகிற நோக்கம் இல்லாத ஒருத் தரா, எனக்கு வருகிறவனுக்காக நான் காத்திருப்பன்"

"என்னையும் தன்னைப்போல ஒரு ஆளா நினைக்க வேணுமப்பா"

அவளது உதடுகள் துடித்தன. உயர்ந்த தொனியில் அதுவரை கேட் டிராத, அவரிடம் எதிர்வார்த்தை பேசியறியாத அவள் குரல் அப்பா வுக்குள் எதையோ தட்டியெழுப்பி யிருக்க வேண்டும். அவர் மௌன மாக அவளைப் பார்த்தார். அதில் பெருமையிருந்தது.

★★★

# மெல்லத் தமிழ் இனி...

"அவனியெங்கும் பவனி வரும் தமிழன் தான் எங்கு வாழ்ந்தாலும் அங்கும் தன்னிகரில்லாத் தமிழ் மொழியை, பண்பாட்டைப் பரப்பி வாழ்வதே பேரின்பப் பெருவாழ்வாக மதித்து வாழ்க்கை நடத்துவான். மியன்மாரில் (பர்மா) வாழும் நாமும் நமது இனம், மொழி, பண்பாடு பிற இனங்களுடன் கலந்து சிதைவு பெறா மல் நம் பாரம்பரியத் தனித்தன் மையை காப்பதற்கு நமது சக்திகளுக் கேற்ப உழைத்து வருகிறோம் என்று அங்குள்ள தமிழர் அறநெறிக் கழகத் தினர் கூறுகிறார்கள்.

உலகமெங்கும் பரந்து வாழும் தமி ழர்களிடையே ஏற்பட்டிருக்கும் புத்தெ ழுச்சிக்கு தமிழீழப் போராட்டமே உந்து சக்தியாக விளங்குகின்றது.

நமது இனம், நமது மொழி, பண் பாடு சிதைந்து போகக்கூடாது என்ற எண்ணம் அவர்களுக்குள் ஆழமாகி வருகிறது. அன்னிய தேசங்களில் அவர்கள் அவமதிக்கப்படுவதை, புறக் கணிக்கப்படுவதைச் சகிக்க முடியாத அவர்கள் விழிப்புடன் செயற்படுகி றார்கள் வைக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.

தங்கள் குழந்தைகளின் எதிர்காலத் தின் மீது அக்கறை கொண்டு அவர்கள் 'கட்டாய இரவுத் தமிழ்ப் பாடசாலை கள்' அமைத்து தமிழ் கற்பித்து வருகி றார்கள். 4.1.96 அன்று தமிழ் குழந் தைகள் தினவிழா ஒன்றை நிகழ்த்தி இசை, கவிதை, கட்டுரை போட்டிகள் நடாத்தி 'தமிழ் வளர்ச்சிப் பரிசளிப்பு' நிகழ்வுகளையும் நடாத்தியிருக்கிறார் கள். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக நெடுநாளாக தொண்டாற்றி வரும் ஒருவருக்கு 'ஆற்றல் அரசு' எனும் விருது வழங்கிச் சிறப்பித்தும் வருகி றார்கள். தமிழில் ஆற்றல் மிக்கவர்கள் உருவாக வேண்டும் எனும் ஆர்வம் அங்கு அவர்களுக்குள் வளர இச் செயற்பாடு பெரிதும் உதவுகிறது.

தமிழை மெல்லச் சாக விடாது தடுக்கும் வண்ணம் அவர்கள் உழைத்து வருகிறார்கள் என்ற இந்தச் செய்தி மெல்லத் தமிழினித் தழைக்கும் என எண்ண வைக்கிறது. தமிழ் உலக ளாவிய அளவில் சிறந்து விளங்கப் பாடுபடுவது அவர்களது பணி என அவர்கள் பணிவோடு பகர்கிறார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொடியேற்றிய ராமலிங்கத்துக்கு ஒரு கடிதம் !

கேணல் ரத்வத்தை மேற்பார்த்து,
"கோணல்" ராமலிங்கத்துக்கு....
மானத் தமிழனொருவனெழுதும் மடல்,

ஐயா வணக்கம்
கொடியேற்றிய களைப்பிலும்,
களிப்பிலுமிருக்கும் கனவானே!
நந்திக் கொடியேற்றிய நாயகனே!
இந்தக் கடிதத் தொந்தரவுக்கு மன்னிக்க,
சரியான முகவரி தெரியவில்லை
பெரியவனுக்கு எதற்குப் பெயரும், முகவரியும்?
வந்தடையுமென்ற நம்பிக்கையிலேயே
இந்த மடல்:
இடம்பெயர்ந்த எல்லோரும் நலமல்ல....
ஏதோ ஒருமாதிரி இருக்கின்றோம்.
கோயில் மடம்
குடைவிரித்த பூவரசு,
வேதக் கோயில், விளையாட்டு மைதானம்,
வீதிக்கரை, வேம்பிராய்ச் சுடலை
எங்கும் வந்தவரே தங்கியுள்ளோம்.
முட்டை பத்து ரூபா,
முருங்கைக் காய் நூறு ரூபா,
கத்தரிக்காய் இருநூறு,
கருவாடோ முன்னூறு
ஒரு காலமுமறியாத விலையேற்றம்.
உமக்கென்ன கவலை?
ஆமி தரும் அரிசி,
அளந்து போடும் சாப்பாடு.
ரோஷமற்ற மேனிக்கு... வாசச் சவர்க்காரம்
பெய்யப் போனாலும் பொலிஸ்காரன் பாதுகாப்பு
மானமிழந்து காட்டிக் கொடுத்தால்...
பகைவன் வானத்திலும் தூக்கி வைப்பான்.
வலிகாமத்துக்கு வயிறு பட்டினியெனினும்
மனது நிறைந்துள்ளது.
"சரணடையாத தமிழரென்ற" செருக்கில்
உரமேறியுள்ளது உடல்.
துடைத்தெறியப் பட்ட துன்பம் கொடிதெனிலும்
"பகைவனுக்கு பாதம் கழுவாதோர்" என்று
நாளைய வரலாறு நம்மை எழுதும்
கையைத் தலைமேற் குவித்து
தாயே போற்றி
சந்திரிகா போற்றியனெ
வாயாற் கூறாத "வல்லமை" யெனும்
திமிரெமக்கு
அது சரி ஐயா!
எல்லோரும் அல்லோல கல்லோலப்பட்டு
ஓடியபோது
உம்மால் மட்டும் எப்படி ஒளித்திருக்க முடிந்தது?
கொடியேற்றியபோது
பட்டு வேட்டி கட்டியிருந்ததாக
தொலைக்காட்சியிற் பார்த்தவர்கள் சொன்னார்கள்.
கக்கூசு வாளிக்குப் பொன்முலாம் பூசுவதில்லையே,
விளக்குமாறுக்கு எதற்குப் பட்டுக் குஞ்சம்?
உமக்கெதற்குப் பட்டும், பவிசும்?
அம்மணமாக நின்றிருந்தால் அர்த்தமிருக்கும்.
பட்டுவேட்டி என்ன பாவம் செய்தது?
ரத்வத்த சிங்கக் கொடியேற்ற
ராமலிங்கம் நந்திக் கொடியேற்றினார்,
வெட்கமில்லை,
காக்கைவன்னியனின் புதிய வாரிசே!
எட்டப்பனின் இளவலே!
நீர் இராமலிங்கமல்ல.... துரோகலிங்கம்.
காலத்துக்குக் காலம் எமக்குள் களைகள்
முளைப்பதுண்டு.
இப்போது புதுமுகமொன்று அறிமுகம்
பட்டைக் கிடங்கையும் ஒத்தியெடுத்துக் கொண்டு,
வலிகாமம் வெளியேறியது
நீ மட்டும் ஏன் நின்றாய்?
கதிர்காமர் வெளிநாடுகளில் படியேறி
சந்திரிகாவுக்காக மடிப்பிச்சை கேட்கின்றார்
நீ கொடியேற்றி, வைத்துக் குடிப்பெருமையழித்தாய்
புலிக்கொடி பறந்த கோட்டையின் அருகில்
நந்திக் கொடி பறப்பது நல்லதே
சிங்கக் கொடியோடு
சேர்ந்து பறப்பதுதான் நல்லதல்ல....
ஏற்றிவைத்தாய் பாவி
உனக்கு இல்லையினி மீட்சி.


புதுவை இரத்தினதுரை

www.tamilarangam.net

# தமிழீழ தேசம்

**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**
**யாழ். பல்கலைக்கழகம்**

தமிழீழம் என்பது இன்று எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆயினும், தமிழீழத் தேசம், அதன் அமைவு, கொண்டுள்ள வளங்கள், அவற்றின் உள்ளார்ந்தநிலை, பயன்பாடு என்பன பற்றி எல்லோரும் தெரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. உலகத்தில் அரசுகள் (States) எனப்படும் தொகுதிகள் இருக்கின்றன. தேசங்கள் (nations) என்ற இன்னொரு தொகுதி இருக்கின்றது. அரசின் நிலப்பரப்பு அங்கு வாழ்கின்ற மக்களாற் சூழப்படலாம். அங்கு வாழாத இன்னொரு பிரதேச மக்களாலும் சூழப்படலாம். இரண்டும் அரசுகள்தான். எனினும் குறிப்பிட்ட அரசு குறிப்பிட்ட பிரதேச மக்களாற் பிரதிபலிக்கப்பட்டால் அது தேசமாகும். இத் தேசத்தில் ஏதாவது ஓர் அம்சம் அம் மக்களை ஒருங்கிணைக்கும். மொழி, சமயம், கலாச்சாரம், பொதுவான வரலாறு, நிரந்தர அரசு, பொதுவான எதிரி போன்ற ஏதாவது ஒன்று அல்லது பல அவ்வாறு ஒன்றாக இணையலாம். இந்தச் சமூக ஒன்றிணைவு காலகாலமாகப் பின்னிப்பிணைந்து தொடர்ந்தால் அப்பிரதேசம் ஒரு சிறந்த தேசத்திற்குரிய அரசாக (Nation-States) சிறப்புற்று விளங்கும். இந்த வகையில் தமிழீழம் ஒரு தேசத்துக்கான பல அம்சங்களைக் கொண்டுள்ளது. பொதுவான வரலாறு, மொழி, வாழும் பிரதேசம், கலாச்சாரம், சமயம் போன்றன தேசம் என்ற நிலையை உருவாக்குகின்றன. சில நூற்றாண்டு அடிமை வாழ்க்கையும், பொருளாதாரக் கட்டுக்குலைவும் இவற்றை உடைத்தன. இலங்கைக்குக் கொடுக்கப்பட்ட தன்னாட்சியும் எமக்குக் கிடைக்கவில்லை. இதனைத் தந்தை செல்வா அப்போதே கூறிவிட்டார். ஆயினும், எமது மக்கள் ஒன்றுபடக் காலம் எடுத்தது. இன்று தமிழ்த்தேசிய எழுச்சியைப் பார்த்து சிங்களத் தேசம் கடுமையாகச் சிந்திக்கின்றது.




1. கனகராயன் ஆறு
2. இரணைமடு
3. விசுவமடு
4. முத்தையன்கட்டு
5. தண்ணிமுறிப்பு
6. பதவியா
7. கட்டுக்கரைக் குளம்
8. பாவற்குளம்
9. சங்கிலி கந்தரா
10. பன்குளம்
11. கந்தளாய்
12. நுவர வாவி
13. பானியன் கடவளை
14. அல்லை
15. மின்னேரியா
16. கவுடுள்ள
17. ஹுறுளு வாவி
18. கிரிதலை
19. பராக்கிரம சமுத்திரம்
20. மதுறு ஓயா
21. கல் ஓயா
22. யோத வாவி
23. திச வாவி
24. பெரகம
25. உன்னிச்சை
26. தம்போலா
27. கொட்டுகச்சி
28. ஊரியான்
29. ரிதிபந்தி
30. மகாஉஷ் வாவி

**1931-ம் ஆண்டு முதல் தமிழர் வாழும் பிரதேசங்களில் நடைபெற்ற திட்டமிட்ட குடியேற்றத் திட்டப் பகுதிகளுக்குப் பெரும்பாலும் அரசனால் சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.**

தன்னாட்சி பெறுவதற்கு முன்பும் பின்பும் தமிழர் கலாச்சாரத்தை இலங்கையில் அழித்து ஒழிக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பாரம்பரியப் பிரதேசத்தைக் கைப்பற்றி விட்டால், தமிழ்ச் சமூக ஒருங்கிணைவை அழித்துவிடலாம் என்ற நிலையில், வரண்ட பிரதேசக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ் மாவட்டங்கள் சிங்கள மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டன. அல்லது சிங்கள மாவட்டங்களாக மாற்றப்பட்டன. மேற்கில் பொம்பரிப்பில் இருந்து புத்தளம் உட்பட சிலாபம் வரையுள்ள பிரதேசங்கள் சிங்கள மயமாகியது போல் கிழக்கில் பொத்துவிலுக்குத் தெற்கேயுள்ள பகுதிகளும் இவ்வாறாகின. அம்பாறைப் பிரதேசம் சிங்கள மயமாக்கப்பட்டது.

தமக்கிடையே தொடர்பு கொள்ளாதவாறு "அபகரிப்புக்" குடியேற்றங்களும் இராணுவ மயப்படுத்தலும் உருவாக்கப்பட்டு நிலைத்துவிட்டன. ஆகவே "தமிழர் தேசம்" என்றால், எஞ்சிய பகுதிகள்தான் என்று நாம் நினைக்கக்கூடாது. பரந்த அப்பிரதேசம் இன்று ஒடுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கப்பட்டுள்ளது.

பரந்த இப் பிரதேசத்தில் இருக்கும் வளங்கள் உணரப்பட்டு அவற்றிற்கான உட்கட்டுமான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. எஞ்சியிருக்கும் வடகிழக்குப் பகுதியில் மட்டும் 18323 சதுர கி. மீ. பிரதேசம் உண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தவிர, பிரதான நிலப்பகுதியிற் காட்டுப்பகுதி அதிகம். குறிப்பிட்ட பொருத்தமான பகுதிகளைத் தெரிந்து விவசாயத்தை விருத்தி செய்யலாம். மண்வளத்திற்கு ஏற்ற முறையில் பயிர்த்தெரிவு செய்யமுடியும். இலங்கையின் மூன்றிலொரு பகுதி தமிழர் பிரதேசமாகும். இங்கு நதிகள் கொண்டு வரும் நீர் முக்கிய வளமாகும். மகாவலிகங்கை போன்ற ஒரு சில நதிகள் தவிர, ஏனையவை வற்றி வரண்டு விடுகின்றன. மாரியில் அதிக மழைநீர் வெளியோடுகின்றது. இதையுணர்ந்தே புராதன அரசர்கள், ஆற்று நீரைத் தடுத்து அணைகட்டி, நீர்ப்பாசன முறையை விருத்தி செய்தனர். ஆயினும், தன்னாட்சியின் பின் இவற்றைப் புதுப்பித்தும் புதிய குளங்களை நிறுவியும் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்ட போதிலும், சிங்கள மக்களின் நன்மைகளைக் கருத்திற் கொண்டே அவை மேற்கொள்ளப்பட்டன.

மகாவலிகங்கை அபிவிருத்தித் திட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையின் வரையறுக்கப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகள் 103 ஆகும். இவற்றில் 63 வரையிலானவை தமிழர் தாயகத்திற்கூடாகப் பாய்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி, ஒருங்கிணைக்கப்பட்ட நீர்ப்பாசன உட்கட்டுமானம் செயற்படும்போது, நிலக்காட்சி பாரியளவில் மாற்றம் பெறும். தமிழ் மாவட்டங்களில் மன்னாரில் 10, கிளிநொச்சியில் 08, முல்லைத்தீவில் 19, வவுனியாவில் 23, மட்டக்களப்பில் 21, திருகோணமலையில் 22, அம்பாறையில் 21 பெரிய குளங்களும் மற்றும் சிறிய குளங்களும் இந்நதிகளினால் நீரைப் பெறுகின்றன. மேலும் தரைக்கீழ் நீர் வடமேற்குப் பகுதியில் உண்டு. கிளிநொச்சியூடாக முல்லைத்தீவிற்கு வடமேற்கில் உள்ள பகுதிகள் தரைக்கீழ் நீரைக் கொண்டன. இதனால் தான் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்கள் குடியேற்றம் படிப்படியாகக் கூடியது. இப்போது காட்டு நிலம், பற்றை நிலம், தரிசு நிலம் ஆகியன 685,118 ஹெக்டேயராக உள்ளன. ஆனால் நெற்செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட பரப்பு 257,641 ஹெக்டேயராகும். 1991 - 92-ல் நெல் பயிரிடப்பட்ட பரப்பு 140,229 ஹெக்டேயராகும். இது மிகக் குறைவாகும். ஆகவே தமிழீழத் தேசத்தின் விவசாயம் சிறந்த ஓர் எதிர்காலத்தைக் கொண்டுள்ளது.

www.tamilarangam.net

அதேபோல, இன்னொரு வளம் கொண்ட பொருளாதார நடவடிக்கை மீன்பிடித் தொழில் ஆகும். இலங்கையின் மொத்தக் கரையோரத்தில் மூன்றில் இரண்டு தமிழீழத் தேசத்தில் உள்ளது. மீன்பிடித் தொழில் தமிழர் பகுதியில் இடம் பெற்ற கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கைகளினாற் பாதிக்கப்பட்டுள்ளது. கரையோர மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி, உள்நாட்டு மீன்பிடி என இதனை நன்கு அபிவிருத்தி செய்யலாம். இதற்கான உட்கட்டுமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, ஊர்காவற்துறை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பொத்துவில் ஆகிய இடங்கள் முக்கியமான துறைமுகங்கள் ஆகும். ஒருசமயம், அதிகமாக மீன் உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட மாவட்டங்கள் இப்போது செயலிழந்துள்ளன. இலங்கைத் தீவிலேயே மீன்பிடியில் முதலிடத்தைப் பெற்ற வந்தது யாழ்ப்பாண மாவட்டமேயாகும். வர்த்தக மீன்பிடி இப்போது இல்லையெனலாம். ஆயினும் அன்றாட வருமானத்திற்காக மட்டும் ஆங்காங்கு இத்தொழில் நடைபெற்று வருகிறது. 1992-ல் பிடிக்கப்பட்ட உடன் மீன் 35292 தொன் ஆகும். பதனிடப்பட்டவை 10792 தொன் ஆகும். கடந்த சில வருடங்களாகத் தமிழீழக் கரையோரப் பிரதேச வளம் இந்திய, சிறிலங்கா மீனவர்களினால் அதிகளவில் பயன்பாட்டிற்குட்பட்டு வருகிறது. இந்திய - இலங்கைக் கண்டத் திட்டில் இராமர்அணை, மன்னார்த் தீவு ஆகியவற்றிற்கு வடக்கேயுள்ள பகுதியில், குறிப்பாக அதன் கிழக்கு பகுதி சிறந்த மீன்பிடிப்பகுதியாகும். இங்கு இந்திய மீனவர்கள் வந்து பிழைக்கின்றனர். ஆழ்புலக்கடல் எல்லைக்கு அப்பால் மண்டைதீவு வரை இது நடைபெறுகிறது. தமிழீழத் தேசத்தின் இரண்டாவது முக்கிய வளம் கடற்றொழில் ஆகும். இதற்குரிய உட்கட்டுமானம் செயற்படும் போது உகந்த பலனை எதிர்பார்க்க முடியும்.

மூன்றாவது வளமான காட்டு வளமும் ஒரு முக்கிய இலாபத் தொழில் வளமாகும். முன் கூறியது போன்று பெருநிலப்பரப்பின் பெரும் பகுதி காட்டுப் பகுதியாக உள்ளது. ஏற்படுத்தப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டு மக்கள் பரம்பலை இங்கு ஏற்படுத்தல் வேண்டும். இப்போது குறிப்பிட்ட சில இடங்களில்தான் மக்கள் வாழ்கின்றனர். காடு முக்கிய வளமாகும். விறகுத்தொழில் தவிர இங்கு வேறு தொழில்கள் இல்லை. தளபாடக் கைத்தொழில் இடம்பெற வாய்ப்புண்டு. மதிப்பு மிக்க காட்டு மரங்களை வளர்த்து அவற்றின் பலகைகளைப் பல கைத்தொழில்களுக்குப் பாவிக்கலாம். மரம் பாவனையில் இல்லாத எந்தப் பாவனைகளும் உலகில் இல்லை. ஆகவே மரம் பாரிய உள்ளார்ந்த நிலையினைக் கொண்டுள்ளது. பனை, தென்னை இரண்டும் பாரிய உபயோகம் உடையவை. தமிழீழப் பிரதேசம் முழுவதும் வ்ளரக்கூடியவை. இங்கு பனைகளின் தொகை 10.5 மில்லியன் ஆகும். தென்னையின் தொகை 2 மில்லியன் ஆகும்.

மட்பாண்ட உற்பத்தி, ஓடு உற்பத்தி, கட்டுப்படுத்தப்பட்ட சீமெந்து உற்பத்தி, கண்ணாடி உற்பத்தி, பாவனையாளர் கைத்தொழில், பனம், தென்னம் பொருட்கள் உற்பத்திச் சேவைக் கைத்தொழில் ஆகியவற்றுக்குத் தமிழீழப்பிரதேசத்தில் வளம் உண்டு. இந்த உட்கட்டுமானங்கள் செயற்படும் போது தகுந்த பொருளாதார நிலக்காட்சி ஏற்படும்.

இங்கு தமிழீழ பிரதேசம் கொண்டுள்ள மூன்று முக்கிய உள்ளார்ந்த வளங்கள் பொதுவாகக் கூறப்பட்டுள்ளன. தமிழீழத் தேசம் இஸ்ரேலைப் போல நீர் இல்லாமலோ அல்லது ஐஸ்லாந்து போல மீன்பிடியில் மட்டும் தங்கியோ அல்லது சுவிற்சலாந்து போல மிகக் குறைந்த பயிர்ச்செய்கைப் பகுதியைக் கொண்டோ, நேபாளம் போன்று கடற்போக்குவரத்து வசதியின்றியோ இல்லை என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆனால் எங்கள் தமிழீழத் தேசம் உள்ளார்ந்த பல வளங்களைக் கொண்ட ஒரு தேசமாகும்.

★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காவேரிக் கரையில் ஒரு கரும்புலி

**சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி - கிளியே
செம்மை மறந்தாரடி**

என மனம் நொந்து பாடினான் பாரதி. அன்றைய அன்னியராட்சி சூழலில் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழகத்தின் நிலையைக் கண்டு கொதித்த பாரதி சினந்து இவ்வாறு கூறினான்.

கடந்த சில ஆண்டுகளாக தமிழகமும் இவ்வாறுதான் இருந்தது. ஈழத் தமிழ் சகோதரர்கள் படும் துயரைக் கண்டும் தமிழகம் கொதித்தெழத் தவறியது. தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய பொய்யான செய்திகளும், அவதூறுகளும், அடாத பழிகளும் திட்டமிட்டுப் பரப்பப்பட்டதன் விளைவாகவோ, அல்லது தடா போன்ற பயங்கரமன தடைச் சட்டங்களின் விளைவாகவோ தமிழகம் மௌனித்துப் போயிருந்தது.

ஆனால், தமிழகம் நீறுபூத்த நெருப்பாகத்தான் இருந்தது. தமிழீழத்தில் விடுதலைப் புலிகளின் வீராவேசப் புயல் தமிழகத்தில் மீண்டும் நெருப்பை கனன்றெழச் செய்துவிட்டது. அதன் அடையாளமாக கொழுந்துவிட்டு எரிந்த தியாக தீபம் அப்துல் ரவூப் ஆவார்.

தம்பி பிரபாகரன் தலைமையில் நடைபெறும் தமிழீழப் போர் நியாயமானது தமிழீழத்திற்கு எதிரான ஆக்கிரமிப்பு அநீதியானது என்பதை உலகிற்கு உணர்த்திய தியாக வடிவம் அப்துல் ரவூப் ஆவார்.

தாய்த் தமிழகத்திற்கும் சேயான தமிழீழத்திற்கும் இடையே உள்ள தொப்புள்கொடி உறவு எவராலும், எப்போதும் அறுக்கப்பட முடியாதது என்பதை நிலைநிறுத்திய மாவீரன் அப்துல் ரவூப் ஆவார்.

தாயக மண்ணை மீட்டெடுக்க எண்ணற்ற இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் இன்னுயிர்களைத் தமிழீழத்தில் நித்தம் நித்தம் அர்ப்பணித்தபடியே உள்ளனர்.

ஆனால், தமிழீழத்திற்கு வெளியே அன்னிய மண்ணில் ஈழத் தமிழர்களுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த முதலாவது தற்கொடையாளி அப்துல் ரவூப் என்பதை எண்ணுந்தோறும் உள்ளம் சிலிர்க்கிறது.

பெரம்பலூர் சென்று அப்துல் ரவூப்பின் பெற்றோரையும், உடன் பிறந்தவர்களையும் பார்த்தபோது எனது கண்கள் கலங்கின. எளிய அந்தக் குடும்பத்தில் எத்தகைய வைர உள்ளம் படைத்த வீரன் பிறந்திருக்கிறான் என்பதை நேரில் பார்த்தபோது பிரமித்தேன்.

தந்தை அசேன் முகமது, தாய் சபீதா உம்மா, அண்ணன் ஆசிக் அலி, தங்கை ஷமீம்பானு ஆகியோரிடம் தம்பி பிரபாகரன் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தேன். விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயலகமும், பலநாடுகளில் உள்ள அமைப்புக்களும் அனுப்பியிருந்த இரங்கல் செய்திகளை அவர்களிடம் கொடுத்தேன்.



ராவூப் குடும்பத்தினருடன் தமிழின உணர்வாளர்கள்

தமிழீழத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டங்கள் பற்றிய செய்திகளையும் தெரிவித்தேன்.

சொந்தச் சகோதரர்கள் படும் துயரம் கண்டு மனம் பொறுக்காத நிலையில் அப்துல் ரவூப் தன்னுயிரைத் தியாகம் செய்திருக்கிறான் என்பதை அந்தக் குடும்பத்தினர் தெளிவாக உணர்ந்து பேசினார்கள்.

புதல்வனை இழந்த அந்தத் தாயின் தீரம்மிக்க உள்ளத்தைக் கண்டு வியந்து போனேன். தம்பி பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகள் பற்றி பத்திரிகைகளில் வரும் செய்திகள், எனது அறிக்கைகள், நான் ஈழம் சென்று திரும்பிய போது எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் தான் படித்திருப்பதாக அந்தத் தாய் கூறினார்.

தாய்ப்பாலை ஊட்டி மட்டும் அவர் தன் மகனை வளர்க்கவில்லை. தமிழ்ப்பற்றையும் ஊட்டி வளர்த்திருக்கிறார் என்பது எனக்குப் புலனாயிற்று.

தங்கள் மகனின் தியாகம் உன்னதமானது என்பதை அக்குடும்பத்தினர் தெளிவாக உணர்ந்துள்ளனர். வீணான விளம்பரங்களை அவர்கள் விரும்பவில்லை. தங்கள் அரும் பெறல் புதல்வனின் உயிர்த்தியாகம் எந்தவிதத்திலும் கொச்சைப்படுத்தப் படக்கூடாது என்பதில் கவனமாக உள்ளனர். அவர்களின் இந்த உயர்ந்த பண்பாடு என்னை நெகிழ வைத்தது.

கனத்த இதயத்தோடு நான் விடைபெற்றாலும், அக் குடும்பத்தினரைச் சந்தித்த பாதிப்பு என்னை விட்டு நீங்கவில்லை. எத்தகைய பிரதிபலனையும் எதிர்பாராத அந்தக் குடும்பத்தினரின் உயர்ந்த உளப்பாங்கு போற்றுதலுக்குரியதாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக தாய்த் தமிழகம் மீண்டும் சிலிர்த்து எழுந்துவிட்டது என்பதன் உருவகம்தான் தீரன் அப்துல் ரவூப்பின் தியாகமாகும்.

**- பழ. நெடுமாறன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## பௌத்த பேரினவாத சிந்தனைகளால்

www.tamilarangam.net

# சீரழியும் சிறீலங்கா



தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும், தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றியும் சந்திரிகா நன்கு ஆழமாகவும், தீர்க்கமாகவும் அறியாது போனமையை அவர் விட்ட மாபெரும் வரலாற்றுத் தவறு என எண்ணிக் கலங்க நேரிடும். இனப்பிரச்சினையை முற்போக்கான சிந்தனைத்தளத்தில் நின்று அணுக முடியாது போன இனவாதி சந்திரிகா உலகின் மிகுந்த வலிமை மிக்க கெரில்லா வீரர்களாக புகழப்படும் விடுதலைப் புலிகளிடம் பல பாடங்கள் கற்க நேரிடும்.

இந்தக் கற்றலின் துளி விளைவாகவே, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு சாத்தியமில்லை, அது இலகுவானதுமல்ல, அதை எளிதில் நிறைவேற்றி விடவும் முடியாது என்ற ஒரு யதார்த்தத்தை சந்திரிகா புரிந்து கொண்டு வருகிறார்.

இந்நிலை அவருக்கு ஏற்படக் காரணம், 'யாழ் மீதான படை எடுப்பு' சாதகமான விளைவுகளை கொடுக்காது போனமையே.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் தோற்கடிப்பது இலகுவானதல்ல என்பதையும் இது புரியவைத்துள்ளது.

போரில் விடுதலைப்புலிகளை வெல்வதாக இருந்தால், தற்போதுள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கையிலும் மூன்று மடங்கு அளவிலான சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேர வேண்டும். தற்போது இருப்பில் உள்ளதைப் போன்று மூன்று மடங்காக ஆயுதளபாடங்களை அதிகரிக்க வேண்டும். இவையெல்லாம் சந்திரிகா அரசுக்கு எவ்வளவு தூரம் சாத்தியமான விடயங்கள்? அதனால்தான் அவர் போரின் சுமையை, இயலாமையை, கடினத்தை வெளிப்படுத்தும் முகமாக இவ்வாறு பேசியுள்ளார்.

ஆனால் அரச தரப்பில் மாற்றங்கள் பெரிதாகக் காணப்படவில்லை என்றே தோன்றுகிறது; அவர்கள் விடாக்கண்டர்களாக நிற்கிறார்கள். விடுதலைப்புலிகளை போரில் முற்றாகத் தோற்கடிக்கும் வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என உறுதியாகப் பேசி வருகிறார்கள்.

பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனைகளுக்குள் ஆட்பட்டிருக்கும் சில சிங்கள அரசியல்வாதிகள் ஞானோதயம் வாய்க்கப்பெற்றவர்களாக மாறி சிங்கள தேசத்தின் எதிர்காலம் பற்றி பலமாகச் சிந்திக்கத் தொடங்கியுள்ள்ளனர்

இந்தப் போரை நீடிக்க முடியுமா? தேசத்தின் பொருளாதாரம் நலிந்து கொண்டு போகிறதே?

ஐந்து வருடங்களின் பின் ஆசியாவிலேயே மிகப் பெரிய வறிய நாடாக இலங்கை மாறும் அபாயம் இருக்கிறதே?

தேசம் குட்டிச் சுவராகிப் போகிறதே?

நாட்டின் பொருளாதாரத்தில் மூன்றாம் இடத்தில் இருந்த அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்து கொண்டு போகிறதே?

வெளிநாட்டு முதலீடுகள் அருகிக் கொண்டு போகின்றதே?

நாட்டில் பயமும் பீதியும் மக்களை வாட்டி அலைக்கழிக்கிறதே?

யுத்தம் வீட்டு வாசல் வரை வந்து தட்டத்தொடங்கி விட்டதே?

என்பது போன்ற பல கேள்விகளும், கவலைகளும் அவர்களுக்குள் புதிதாய் எழும்பத் தொடங்கியுள்ளன.

இந்த நிலைமைகளால் சந்திரிகா அரசு தள்ளாடும் நிலையில் இருக்கிறது.

சிறிலங்காவின் எதிர்காலத்தை இருளுக்குள் தள்ளாமல், சிங்கள மக்களின் வாழ்வின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த முயலவேண்டும். தமிழர் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வை விடுத்து, பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனையைக் கைவிட்டு, முன்னைய சிங்களத் தலைமைகளைப் போல தமிழர்களை ஏமாற்றலாம் என்ற எண்ணத்தை விட்டு நல்லெண்ண அடிப்படையில் இயங்க வேண்டும். அவ்வாறு இயங்கத் தவறும் பட்சத்தில் தமிழீழத்திலிருந்து வெளிவரும் ஈழநாதம் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டது போன்று சிறிலங்கா அரசு எதிர் நோக்குகின்ற பொருளாதார அபாயங்கள் பற்றிக் கூக்குரல் இடுவதில் பயனில்லை. ஆபத்தான காரியங்களில் இறங்கினால் அபாயங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

அரசானது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே ஒரு மார்க்கமாக கொள்வதாயின் போரானது ஐந்து வருடமல்ல அதற்கு மேலாகவும் ஓயப்போவதில்லை. இதனால் சிறிலங்கா அரசு ஆசியாவில் மட்டுமல்ல உலகில் உள்ள மிக வறிய நாடுகளில் வறிய நாடாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் போரின் முடிவானது நிச்சயம் சிறிலங்காவிற்கு சாதகமாக அமைய மாட்டாது. தமிழ் மக்களிற்கென ஒரு அரசு உருவாகியே தீரும்.

★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உயிரியல் இலக்கணம் ஆணாதிக்கத்தினைத் தீர்மானிக்கும் ஒரு காரணியா?

பெண்ணின் நிலை பொதுவாக ஆணுக்குக் கீழ் உள்ள நிலையாகவே சமூகத்திற் காணப்படுகின்றது. இந் நிலையை மாற்றி அமைக்கவேண்டு மென ஒரு சாரார் வாதிட, மறு சாரார் "இது இயற்கையின் நியதி. ஆண்டவனின் திட்டமிட்ட படைப்பு. இதை நாம் மாற்றிட முற்படுவது மூடத்தனம்" என்ற நோக்கில் வாதி டுகின்றனர். சமூகவியல் நோக்கில் கர்ண பரம்பரைக் கதைகள் பலவற் றில் கூட ஆணாதிக்க வெளிப்பாடு கள்தான் மேலோங்கிக் காணப்படு கின்றன. உதாரணமாக விவிலியம் என்ற வேத நூலின் பிதாவாகிய கடவுள், முதல் மனிதனாகிய ஆதாமைத் தன் சாயலாகப் படைத்து, அவனை உறங்கு நிலைக்குக் கொண்டு வந்து அவனின் விலா எலும்பொன்றை எடுத்து அவனுக்குத் துணையாக ஏவாளைப் படைத்தாரென் றும், இருவரையும் சிங்காரத் தோப்பிலே விட்டு தன் படைப் புக்கள் அனைத்தையும் ஆளும் படி கூறி, ஒரு குறிக்கப்பட்ட மரத்தின் கனியை மட்டும் உண்ணவேண்டாம் என கட்ட ளையிட்டார் எனவும் கூறப்படு கிறது. மேலும் இக் கட்ட ளையை முதலில் மீறியவள் ஏவாள். அதன் பின் ஆதாமை யும் மீறும்படி செய்தாள் என்று வாசிக்கிறோம். இங்கு பெண் ஆணுக்குக் கட்டுப்பட்டு நடந் திருந்தால் இயற்கையின் நியதி, அதாவது, ஆண்டவனின் படைப்பு குழப்பப்பட்டிருக்க மாட்டாது என்ற வாதமே மேலோங்கி உள்ளது. இதையே "கூனியில்லையேல் இராமய ணமே இல்லை" என்ற தொனியில் இராமாயணத்தில் கூறுகின்றனர். பெண் சொற்கேட்டு நடந்தால் உய் வில்லை என்ற கருத்தின் வெளிப் பாடாகவே இது காணப்படுகின்றது.

கர்ணபரம்பரைக் கதைகள் இவ் வாறு கூறினாலும் பெண்கள் மேற் கூறப்பட்ட "இயற்கையின் நியதியை" ஏற்று தாம் ஆணுக்குக் கீழ்ப்படிந்த வர்களாக இருக்கவேண்டும் என சில பெண்கள் எண்ணுகிறார்கள். சாதாரணமாக நமது சமூகத்தில் பெண்கள் "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்ற உளப் பாங்குடையவர்களாகவே காணப் படுகின்றனர்.

பூர்வீகக் குடிகளுக்குள்ளே இரு பாலாருக்குமிடையில் தொழிற் பகுப்புமுறை காணப்பட்டது. இதைக் கொழுப்பண்பாடு "home culture" எனக் கூறுவர். இங்கு குழந்தைக ளைப் பராமரிப்பதும், வதிவிடத் தைச் சுற்றிய காட்டுப்பகுதிக்குள் சென்று கரண்டி போன்ற சிறிய ஆயுதத்தினால் கிழங்கு வகைகளை எடுப்பதும் பெண்களின் பொறுப்பு. அதே போல் வெகுதூரம் காட்டுக் குச் சென்று வலிய மிருகங்களை வேட்டையாடுவது ஆண்களின் பொறுப்பு. இந்நிலை நிலமானியப் பிரபுத்துவ அமைப்பு முறையில் மாற்றத்திற்குள்ளானது. விவசாயத் தில் ஆண்கள் கடினமான தொழில் களைச் செய்ய பெண்கள் இலகு வான வேலைகளைச் செய்வதோடு வீட்டுப் பணியையும் செய்து வந்த னர். இந்நிலை இன்றும் எமது சமூ கத்தில் விவசாயத்தில் ஈடுபடுவோரி டம் காணப்படுகிறது.

தொழிற் புரட்சிக்குப் பின்பு இந் நிலையில் சிறிது மாற்றங்கள் உலக ளாவிய மட்டத்தில் ஏற்பட்டாலும் பொதுவில் ஒரு சாராரின் மேலா திக்கம் காணப்படவே செய்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் "பெண்ணின விடுதலை இயக்கம்" என்ற அமைப்பு உருவாகி இயங்கி வருவதை நாம் சர்வதேச ரீதியில் காண்கிறோம். இவ்விடயம் தொடர் பாக நாம் இரண்டு நிலைப்பாட்டி னைக் காணக்கூடியதாக உள்ளது. பாலியல் மேலாதிக்கம் உயிரியல் ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட தொன்று என்ற நிலைப்பாட்டைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொண்டவர்களில் ஒரு சிலரின் ஆய்வுகளினடிப்படையில் அமைந்த முடிவுகளைப் பார்ப்போம்.

லயனல் ரைகர், ரொபின் பொக்ஸ் (Lional Tiger, Robin Fox) என்போர் தமது ஆய்வில், மனிதர்கள் "உயிரியல் இலக்கணத்"தின் அடிப்படையில்தான் செயற்படுகின்றார்கள். அதன்படி "ஆண்கள் வலுவுள்ளவர்களாகவும், ஆக்கிரமிக்கும் குணம் கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர். பெண்கள் தாயாக இருப்பதும், குழந்தைகள் தாயுடன் அண்டியிருப்பதும் இதன் அடிப்படையில்தான்" என்கிறார்கள் இவ்விரு மானிடவியல் ஆய்வாளர்களும். ஆண்கள் வேட்டை ஆடுவதற்குப் பின்னப்பட்டிருக்கிறார்கள். இப்பின்னலை மாற்றியமைக்க முற்படுவது இயற்கைக்கு மாறாகச் செயற்படும் செயல் என வாதிடுகின்றனர்.

ஜோர்ஜ் பீற்றர் மோர்டொக் (George Peter Murdoc) என்பவர் இதற்காக 224 சமூகங்களை தனது ஆய்வுக்குட்படுத்தினார். இவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட சமூகங்களில் பூர்வீகக் குடிகளும் தற்கால நவீன வளர்ச்சியடைந்த குடும்பங்களும் அடங்கும். தனது ஆய்வின் முடிவில் "ஆண் வலிமையான தொழில்களைச் செய்வதற்கும், பெண் மென்மையான தொழில்களைச் செய்வதற்கும் ஏதுவாக அவர்களது உடலமைப்புக்கள் காணப்படுகின்றன" என்று குறிப்பிடுகின்றார்.

குழந்தையைச் சமூகமயமாக்குதலும், வளர்ந்தோரை நிலைநிறுத்துவதும் பெண்ணின் செயற்பாடு எனக் கூறும் தல்கொட் பார்சன்ஸ் (Talcott Parsons) தனது நிலைப்பாட்டிற்கு ஆதாரமாக உயிரியல் இலக்கணத்தை முன்வைக்கிறார். மேலும் வீட்டில் தந்தையின் குறைந்தகால அளவிலான பிரசன்னத்தை தனது நிலைப்பாட்டிற்கு ஆதாரமாக எடுத்து காட்டுகின்றார்.

இது சம்பந்தமாக மாக்சீயத்தின் நோக்கினைப் பார்த்தால் அங்கு "ஏங்கல்ஸ்", தனியார் சொத்துரிமை வளர்ந்ததால்தான் பெண்ணினம் அடக்கப்பட நேர்ந்தது என்றும் ஒரு தார மணமுறையானது சொத்தைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்டதென்றும் முன்மொழிகின்றார். இதன் மூலம் ஆண் தனது மனைவியையும் பிள்ளைகளையும் கட்டுப்படுத்தவும் முடிகின்றது என்று இவர் வாதிடுகின்றார். அதுமட்டுமன்றி இந்நிலையானது காலப்போக்கில் அற்றுப்போய்விடும் என்றும் கூறுகின்றார். மார்க்சும் ஏங்கல்சும், ஆணாதிக்கம் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து படிப்படியாக மழுங்கி வருகின்றது என்ற அபிப்பிராயத்தையும் கொண்டிருந்தனர். தொழில் வளர்ச்சியானது பல சிக்கல்களைத் தோற்றுவித்தாலும் பெண்ணின் நிலையை அது உயர்த்திவிடும் என்று மார்க்ஸ் கூறுகின்றார். ஆனால் முதலாளியின் மனைவி அடக்கி ஆளப்படுவாள். எனவே உற்பத்தி சாதனங்கள் தேசியமயமாக்கப்பட்டு பெண்ணடிமை நீக்கப்பட வேண்டும் என்றும் இவர்கள் கூறுகின்றனர்.




பெண்ணின விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவரும் ஒரு சமூகவியலாளருமான "ஆன் ஆக்லி" என்பவர் உயிரியல் இலக்கணம் பற்றிப் பேசுவோரை மிகவும் ஆவேசமாகச் சாடுகின்றார். "மேர்டொக்" ஆய்வுக்குட்படுத்திய 224 பல்வேறு சமூகங்களில் 14 சமூகங்களை எடுத்து ஆய்வுக்குட்படுத்தி மேர்டொக்கின் முடிவுகள் தர்க்கரீதியானதல்ல என்றும் முற்றிலும் முற்சாய்வுடையது எனவும் நிரூபிக்கின்றார். மேலும் 36 பன்னாட்டு சமூகங்ளைத் தனது ஆய்வுக்குட்படுத்தி, இரு பாலாருமே ஒரே சீரான வேலைகளைச் செய்கின்றனரென்றும், உயிரியல் இலக்கணம் இங்கு பொருத்தப்பாடு உடையதல்லவென்றும் நிலைநாட்டுகின்றார்.

உதாரணமாக கொங்கோ நாட்டில் எல்லாத் தொழிலிலும் பெண்கள் சரிநிகராகச் செயற்படுகின்றனரென்றும், தஸ்மானியாவில் பெண்கள் வேட்டையாடுவதிலும் ஆழ்கடல் மீன் பிடிப்பிலும் ஆணுக்குச் சரிநிகராக ஈடுபடுகின்றனரென்றும் வளர்ச்சியடைந்த சமூகங்களான ரஷ்யா, சீனா, கியூபா, இஸ்ரேல், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் ஆண்களைப் போல் பெண்களும் மிகவும் முக்கியமான தொழில்களில் ஈடுபடுகின்றனரென்றும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் உயர் தொழில்களில் பெண்கள் உள்ளனர் எனவும் இவர் தெரிவிக்கின்றார். அது மட்டுமன்றி உழைப்பில் ஈடுபடாத தாயுடன் ஒப்பிடும் போது உழைக்கும் தாய் குழந்தைகளில் அதிகமான பற்றுக்கொண்டவளாகவும் சினக்கும் தன்மை குறைவுடையவளாகவும் காணப்படுகின்றாள் எனக் கூறுகின்றார். எனவே பெண்ணின் ஆற்றலைக் குறைத்து எடைபோடுவது ஆணாதிக்கத்தினை நிலைபெறச் செய்வதற்கே என இவர் வாதிடுகின்றார். ஆணுடன் ஒப்பிடும்போது ஏனைய தொழில்களைச் செய்வதிலும் பெண் எவ்வகையிலும் குறைந்தவளல்ல என்பது ஆன் ஆக்லியின் நிலைப்பாடாகும்.

பிரசித்தி பெற்ற உளவியலாளரும், குழந்தை வளர்ப்புத் துறையில் நிபுணத்துவம் பெற்றவருமான புறூனோ பெற்றல் கீம் என்பவர் "குழுவாகப் பிள்ளை வளர்த்தல்" என்பது மரபு ரீதியான முறையிலிருந்து வேறுபடுவது மட்டுமல்லாது, ஒழுங்கமைந்த உருவாக்கத்தையும் சீரான சமூக மயமாக்கலையும் கொண்டுள்ளது எனக் கூறுகின்றார். இவரின் ஆய்வு இஸ்ரேல் நாட்டில் காணப்படுகின்ற "கிபுட்ஸ்" அமைப்பு முறையை ஆதாரமாகக் கொண்டது. தாய் - குழந்தை ஈடுபாடு குழந்தையின் சீரான சமூகமயமாக்கலுக்கு அவசியமானதல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

என்பது இவரது நிலைப்பாடாகும். "கிபுட்ஸ்" அமைப்பில் வளர்கின்ற குழந்தைகளுக்கு உளநோய், பொறாமை, வன்முறை, காடைத் தனம் போன்ற குணங்கள் மிகக் குறைவாகக் காணப்படுகின்ற அதே வேளை கடின உழைப்பு, பொறுப் புணர்ச்சி போன்ற நற்குணங்கள் அதிகமாகக் காணப்படுவதோடு பாடசாலையிலிருந்து இடைவிலகல் போன்ற நெறிபிறழ்வு சார்ந்த செயற் பாடுகள் வளர்ச்சியடைந்த மேற்கு நாட்டுப் பிள்ளைகளுடன் ஒப்பிடு கையில் மிகக் குறைவாகவே காணப் படுகின்றன எனக் கூறுகின்றார்.

இங்கு குழு வாழ்வின் நன்மை களை வலியுறுத்தும் அதேவேளை தனிப்போக்கினை வளர்ப்பதற்கு ஊக்கம் தரவுமில்லை. அது மட்டு மல்ல இங்கே வளர்க்கப்பட்ட பிள் ளைகள் பக்குவமடைந்து தம் வாழ் வில் பெற்றோராகின்றபோதும், அவர்கள் தமது பிள்ளைகள் மீது மிதமிஞ்சிய அன்பையோ அல்லது வெறுப்பையோ காட்டுவதில்லை என அவரின் ஆய்வுகள் கூறுகின் றன. பொதுவாக மேற்குநாடுகளில் மத்தியதர வகுப்பு, தொழிலாளர் வகுப்பு போன்ற சமூக அடுக்கமை வில் வளர்கின்ற குழந்தைகளிலும் பார்க்க "கிபுட்ஸ்" அமைப்பில் வளர் கின்ற குழந்தைகள் ஒருபடி மேல் நிலையில் உள்ளார்கள் என்பது இவ ரது முடிவாகும். எந்த ஒரு வேலை யையும் இது ஆணுக்கு அல்லது இது பெண்ணுக்கு என வகைப்படுத் துவது முடியாதது என புறூனோ கூறுகின்றார்.

பெண்களையும் அவர்களுக்கான தொழிற்சந்தைகளையும் எடுத்துக் கொண்டால் தாய்மனைசார்ந்த வேலை என்ற வட்டத்திலிருந்து பெண்கள் நாளுக்கு நாள் வெளியே றிக்கொண்டு செல்லும் வீதம் அதி கரித்துக்கொண்டே வருகின்றது. உதாரணமாக பிரித்தானியாவில் 1951-1976 இற்கிடைப்பட்ட காலப்பகு தியில் வேலை செய்யும் பெண்கள் 3 மில்லியனாகக் காணப்பட்டனர். இன்று திருமணமான பிரித்தானியப் பெண்களில் அரைவாசிப் பேர் தொழில் பார்ப்போராகக் காணப் படுகின்றனர். எப்படியிருப்பினும் இவர்கள் பெரும்பாலும் குறைந்த வருமானம் பெறும் தொழில்களில் தான் ஈடுபடுத்தப்படுகின்றனர். குறிப் பாக தாதி, ஆரம்பப் பயிற்சி ஆசி ரியை, தொழிற்சாலைகளில் சிறிய முடிவுப் பொருட்களை பொதி செய் தல், உணவு பரிமாறுதல், காசாளர், எழுதுவினைஞர், உதவிச் செயலர் போன்ற நடுத்தரத் தொழில்களில் அதிகமாகக் காணப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் வீட்டு வேலைகளைக் கவனிக்கும் பொறுப்பு பெரும்பாலும் இவர்களுடையதா கவே காணப்படுகின்றமையாகும். ஆசிரியத் தொழிலில் அரைவாசிக் கும் மேற்பட்டோர் பெண்களாகவும், ஆரம்பப்பள்ளிகளில் 3/4 பங்கினரா கவும் உள்ளனர்.

www.tamilarangam.net

சமூகவியல் நோக்கில் இவ் விடயத்தினை ஆராய்கின்றபோது, இது ஒரு மனித நடத்தைக் கோலம் என்று கூறலாம். ஒரு சமுதாயத்தை அதன் வளர்ச்சிக் கட்டத்தோடு தொடர்புபடுத்தித்தான் அங்கு வாழும் பெண்ணின் நிலை நோக் கப்பட வேண்டும். மரபுகள், வழக் காறுகள், நம்பிக்கைகள், செயற்பாடு கள் போன்றவை யாவும் பண்பாட் டின் வெளிப்பாடுகளாகும். அதே போன்று இருபாலாரின் சமூக நிலை யும் அச்சமூகத்தினுடைய பண்பாட் டின் வெளிப்பாடு எனக் கூறலாம். சமூக விழுமியங்கள் மாற்றமடை கின்ற போது இந்நிலைகளிலும் மாற் றங்கள் தோன்றுகின்றன.

**உயிரியல் இலக்கணம் பெண் ணின் சமூக நிலையைத் தீர்மானிக் கின்றது என்ற காரணி ஏற்றுக் கொள்ள முடியாது. பெண்ணின உயிரியல் இலக்கணப்படி குழந்தை யைப் பெற்றெடுக்க வேண்டிய கார ணத்தை அடித்தளமாக வைத்துப் பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளுவது இன்றைய காலகட்டத் தில் முற்றாகப் பொருந்தாது.**

நம் நாட்டில் நடைபெறுகின்ற நிகழ்வுகளைப் பார்த்து அவைகளின் உண்மையை உள்வாங்குகின்றவர் கள் பெண்களின் ஆற்றல்களைக் குறைத்து எடைபோடமாட்டார்கள் என்றே கூறவேண்டும்.

**ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை**

*சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர்,*

*யாழ். பல்கலைக்கழகம்.*

# பேய் ஆட்சி செய்தால்

**கொழும்பில் வீதியில் நடந்து கொண் டிருக்கும் ஒரு தமிழ் இளைஞனின், அல்லது யுவதியின் இதயத்துடிப்பு சாதாரணமாக இருப்பதில்லை. எதுவும் தமக்கு நடக்கலாம் என்ற அச்சம் அவர்களுக்குள் இதயத்தை பலமாக அடிக்கச் செய்கிறது. வாழ்க்கை யின் மீதும், சமாதானத்தின் மீதும் நம்பிக் கையிழந்து போன அவலம் முகங்களில் படர அவர்கள் வாழ்வு கழிகிறது.**

கொழும்பில் வகை தொகையின்றி தமி ழர்கள் கைது செய்யப்படுகிறார்கள். இவ் வாறு கைது செய்யப்படுகிறவர்கள் மீது, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறவர் கள் மீது மனிதாபிமானமற்ற முறையில் இரா ணுவம், பொலிஸ் நடந்து கொள்வது பற்றி மனித உரிமைகள் செயலணிக் குழு பல விதந்துரைகளைச் செய்திருக்கிறது. ஆனால் அவற்றை அவர்கள் காதில் எங்கே வாங் கிக் கொண்டார்கள்.

பேய் ஆட்சி செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள் என்னும் கதை போலத்தான்.

சந்திரிகா ஒரு பச்சை இனவாதி. தமி ழர்கள் மனிதர்களாக நடாத்தப்படவில்லை. தமிழர்கள் வீதிகளில், தெருக்களில் அவமா னப்படுத்தப்படுகிறார்கள் வாவிகளில் வெட் டிப்போடப்பட்டார்கள். தமிழ் இளைஞர்கள், யுவதிகள் காணாமற்போகிறார்கள். தேடுதல் நடவடிக்கைகளின் போது கைதுசெய்யப்படு கிறார்கள். இது குறித்து ஒழுங்கான முறைப் படியான தகவல்களை இராணுவமோ, பொலி சாரோ கொடுப்பதில்லை. தமிழர்களுக்கென் றால் நாட்டில் இயற்றப்பட்ட எந்தச் சட்ட விதிகளும் அங்கு மீறப்படும். அல்லது அது மாற்றி எழுதப்பட்டிருக்கும். இது 48 கால வருட தொடர்கதை. சந்திரிகாவால், ஐக்கிய தேசியக்கட்சி காலத்தில் நடந்த சிங்கள இளைஞர்களின் படுகொலைகளை ஆய்வ தற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த மனித உரிமைகள் செயலணி கொழும்பில் கூட ஒழுங்காக இயங்கவில்லை என்பது அங்கு வாழும் மக்கள் சிலரின் கவலை. இவ்வாறு கவலைப்படுவதால் அங்கொன்றும் ஆகப் போவதில்லை. கைதுசெய்யப்படும் போது மக்கள் தகுந்த ஆவணங்களை வைத்தி ருந்த போதும் சிங்களப் படையினர் வேண் டுமென்றே மக்களை மிரட்டி பணம் பறிக் கும் செயல்களிலும் இறங்கியிருக்கிறார்கள். இவ்வாறு அங்கு தமிழ் மக்களின் வாழ்வின் சகல தளங்களிலும் அதிர்வை ஏற்படுத்தி வருகின்றனர் சிங்களப் படையினர்.

சந்திரிகா தமிழ் மக்களின் பிரச்சினைக் கான தீர்வு இராணுவத் தீர்வே என்ற பிற் பாடு அவரால் நியமிக்கப்பட்ட மனித உரி மைகள் செயலணிக்குழு செவ்வனே இயங்க வில்லை என்றும் தமிழர்கள் என்றதும் அலட்சியம் செய்கிறது என்றும் இனி பேசு வதில் அர்த்தமில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அழகாய் இருக்கிறாள் அரக்கி

www.tamilarangam.net



– சே. போ. சிவனேசு

உலாத்து உலாத்து உலகமெல்லாம்
உனக்கென்ன?... செல்லச் சீமாட்டி!
ஊரூராய்ப் போய்ப் புளுகு
உனது கொடுக்கில்தான் தமிழ்ச் சனங்கள்

அழகியோ அழகியேதான்
அதுக்கென்ன?
அமைதிப்புறா வேடமுனக்கு
அமைச்சலாய் இருக்குமென்றா ஆடுகிறாய்?
போடீபோ போக்கற்றவளே!

கேட்டுப் பார்
பாதகி, பூதகி என்றெல்லாமல்லோ
ஆச்சி அடிக்கிறாள் தலை தலையாய்
பிசாசாம் -
தலை விரித்துக் காட்டுகிறாள்
சொன்னாலுஞ் சொன்னார் போ அப்பு,
"காரம்பசுவுக்கு நடிக்கத் திரிகிறாளடா
கொடுவாய்ப் பல்லி!"

இந்தா கேள் குஞ்சு குருமன்கள் பாடித்திரிவதை,
"வெள்ளைக் கலையுடுத்து
வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தை ஏந்திநிற்பாள்
அரக்கி!"

போதாதா?
போடீ போ!
உனது கொடுக்கிலோ தமிழ்ச் சனங்கள்?

குறித்துக்கொள் உனது வெற்றிக் குறிப்பேட்டில்
ஒக்ரோபர் 30, 1995!
ஊர்புகுந்த உன் ஓடுகாலிக் குஞ்சுகள்
ஊர்பிறந்த வேர்களை
ஓட விரட்டிய ஒக்ரோபர் 30!

இருள் நுழைந்து இருள் நுழைந்து
கண் கிடந்தும்
குருடர்களாய் தடுமாறிப் பயணித்து
நடுவிடையே
பாளம் பிளந்து நாக்குகள்
வெளி நீட்டி வெளி நீட்டி
வாறுைதறு தூறல்களை நக்க நக்க
நாயாக்கி வைத்த நாயகீ!....
உனது கொடுக்கிலோ தமிழ்ச் சாதி?

ஓ காளீ.... மா காளீ... வா காளீ...
நீட்டி நிமிர்ந்து மழை கிடந்த
உப்புச் செம்மணித் தரவைக்குள்
நெருக்குச் சனங்களிடை கைநழுவி
செத்த பிஞ்சுத் தமிழ்த் தலைகள் தாராளம்
பொறுக்கிக் கொள்
சட்டைக்கு மாட்ட வெற்றிப் பதக்கங்கள்!

புறாப் புறாவாய்க் கூவி
கதிரை குந்தி விட்டு
புறாவின் தானியத்தில் நஞ்சு தூவினாயே
இனியும் உனது கொடுக்கில்தான் தமிழ்ச்சனங்கள்!
ஓடு.... ஓடு
ஊரூராய்ப் போய்ப் புளுகு!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தோடருதல்...

சு. மகேந்திரன்

பதின்மூன்று... மைல்களைக் கடக்க, அவர்களுக்கு இருபது மணித்தியாலம் எடுத்தது. அப்படியானால் அவர்கள் நடந்த வேகம் 13/20 மைல்/மணி. அதாவது 0.65 மைல்/மணி. 'சாதாரண மனிதன் மணித்தியாலத்தில் நான்கு மைல் நடக்கலாம்' அப்பு சொன்னார். "எத்தினை தூரம் என்றாலும் நடப்பேன் சேர்"

ஏன் இவ்வளவு நேரம் எடுத்தது? இவ்வழியில் பாதையே இல்லையா? முட்களும் புதர்களும் நிறைந்த வழியா? இல்லையே. தார் ரோடுதான். கடந்த பத்து வருடமாக தார் ஊற்றாமல் விட்டதால் குண்டும் குழியுமாக இருக்கிறது. அது நடையின் வேகத்தை இவ்வளவு குறைக்காதே. மக்கள் வெள்ளம்தான் வேகத்தை தசம பின்னம் ஆக்கிவிட்டது. பீதி அடைந்த மக்கள். ஒரு திகில் நிறைந்த புது அனுபவம் எல்லோருக்கும்.

அறிவிப்பு வந்த போது மாலை 6 மணி. "இராணுவம் சுற்றி வளைக்கப் போகிறது. கிட்ட நெருங்கிவிட்டான் பகைவன். எந்த நேரமும் பயங்கர ஷெல் அடியும் விமானக் குண்டுவீச்சும் தொடங்கும். உடமைகளை எடுத்துக்கொண்டு உடன் பிறப்புக்களை அழைத்துக்கொண்டு, பாதுகாப்பாக தென்மராட்சிக்கும், வடமராட்சிக்கும் போங்கள்" 'ஒரு ஒஸ்ரின் கேம்பிறிச்' கார் ஒலி பரப்பிக்கொண்டு போனது. ஐந்து நிமிடங்களுக்குள் எத்தனை மாறுதல்.

கோவிந்தசாமியின் புதல்வர்கள் மருதடி வினாயகருக்கு தில்லானா வாசித்துக்கொண்டிருந்தவர்கள் வாசிப்பைச் சட்டென நிறுத்தினார்கள். பூச்சப்பரத்தில் வந்துகொண்டிருந்த சாமியை அவசரமாக கோயிலுக்குள் இட்டுச் சென்றனர் பக்தர்கள். ஆண்கள் அரையில் கட்டியிருந்த சேட்டுக்களை அவசரமாக மேனியில் மாட்டினர். எல்லோரும் அவரவர் வீட்டிற்கு ஓடினர்.

ராஜன் வீட்டிற்குப் போனபோது, அம்மாவும், மனைவியும், தங்கையும் ஆரவாரப்பட்டுக்கொண்டிருந்தனர். கந்தசஷ்டிப் பாறணைக்குச் சமைத்த பாத்திரங்கள் கழுவாமலேயே உரப்பையில் அடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

ஷெல் அடி கிட்டக் கிட்டக் கேட்குது. நாவற்குழிப் பாலத்தைக் கடந்து விட்டால் நிம்மதிதான். அம்மாவையும் தங்கையையும் பக்கத்து வீட்டுக்காரரின் மினி ட்ரக்ரரில் ஏற்றி ஆகிவிட்டது. பக்கத்து வீட்டுக்காரர் நேரே கிளிநொச்சிக்குப் போகப் போகிறார்களாம். அம்மாவையும், தங்கையையும் சாவகச்சேரி புதிய சந்தைக் கட்டிடத்துக்கு அண்மையில் இறக்கிவிடச் சொன்னான் ராஜன். அவர்களும் சரி என்றனர். அம்மா பக்கத்து வீட்டு ராஜிக்கு ஆங்கில ரியூசன் கொடுத்ததால் கிடைத்த சலுகையிது.



ராஜனும் மனைவியும் நடக்கத் தொடங்கினர். அப்பு பின் தொடர்ந்தார். ஒரு பையில் உடுப்புக்களும் மற்றொன்றில் சமையல் பாத்திரங்களும். புத்தகங்களையும் எடுக்க நினைத்தான் ராஜன். முடியாது. சயிக்கிளை உருட்டிக்கொண்டு நடக்க வேண்டுமே.

சனம்.... சனம்.... சனம். எவ்வளவு பேர் றோட்டில். ஷெல்லடி தூரத்தே கேட்டது. இருட்டு வேறு. நகரத்தை வந்து சேரும் வரை காலை நீட்டி நடக்கக் கூடியதாக இருந்தது.

ராஜனின் மனைவியின் அக்கா நல்லூரடியில் வசிக்கிறார். "அங்கு ஒருமுறை போய் பார்த்துவிட்டுப் போவோம்" என்றாள் ராஜனின் மனைவி கீதா.

ராஜன் சாட்டுக்கள் சொன்னான். 'முன்னேறிப் பாய்ச்சல், நடவடிக்கையின் போது, அங்கு போய் நின்றார்கள். ராஜன் போராட்டத்துக்கு ஆதரவாகக் கதைக்க, 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கை நடந்து அவர்கள் வீடு திரும்பும் வரை ராஜனின் சகலன் மார்க்கண்டு ராஜனுடன் முகங் கொடுத்துக் கதைக்கவே இல்லை.

"அவர்கள் வெளிக்கிட மாட்டார்கள்" என்றான் ராஜன்.

"கட்டிய வீட்டை விட்டு அந்த மனிசன் வெளிக்கிடாது"

"எனது உடன்பிறப்பை ஒரு முறை பார்த்து விட்டுத்தான் வருவேன்" என்றாள் கீதா.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அங்கு போனபோது அவர்கள் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். சாமான்கள் அடுக்கப்பட்டு சயிக்கில்களில் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. கீதாவின் அக்கா சீதா, கணவன் மார்க்கண்டு, இரண்டு பிள்ளைகள். நான்கு சயிக்கில்களில் சாமான்கள். எல்லோரும் புறப்பட்டார்கள்.

நெரிசல் அதிகரித்தது. கச்சேரியடிக்கு வந்த பின்பு கூட்டம் நகரவே இல்லை. காலையில்தான் கூட்டம் நகர ஆரம்பித்தது. மழை பெய்யத் தொடங்கியது. வியர்வையால் உடம்பு பிசுபிசுத்தது. வழி எங்கும் வாகனங்கள். ஒழுங்குகள் எதுவுமற்று மக்கள் போய்க்கொண்டிருந்தனர். அரியாலையைக் கடக்கும் பொழுது, காலை பத்து மணியாகிவிட்டது. செம்மணிப் பாதையாலும் சனம் வந்துகொண்டிருந்தது. இல்லை இல்லை. சனம் உண்மையில் ஊர்ந்துகொண்டுதான் இருந்தது. எங்கள் பாதையில் இருந்து செம்மணிப் பாதையைப் பார்த்த போது, அங்கு சனம் நிலையாக நிற்பது போல் தோன்றியது. இரண்டு பாதைகளும் சந்திக்கும் பொழுது நெரிசல் எப்படி இருக்கப் போகிறது. நினைக்கவே பயமாக இருந்தது. வயலில் இறங்கிப் போய் சுற்றுப் பாதையால் வந்து திரும்பவும் றோட்டில் ஏறினார்கள். ஒரு முறை வயல் வரம்பில் சறுக்கி விழுந்து ராஜனின் 'லோங்ஸ்' எல்லாம் சேறு. மீண்டும் மழை பெய்யத் தொடங்கியது. குடையைப் பிடித்தார்கள். தாகம் எடுத்தது. ஆட்கள் இல்லாது இருந்தால் வயல் தண்ணீரைக் கூட எடுத்துக் குடித்திருப்பார்கள். இப்போது எல்லோரும் வயலுக்குள் உழக்கியதால் அது சேறாகி விட்டது. குடையால் சொட்டுச் சொட்டாக வந்த தண்ணீரை ரம்ளரில் ஏந்தி ராஜன் குடித்தான். மழை நீர் அதிக அமிலச்சுவை உடையதாக இருந்தது. எப்போதோ படித்த இரசாயனவியல் ஞாபகத்துக்கு வந்தது.



கந்தக ஒக்சைட் + நீர் = சல்பூரஸ் அமிலம்

நைதரஸ் ஒக்சைட் + நீர் = நைதரஸ் அமிலம்

பத்து வருடங்களாக எவ்வளவு குண்டுகள் போட்டிருக்கிறான் எதிரி. மழை நீர் அமிலச்சுவையாக இருப்பதில் வியப்பில்லை.

பாலத்துக்கு வந்துவிட்டார்கள். மகனைத் தொலைத்துவிட்டு கதறி அழும் ஒரு தாய். அனுதாபப் பார்வையை மட்டுமே காட்டக் கூடிய நிலையில் மக்கள் கூட்டம் இருந்தது. மேலே சத்தம் கேட்டது. இரண்டு மூன்று முறை சுற்றிவிட்டு ஒன்றும் செய்யாமல் சென்றுவிட்டான் சண்டாளன். சனம் எழுப்பிய அவலக்குரல் நின்றது. நீர்வேலிப் பக்கமிருந்து பயங்கரமாகச் 'ஷெல்' அடிக்கும் சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது.

www.tamilarangam.net

நாவற்குழியைத் தாண்டி விட்டார்கள். மேலும் நடந்து கைதடியை அடைந்தார்கள். பயம் நீங்கிவிட்டது. இனி இராணுவத்திடம் அகப்பட மாட்டான் ராஜன். சொத்துக்களை இழந்த நிலைதான் என்றாலும் நிம்மதி. போராட்டத்திற்கு துணையாக நிற்கலாம்.

சிறிது இளைப்பாறினார்கள். தேனீர் அருந்தினார்கள். தொடர்ந்தும் சாவகச்சேரி வரை நடை. சந்தையில் ராஜனது அம்மாவும் சகோதரியும் நின்றார்கள். தேடுதல் இல்லாமல் சுலபமாக இது அமையுமென ராஜன் நினைக்கவில்லை. வழியில் நடந்து வரும்போது, ராஜன் மனைவிக்கு கூறியது போலவே சாவகச்சேரியில் ஒலிபெருக்கி காணாமல் போனவர்களின் ஊர்பேர்களை இடைவிடாமல் ஒலிபரப்பிக்கொண்டிருந்தது. "சுண்ணாகம் ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த இராசரத்தினத்தை அவரது மனைவி அகிலாண்டேஸ்வரி தேடுகிறார். உடனே காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும். பச்சிளம் பாலகர்கள் அழுதவண்ணம் உள்ளார்கள். குழந்தைகளை இழந்த பெற்றோர்கள் உடனே இங்கு வரவும்."

ராஜனின் சகலனது பூர்வீகம் சாவகச்சேரியாம். வீடுகள் தங்களது வரவிற்காக திறந்திருக்கும், வரவேற்பார்கள் என்றார் அவர். கச்சாய் றோட்டால் போனார்கள். மார்க்கண்டுவின் மூன்றாம் தலைமுறை உறவு. அகால நேரம் (இரவு ஒன்பது மணி) அந்தப் பகுதியே மார்க்கண்டுவுக்கு மறந்துவிட்டது. முதலாவதாக போனவீட்டின் உரிமையாளர்கள் ஊரிலில்லை. கொழும்புக்குப் போய் நான்கு வருடங்கள் ஆகிறதாம். தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து அந்த வீட்டில் வசிப்பவர் கூறினார். வேறொரு வீட்டிற்குப் போனார்கள். வரவேற்பு உற்சாகமாக இருக்கவில்லை. விறாந்தையில் கட்டையை நீட்டினார்கள். அவர்களது சம்மந்திகள் மாட்டுவண்டியில் வந்துகொண்டிருக்கிறார்களாம். நாளை வேற இடம் பார்த்துவிட வேண்டும்.

விடிந்ததும் மார்க்கண்டுவின் ஒன்றுவிட்ட அக்கா ஓடோடி வந்தாள். வீடும் கிடைத்தது. இனி நிம்மதிதான் என ராஜன் நினைத்தான். சகலனின் அக்காவின் குடும்பத்தினர் நல்லவர்களாக இருந்தார்கள்.

சாவகச்சேரியில் பாணுக்கு நீண்ட 'கியூ' நின்றது. காலைக்கு பச்சரிசிக் கஞ்சி என்றாகியது. பகலில் ஒரு குழம்புடன் சோறு. இரவில் குழையல். ராஜனின் மாடுகளைப் பராமரித்த அப்பு அவர்களுடன் வந்திருந்தார். உதவியாக இருந்தார். ராஜனின் சகலனுக்கு அவர்களுடன் இருப்பது பிடிக்கவில்லை. யாருக்கும் ஈயாத கை.

ஈழநாதம் வெளிவரத் தொடங்கியது. ராஜனின் சகலன், "இதை வாங்காதீர்கள். புரட்சிக் கவிதைகள் எல்லாம் வரும். பிள்ளைகளும் இருக்கின்றார்கள். என்ன செய்திதான் தேவை. வீடுகள் எல்லாம் போய் விட்டது. இவற்றை வாசித்துத்தான் என்ன வரப்போகி றது" என்றார்.

www.tamilarangam.net

முரண்பாடுகள் கிளைவிட ஆரம்பித்தன. அப்புவும் ராஜனும் அரசியல் பேசினார்கள். போராட்டத்தில் இளைஞர்கள் தொகையாக இணையாவிட்டால் முற்றி லுமான அழிவுதானென்றார் அப்பு.

மார்க்கண்டு வசதிக்காரர். சாமான்களை எடுக்க சனம் யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்தது. ராஜ னின் சகலன் மினிட்ரக்ரர் பிடித்தார். ராஜனின் மனைவி, சும்மா போகும் ட்ரைக்ரரில் ராஜனை சயிக் கிலுடன் ஏற்றிக்கொண்டால் உதவியாக இருக்குமென மார்க்கண்டுவை கேட்டாள். மறுத்தார் மார்க்கண்டு. அப்பு கண்ணாடி பார்த்து தலை சீவுகிறாராம். ரேடி யோவைப் போட்டு செய்தி கேட்கிறாராம். ஆமிக்கா ரன் பெரும் இழப்புக்களைச் சந்திக்க, ஷெல் அடித்து வீடுகளை எல்லாம் உடைக்கப் போகின்றான் என்கிறா ராம். மார்க்கண்டு உருவந்தது போல் கத்திக்கொண்டி ருந்தார்.

மார்க்கண்டு கண்டபடி ராஜனை ஏசினார். உடனே வெளிக்கிட வேண்டுமென்றார். அந்த வீட்டுக்காரர்கள் தாங்கள் போகச் சொல்லவில்லை என்றார்கள். அந்த வீட்டில் நடந்த ஒன்பது கலியாணங்களில் ஒன்றுக்கா வது வராத மார்க்கண்டு, "அக்கா இவர்களைப் போகச் சொல்" என்றார். அவர்கள் எதுவுமே சொல்லவில்லை.

"டோய் மொட்டையா உனக்கு இங்கயிருக்க வெட் கமாக இல்லையா" என்றார் மார்க்கண்டு.

"எங்களுடன் தானாகவே வந்து சேர்ந்து கொண்டு மண்வெட்டிகளுக்கு தலைப்பாகை சுற்றி உழைத்த காசு (ஓவசியர் வேலை) பேசும்தான்" என்றான் ராஜன். "உன் னைத் தொலைத்துக் கட்டுகிறேன் பார்" வீராவேச மாக எழுந்தார் மார்க்கண்டு. கீதாவின் சகோதரி அவ னைப் பிடித்துக்கொண்டாள்.

'ஹாட்டற்ராக்கில்' ஆஸ்பத்திரியில் மார்க்கண்டு படுத்திருந்தபோது துணையாக பத்து நாள் தரையில் படுத்திருந்ததை ராஜன் நினைத்துக்கொண்டான்.

எங்கே போவது? அம்மாவோ வருத்தக்காரி. ராஜ னுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை.

கொடிகாமத்துக்குத்தான் போகவேண்டும். முந்தநாள் அங்கு போனபோது, நண்பன் சந்திரன் வீட்டில் எத் தனை பேர் இருந்தார்கள்? முப்பதாவது இருக்கும். எம் முடன் சேர்த்து முப்பத்தேழாகிவிடும். பரவாயில்லை. சந்திரன் சமாளிப்பான். புன்முறுவலுடன் கூடிய அவ னது முகம் எதையும் 'அஜஸ்ட்' செய்யும் அவனது பண்பு.

பஸ்ஸில் போய் இறங்கினார்கள். யாழ்ப்பாணத்திலி ருந்து பஸ் கொடிகாமத்துக்கு, முன்பெல்லாம் இருபது ரூபாய். சாவகச்சேரியில் இருந்து கொடிகாமத்துக்கு நாற்பது வாங்கினார்கள். சென்றமுறை போனபோது, இருந்ததை விட வீடு சனம் குறைந்து காணப்பட்டது. பலர் வேறு வீடுகளைத் தேடிக்கொண்டு விட்டார் களாம்.

"முன்பே வந்திருக்கலாம். அத்தானின் குணம் தெரிந் தும் வந்தவுடன் விலகிப் போயிருக்க வேண்டும்" ராஜ னின் மனைவி கூறினாள். உறவு முறிந்திருக்காது.

"முரண்பாடுகளைக் கொண்ட உறவு உடைந்தது நல்லதுதான்" என்றான் ராஜன். எனினும் அவர்கள் கச்சாய் ரோட்டில் இருந்து வெளிக்கிட்ட போது, கண் ணீருடன் கீதாவின் அக்கா விடை கொடுத்ததை நினைத்த போது, கீதா மேல் இரக்கமாக இருந்தது.

சந்திரன் வீட்டில் இரண்டு நாட்கள் ஒன்றாகச் சமைத்தார்கள். அதன்பின் சமையல் வேறாகியது. கறி கள் பரிமாறப்பட்டன.

ராஜன் கதைகள் எழுதுபவன். எழுதிய கதைகள் எல்லாம் போராட்டம் சம்பந்தமானதுதான். போரின் கொடூரத்திலும் கூட அந்த வீட்டில் நடக்கும் எல்லாமே உவப்பானதாக இருந்தது. இலங்கை வானொலி கூறும் பொய்களை கேட்டுச் சிரித்தார்கள். உலகில் சாத்திரம் சொன்ன முதல் வானொலி இதுதான். இரவில் இயக்க வேலைகளை முடித்துக்கொண்டு உருண்டை முக ஓவியன் வருவான். போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தாங்கள் செய்ய வேண்டியது பற்றி விவாதித் தார்கள். மன உழைச்சலால் எழுதமுடியாமல் ராஜ னுக்கு இருந்தது. எனினும் முயலத்தான் வேண்டும். போராட்டத்தை மையப்படுத்திய கதைகளையும் கவிதைகளையும் எழுதத்தான் வேண்டும். அது அவனது தார்மீகக் கடமை. ராஜன் பேனாவையும் பேப்பரையும் எடுத்தான். எழுதத் தொடங்கினான்.

## கல்விக் கண்களை குத்திக் குருடாக்க என்றே...

**தமிழீழ மாணவர்களின் கல்விக் கண்களை குத்திக் குருடாக் குவதில் சந்திரிகா அரசு ஒரு வெறியோடுதான் செயற்படுகிறது. தமிழீழத்தின் எதிர்கால சந்ததியினரை ஆரோக்கியமற்றவர்க ளாக்கி போராட்டத்தை முடங்கப் பண்ணும் தந்திரோபாயங்க ளில் ஒன்றாக சந்திரிகா அரசு கல்வியைச் சீரழிப்பதிலும் கண் ணாக இருந்து வருகிறது.**

**சந்திரிகா அரசின் இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து அகதிகளாக இலட்சக்கணக்கான மக்கள் பாடசாலை களில் தங்கியிருக்கிறார்கள். இதனால் பாடசாலைகளை நடாத்த முடியவில்லை. பாடசாலைகளில் வாழும் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான செயற்பாடுகளையும் சிறிலங்கா அரசு தடுத்து வைத்திருக்கிறது. இது விடயத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வந்த போதிலும், இதனை நடைமுறைப்படுத்த விடாது சிறிலங்கா அரசு திட்டமிட்டு தடை செய்கின்றது.**

**வதிவிடங்களை அமைப்பதற்கான கூடாரங்கள், உபகரணங் கள் ஆகியவற்றை, கொழும்பில் அனுமதிபெற்று கொண்டுவந்த போதிலும் அவை வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன. பாடசாலை உபகரணங்கள் பலவும் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.**

**இடம்பெயர்ந்த மக்களில் 52,727 பேர் நூற்றி எழுபது பாட சாலைகளில் தங்கியுள்ளனர். அவர்களை மீளக் குடியமர்த்தி, பாடசாலைகளை திறக்க உதவும் செயற்பாடுகளில் அவ்வப் பிரதேச சமூக நலன் விரும்பிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரை ஒத்து ழைப்பு வழங்கி சகல தடைகளுக்கு மத்தியிலும் கல்வி நடவடிக் கைகளை விரைவுபடுத்துமாறு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை கேட்டிருந்ததைத் தொடர்ந்து மீளக் குடியமர்த்தும் செயற்பாடுகளில் அனைவரும் உடனடி நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்தமிழரின் நடனத்தனித்துவங்களை நோக்கிய ஒரு தேடல்



சமூக மானுடவியல் அணுகு முறைகளையும், வழக்கில் எஞ்சி நிற்கும் கூத்து வடிவங்களையும், நாட்டார் வழக்கியற் கையளிப்பினையும் பின்புலமாகக் கொண்டு ஈழத்தமிழரின் நடனத் தனித்துவங்களை நோக்கிய ஆய்வை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கூத்து வண்ணர், கூத்து மாதவர், கூத்துப் பெருமாள், கூத்துக் கந்தர், கூத்துச் சுப்பர், கூத்து நாகர், கூத்து வேலர் என்றவாறு மிகவும் பரந்த அளவிலான பெயர் வழக்குகள் நாட்டார் மரபுகளில் காணப்படுகின்றன.

மனிதரின் தொழிற்பாடுகள், விலங்குகளின் அசைவுகள், காற்று, மழை போன்ற இயற்கைச் சலனங்கள் என்றவாறு மிகப்பரந்த எண்ணக்கரு விளக்கம் ஈழத்துப் பாரம்பரியத்திலே கூத்துக்கு வழங்கப்பட்டது. "அனைத்தும் கூத்து" என்ற தொடர் இதற்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. இவ்வாறான கருத்து பண்டைய கிரேக்கத்திலும் நிலவியது. "உலகம் அனைத்தும் நடனம் ஆடும்" (All the earth will dance - EURIPIDES - Bacchae - 144) என்று எடுத்தாளப்பட்டுள்ளது.

ஈழத்தமிழர் மரபில் கூத்து என்பது ஒத்திசைவு மேவிய தனியாள் அசைவுகளுடன் (rhythmic movements) தொடர்பு கொண்டிருக்கும் பொழுது "ஆட்டம்" என அழைக்கப்பட்டது. குறியீடுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பொழுது "சாடையாட்டம்" என்று குறிப்பிடப்பட்டது. கால் அசைவுகளின்றி திண்ணையில் இருந்தவாறே சாடையாட்டத்தை நிகழ்த்திக்காட்டும் மரபு நிலவியது. இட அசைவுகள் ஏற்படாது அதாவது புடைபெயராது இருந்து நிகழ்த்தும் ஆட்டமாகச் சாடையாட்டம் அமைந்தது.

உடல் அசைவு, அபிநயம், இசை, கூட்டு முயற்சி என்பவற்றுடன் இணைந்த வடிவமே "கூத்து" என்ற எண்ணக் கருவினால் வெளிப்படுத்தப்பட்டது. உள உந்தல்கள், மனவெழுச்சிகள் என்பவற்றின் வெளிப்பாடுகளாகக் கூத்து அமையும் பொழுது "துள்ளல்" என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படலாயிற்று. மனச்சோர்வின் பொழுது வெளிப்படுவது "மங்கு துள்ளல்" என்றும், பூரிப்பின் பொழுது வெளிப்படுவது "பொங்கு துள்ளல்" என்றும் கிராமிய மரபில் அழைக்கப்படலாயிற்று.[1]

ஈழத்தமிழரின் கூத்து மரபில் "விடுநிலை" என்ற பண்பும் காணப்பட்டது. இசை ஒருவிதமான ஒத்திசையில் நிகழ, கூத்து வேறொருவித ஒத்திசைவில் ஆடப்பெறுவது "விடு நிலை ஆட்டம்" எனப்படும். இப் பண்பு கிரேக்க நாட்டுக் கூத்துகளிலும் காணப்படுதல் சுட்டிக்காட்டப் படத்தக்கது.[2]

ஈழத்தமிழரின் நடன மரபு உடற் கூறுகளின் ஆய்வு, சித்தமருத்துவம் என்பவற்றுடன் இணைந்த ஒரு கலை வடிவமாக முகிழ்த்தெழுந்தது. தசைநார்கள், மூட்டுக்கள், நரம்பு மண்டலம் என்பவற்றுடன் இணைந்த வகையில் "இசைவு", "வசைவு" என்ற பெரும் முனைகளுக்கு இடைப்பட்ட வீச்சுக்களை நடனம் கொண்டிருந்தது. உடலசைவுகள் வாயிலாக இயக்கச் சமநிலையை ஏற்படுத்துதல் "இசைவு" என்றும், சமநிலையைக் குலைத்தல் "வசைவு" என்றும் குறிப்பிடப்பட்டது. சம நிலையை நோக்கிய அசைவுகளும் சமநிலையைக் குலைக்கும் அசைவுகளும் மாறிமாறி இடம்பெறுதல் "வன்னம்" எனப்பட்டது.[3]

நிலம், நீர், தீ, காற்று, வானம் என்ற ஐம் பூதங்களையும் பாவனை செய்யும் கூத்துக்கள் ஈழத்தமிழர் மரபிற் காணப்பட்டன. நிலம் அசையாப் பொருளாகையால் கால் அசைவுகளின்றித் தரித்து நின்று அல்லது தரித்து இருந்து உடலசைவுகளாலும், கண்வனைவாலும், முகவனைவாலும் காட்டும் நடனங்கள் நிலம் பற்றிய கலைத் தொடர்பாடலைக் கொண்டிருந்தன. நீர், தீ, காற்று ஆகிய முப்பொருளையும் விளக்கும் நடனங்கள் "ஒலி எழுப்பி" என்றவாறு கூக்குரலிடும் நடனங்களாக அமைந்தன. நடனம் பற்றிய மானுடவியல் ஆய்வுகள் ஒலி எழுப்பி நடனங்கள் (Voice making dances) உலகெங்கும் உள்ள தொல் குடியினரிடத்துக் காணப்படும் பொதுப் பண்பு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர்.4

இந்த நடனத்தின் நோக்கங்கள் இயற்கையை வசப்படுத்தி பயிர் விளைவுப் பெருக்கைத் தூண்ட முயற்சித்தலும், தீமைகளை விரட்டியடிக்க விளைதலுமாகும். இயற்கையை வசப்படுத்தும் நடனங்களில் கைவிரல்கள் குவிந்து உடலை நோக்கி வருதல் போன்ற அசைவுகள் ஈழத்தமிழர் பாரம்பரியத்தில் இடம்பெற்றன. இது "குவிகை" எனப்பட்டது. கைகள் பரந்து திசையப்படுதல் "விரிகை" எனப்பட்டது.

வானத்தைப் பாவனை செய்யும் நடனங்களில் தோள், தலை என்பவற்றுக்கு மேலாகக் கைகளை உயர்த்தி விரிகை, குவிகை என்பன நிகழ்த்தப்படும்.

பருவ காலங்களைப் பாவனை செய்யும் நடனங்களும் வழக்கில் இருந்தன. இவை "பாளையாட்டங்கள்" எனப்பட்டன. பருவங்கள் சுழன்று வருவதால் இந் நடனங்கள் வட்டச் சுற்றுகை, நீள்வட்டச் சுற்றுகை, பிறைச்சுற்றுகை கொண்டவையாக அமைந்தன. இலைதளிர் காலம் முழு வட்டச்சுற்றுகையினால்

கலாநிதி சபா. ஜெரராசா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புலப்படுத்தப்பட்டது. பின்னோக்கிச் சுழலுதல் அல்லது பாதங்களைப் பின்னோக்கி வைத்திருத்தல் "பிற்காற் புலப்பாடு" எனப்பட்டது. அது முன்பனிக்காலத்தைக் குறிப்பிட்டது. பாதங்களை முன்னோக்கித் திருப்புதல் "முற்காற் புலப்பாடு" எனப்பட்டது. அது முன்பனிக் காலத்தை வெளிப்படுத்தியது.[5]

அரை மண்டி ஆட்டங்கள் வாயிலாக மாரிகாலம் புலப்படுத்தப்பட்டது. நீர் நெளிவுகளைக் காட்டும் குறியீடுகளும் இவ்வகை நடனங்களுடன் இணைந்திருந்தன. தீச் சுவாலைகளின் பாய்ச்சலைக் காட்டும் பாய்ச்சல் அசைவுகள் கோடை காலத்தின் குறியீடுகளாக்கப்பட்டன. இவை "தாவல் ஆட்டம்" எனப்பட்டது.

சுற்றுகை நடனங்களில் நடுப்பொருளாக வண்ணங்கள் பூசப்பட்ட விரிந்த வடலி ஓலை நீள் மட்டையுடன் நடப்பட்டது. பாரமிட்டு அழுத்தி வைக்கப்பட்ட வடலி ஓலையே இதற்குப் பயன்படுத்தப்பட்டது. அழுத்திவைக்கும் செயல் முறை "கரம் போடுதல்" என்று நாட்டார் வழக்கிற் குறிப்பிடப்பட்டது. வண்ணம் பூசப்பட்ட பனை ஓலை தானியம் நிரப்பப் பெற்ற பானையுள் நிறுத்தப்பட்டது. "கூத்து ஓலை", "கூத்துப் பானை" "கூத்துத் தினை" போன்ற தொடர்கள் வழக்கில் இருந்தன.[6]

விலங்குகள், பறவைகள் முதலியவற்றை உற்று நோக்கலும் அவை பற்றிய அறிகை முறைமையும் ஈழத் தமிழரின் நடனங்களிலே செல்வாக்குச் செலுத்தின. மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும் பொருட்டு விலங்குகளும், பறவைகளும் நடனம் ஆடும் என்ற நம்பிக்கையும் நிலவியது. விலங்குகளிடத்துப் பெறும் பயன்களை அதிகரித்தல், அவற்றின் கருவளத்தைப் பெருக்குதல், விலங்குகளைக் காவலுக்கு அழைத்தல், அவற்றின் உடற்பலத்தைப் பெற்றுக்கொள்ளல் என்ற தேவைகளின் பொருட்டு நடனங்கள் இயற்றப்பட்டன. மான் ஆட்டம், மயிலாட்டம், பாம்பாட்டம், மீன் ஆட்டம், கொம்பன் ஆட்டம், குரங்காட்டம், குதிரையாட்டம், இவ்வகை ஆட்டங்களிலே பல குரல் தொடுப்பும் (chorus) இடம் பெற்றது. பலகுரல் தொடுப்பு விலங்குகளின் ஒலிகளைப் பிரதி செய்வதாக அமைந்தது.

www.tamilarangam.net

# குமாரபுரம்:
# குருதியில் குளித்த ஒரு கிராமம்

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தில் கிளிவெட்டிப் பகுதியில் அமைந்த ஒரு குக்கிராமம். எண்ணிக்கையில் மிக அதிகமான வீடுகள் இல்லை. விவசாயத்தையும் விவசாயம் சார்ந்த கூலித் தொழில்களையும் நம்பி 'அன்றாடம் உழைத்து உலை ஏற்றும் நிலைதான் எப்போதும். அரண்மனை போன்ற மாடமாளிகைகள் இல்லைத்தான். ஆனாலும், உழைத்த களைதீர கால்நீட்டிப் படுத்துறங்க சொந்த வீடுகள் உண்டு. மண்ணால் சுவரெழுப்பி ஓலைவேய்ந்த மாளிகைகள். வியர்வை சிந்தி சிறுகச் சிறுகச் சேர்த்த சொத்துக்கள்.

12-01-96 அன்று அதிகாலை இருள் விலகாத பொழுது. உறக்கம் கலையாத ஊரின் எல்லையில் இயந்திர வாகனங்களின் உறுமல் அமைதியைக் கிழித்து வீசிய சத்தம் காற்றிலே கேட்டது. நாய்களின் ஊளை ஊரை உலுப்பியது. தூக்கம் கலையாத முகத்துடன் பதட்டம் பிடரியைப் பிடித்துத்தள்ள..... என்ன...? ஏது...? விசாரிக்க முன்னரே வேட்டுக்கள் அங்கொன்றும்... இங்கொன்றுமாய்.....

"ஐயோ...!" "அம்மா..!" மனித உயிர்களின் பரிதவிப்பு

கையில் கத்திகளுடனும் துப்பாக்கிகளுடனும் சிறீலங்கா இராணுவமும் ஊர்காவல்படையினரும் நரபலி தேடி ஒவ்வொருவராய் துரத்தி துரத்தி.... இழுத்துப் பிடித்து..., வெட்டிச் சரித்து.... குத்திக் குதறி.... சாகப் போகின்ற அந்த அப்பாவி மனித உயிர்களின் பரிதவிப்பைப் பார்த்து கெக்காளமிட்டுச் சிரித்துக் கொண்ட மிருகங்கள்... இன்னும்.... இன்னும் தொடர்ந்து வெறிக்கூத்தாடின.

உயிர் காக்க... ஓடிப்போனவர்களையெல்லாம்.... துரத்திப் பிடித்தனர். இளம்பெண்களை பாலியல் பலாத்காரப்படுத்தி.... ஆண்கள் - பெண்கள் - குழந்தைகள் என 40க்கு மேற்பட்ட அப்பாவி மனிதர்கள் துடிதுடித்து.... துடிப்படங்கிப் போயினர். சின்னஞ்சிறு பாலகர்கள் பலரே பரிதாபமாகக் கொலையுண்டனர். ஒரு கர்ப்பிணித் தாயைக் கொன்றதோடு அவளின் வயிற்றைப் பிழந்து சிசுவை வெளியில் எடுத்து வீசி இருந்தனர் அக்கொடியோர். 30-க்கு மேற்பட்டோர் படுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டனர். அதிகாலைப் பொழுது விடிந்தபோது அந்தக் கிராமம் மனித இரத்தத்தில் குளித்துக் கிடந்தது. காலைச் சூரியன் அந்த இரத்தச் சேற்றை அப்பிக்கொண்டு கனலத் தொடங்கியது.

ஈவிரக்கமின்றி அப்பாவி மக்களின் இரத்தம் குடித்த அந்த நரமாமிசப் பட்சிகள் திரும்பிப் போய்விட்டனர். இதனை எந்த மனிதாபிமான காவலர்களும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. தங்கவேலாயுதபுரம், கொக்கட்டிச் சோலை, நவாலி, நாகர்கோயில்.... படுகொலைத் தொடரில் மாரபுரம் சேர்ந்துகொண்டது.

சிறீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழர் பிரதேசங்களைக் கைப்பற்ற மேற்கொள்ளும் பல்வேறு வழிமுறைகளில் இப்படியான காட்டுமிராண்டித்தனமான மனித நாகரிகமற்ற படுகொலைகள் என்பன நெஞ்சை உலுப்புவன; இதயத்தைச் சுட்டெரிப்பன. வடக்கில் விமான, எறிகணைக் குண்டுவீச்சுகளும், கிழக்கிலும், கொழும்பிலும் தமிழர்களைக் கைதுசெய்து, தடுத்து வைத்து காணாமல் செய்தலுமாய் இனப்படுகொலை ஒன்றை இந்த அரசாங்கமும் நடாத்தி வருகின்றது. இதனைவிட கிராமங்களுக்குள் புகுந்து முழுக் கிராமத்தையுமே சுட்டெரித்துச் சூறையாடியும் வருகின்றனர். சுதந்திர வேட்கை கொண்ட மனிதர்கள் சாவுக்கு அஞ்சுவதில்லை. எனினும் இந்த இனப்படுகொலைகளுக்கெல்லாம் சிறீலங்கா அரசு பதில் சொல்லும் காலம் விரைவில் வரும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"பாம்பு ஆட்டம்" நாகவணக்கத்துடன் இணைந்ததாக அமைந்தது. பண்டைய கிரேக்க, ரோம பாம்பு நடனங்களில் கைகளிலே பாம்பை ஏந்திய வண்ணம் நடனம் ஆடும் மரபு காணப்பட்டது. (Walters Art Galery, Baltimore). ஆனால் ஈழத்தமிழர் பாரம்பரியத்தில் நடனம் ஆடுபவரே பாம்பாகப் பாவனை செய்து ஆடும் வழக்கம் நிலவியது. இவ்வகை ஆட்டங்களுக்குப் பாம்பாட்டிச் சித்தர்களின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. பிறப்பு இறப்பு, மீள் பிறப்பு என்ற எண்ணக்கருக்கள் பாம்பு நடனங்கள் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டன.

விலங்கு நடனங்களில் இருந்து படிமலர்ச்சி கொண்ட "உரியாட்டம்" என்ற தனித்துவமான நடனம் இங்கு நிலவியமைக்குச் சான்றுகள் உள்ளன. விலங்குகளது தோலைக் கையில் ஏந்திய வண்ணம், விரித்தும், சுருக்கியும், வீசி எறிந்து ஏந்தியும், போர்த்தும் ஆடுவது "உரியாட்டம்" எனப்பட்டது. இதுவே பின்னர் வளர்ச்சி பெற்ற ஒயில் ஆட்டத்துக்குத் தளமாக அமைந்திருக்கலாம்.

கிழவிலங்குகள் தொடர்பான பாவனை நடனங்கள் நகைச்சுவைத் தூண்டலுக்குப் பயன்பட்டன. குரங்கு ஆட்டமும் நகைச்சுவைக்குக் கையாளப்பட்டது. இவ்வகை ஆட்டங்களில் முகமூடிகளும் எடுத்தாளப்பட்டன. ஆடுபவர் யாரென்று அறியாதிருக்க முகமூடிகள் உதவின. ஆடுபவரை இனங்காட்டாது ஆடும் நடனம் "உலைமூடி" எனப்பட்டது.[7]

பானை, குடம், சுளகு, கூடை, தானியக்கதிர்கள் போன்ற பொருள்களை ஏந்தி ஆடும் நடனம் "பண்டக்கூத்து" எனப்பட்டது. பண்டக் கூத்து பெண்களுக்கு மட்டும் உரிய நடனமாகப் பெரும்பாலும் அமைந்தது. தானியங்களை நிறைத்தல், அளத்தல், பகிர்தல் என்பவை பண்டக்கூத்தின் கருப்பொருளாக அமைந்தன. இக் கூத்துக்குப் பிரதியீடான வகையில் ஆண்கள் ஆடிய நடனம் "மல்லுக் கூத்து" எனப்பட்டது. கம்பு, வேல், சூலம், வாள், அம்பு முதலியவற்றை ஏந்தி ஆடல் மல்லுக் கூத்து எனப்பட்டது.

www.tamilarangam.net

**பண்டக்கூத்து:**

- மெல் அசைவுகள்
- பஞ்சுத, கிஞ்சுத, மஞ்சுத போன்ற அடுக்கு ஒலிகள்
- இருகால்களையும் உயர்த்திய துள்ளல் தவிர்க்கப்படும்
- கைகோர்த்து வலஞ்சுழியாக ஆடுதல்

**மல்லுக் கூத்து:**

- வல் அசைவுகள்
- தக்கிட, திக்கிட, கிடதக போன்ற அடுக்கு ஒலிகள்
- எழுந்து துள்ளியாடல் பரவலாக இடம்பெறும்
- கைகோர்த்து இடஞ்சுழியாக ஆடுதல்

பண்டக் கூத்தோடு இணைந்த ஆடல் வடிவங்களாக இடித்தல், புடைத்தல், அளத்தல், தூற்றுதல், கழுவுதல், அவித்தல் என்றவாறான தொழில்முறை நடனச் சுட்டிகள் வளர்ச்சியடைந்தன. கைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் முறைமை "கைக்குறி" எனவும், முகவடிவங்களினால் கருத்தை வெளிப்படுத்துதல் "முகக்குறி" எனவும் குறிப்பிடப்பட்டது.

தொழில்களோடு இணைந்த நடனங்கள் வயற்களங்களிலே நிகழ்ந்தன. பிறப்பு, பூப்பு, திருமணம், இறப்பு முதலியவற்றோடு இணைந்த நடனங்கள் வீட்டு முற்றங்களில் இடம் பெற்றன. வீட்டு முற்றம் கூத்து முற்றமாகவும் மாறியது. வழிபாட்டு இடங்களில் "வங்கை" "சிங்கை" முதலிய நடனங்கள் இடம் பெற்றன. வழிபாட்டு இடங்களில் பெண்கள் ஆடிய நடனம் "வங்கை" என்றும் ஆண்கள் ஆடிய நடனம் "சிங்கை" என்றும் குறிப்பிடப்பட்டது. வழிபாட்டிடங்களில் இடம் பெற்ற நடனங்களே கதை சொல்லும் கூத்துக்களாகக் கூர்ப்பு அடைந்தன.

கதை சொல்லும் கூத்துக்களில் முதற்கண் ஆடுகளம் பற்றிய வணக்கம் விருத்தமாக இடம்பெற்றது.[8]

"பூமகளே பொன்சொரியும்
திருவடியைச்
சிறுகையாற் போற்றுகின்றோம்
வான்மகளே நீர் சொரிந்து வயல்
நிறைந்து
கால் நடைகள் பால் சொரிந்து
பொலியக்காண
ஆடலொடு பாடலுமாய் வருவாய்
அம்மா"

ஒருவகையில் நிலமானிய சமூக அமைப்பின் பொருண்மிய விழுமியங்களை விளக்கும் வகையிலும், தாய்த்தெய்வ வழிபாட்டை முன்னெடுக்கும் வகையிலும் இந்த வேட்பு விருந்தம் அமைந்தது.

இவ்வாறாகப் பரந்து அகன்ற ஒரு நடனப் பாரம்பரியத்தின் மீது தான் பரத நாட்டியம் என்ற "முகிழ்ப்பு நடனம்" தோன்ற முடிந்தது. பரந்த ஆழ்ந்த ஒரு மரபிலிருந்து முளைத்தெழுந்த அது "முகிழ்ப்பு நடனம்" என்றும் குறிப்பிடப்படும்.

உற்பத்திக்குரிய தொழில்நுட்ப ஆற்றல்களை மிகுந்த பொறுமையுடன் நீண்டகாலம் கற்கவேண்டியிருந்தது. மண்பாண்ட வேலை, மரவேலை, உலோகவேலை, பயிர்ச்செய்கை முறைமை முதலியவற்றில் நீண்ட பயிற்சி வேண்டப்பட்டது. இவ்வாறான பயிற்சியானது நடனக் கலைக்கும் தூண்டுதல்களை வழங்கியது.[9] மனித உடலே நடன வெளிப்பாட்டுக்குரிய கருவியாதலால் சமூக உறுப்பினர் அனைவரும் பங்கு பற்றக்கூடிய உற்சாகம் இக்கலையின் சிறப்புப் பரிமாணம்.

உடலே நடனத்தின் அடிப்படைப் பொருளாகின்றது. அதுவே நடனத்தின் மொழி. உறுப்புக்கள் அந்த மொழியின் நெடுங்கணக்கு என்று குறிப்பிடப்படும். தமிழர்களது நடன மரபில் இவ்வாறான உடல்சார் ஆற்றுகை நான்கு பிரிவுகளாக வளர்ச்சியடைந்தது.

(மிகுதி அடுத்த இதழில்)

> **"மாணவர் என்ற மகத்தான சக்தியால் தோள் நிமிர்த்து கின்ற நீங்கள் பதில் சொல்ல வேண்டிய காலம் இது. கல்வியை இழந்தவர் தலைநிமிர்ந்து வாழ்வதில்லை. ஆனால் அடிமை பெறும் கல்வியால் யாருக்கேனும் லாபமுண்டா? ஊர் எரியும்போது வாயாலே ஓதும் கல்வியும், கலையும் நெருப்பை அணைக்குமா?.."**
>
> பருத்தித்துறை கோட்ட ஆசிரியர்கள் 'எமதன்புக்குரிய மாணவச் செல்வங்களே' எனத் தலைப்பிட்டு வெளியிட்டுள்ள கடிதப் பிரசுரத்தில் இருந்து.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கின் துயரம்

"தமிழ் மக்களைக் கொன்றொழி! அவர்களின் குடில்களை தீக்கிரையாக்கு! அவர்களின் குடும்பத்தலைவர்களை அழி! பெண்களை விதவையாக்கு!"

இது இன்று தமிழீழ நிலப்பரப்புகளை ஆக்கிரமித்து நிற்கும் சிங்களப் படையினருக்கு அதன் தளபதிகளால் இடப்படும் கட்டளைகள்.

கிழக்கு மாகாணக் கிராமங்கள் அடிக்கடி இராணுவத்தால் சுற்றி வளைக்கப்படும். தேடுதல் வேட்டைகள் தொடரும். கிராமங்கள் நகர்ப்புறத் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டு பல நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும். மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு மிகவும் கஸ்டங்களை அனுபவிப்பார்கள். விவசாயம் செய்யக் கூடாது என இனவெறி பிடித்த இராணுவத்தினர் சட்டங்களைக் கூட வேறு இயற்றி இருக்கிறார்கள். உரத் தட்டுப்பாட்டினால் அதிகமான நிலங்கள் விளைச்சல் இன்றிக் கிடக்கின்றன. பயிர்ச் செய்கை பண்ண முடியவில்லை. இதனால் அங்குள்ள மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போய்விட்டது. அன்றாட கூலி வேலை செய்து பிழைப்பு நடாத்திக் கொண்டிருக்கிறவர்களெல்லாம் பசி, பட்டினியால் வாடுகின்றனர். அங்கு கடமை புரியும் விசேட அதிரடிப்படையினரால் அநேக குடும்பத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால் அக் குடும்பங்கள் எந்தவிதமான வருமானமுமின்றி கஸ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது நேரடியாகவும், மறைமுகமாகவும் அனேகமான பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.

"மட்டக்களப்பில் சாதாரணமாக ஒரு கிராமத்தில் இரண்டு பேர் விதவைகளாக இருப்பார்கள். ஆனால் இப்போது வந்தாறு மூலை போன்ற கிராமங்களை எடுத்துக்கொண்டால் 60-ல் இருந்து 70 வீதமான பெண்கள் விதவைகளாக இருக்கிறார்கள்" இவ்வாறு மட்டக்களப்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் யுவராஜ், பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியின் போது தெரிவித்திருந்தார். இவரது கூற்றில் இருந்தே மட்டக்களப்பின் நிலைமையை, அவர்கள் அனுபவித்து வரும் துன்பியல் வாழ்வை உணர முடியும்.

சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் அத்துமீறிக் கனரக ஆயுதங்களுடன், கிராமத்தின் உயிர் மூச்சைக் கொன்றொழிக்கிறது. அங்கு வாழும் பெண்களின் பொட்டையும், பூவையும் மண்ணில் கசக்கி எறிகிறது. மது போதையில் கிராமங்களுள் காட்டானைகளைப்போல புகும் இராணுவம் ஏற்படுத்திய அனர்த்தங்களின் போதும், கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகத்தின் போதும் ஏராளமான பெண்கள் தங்கள் கணவன்மார்களை இழந்து விதவையாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வீடும் ஓராயிரம் கண்ணீர்க்கதைகளை சொல்லிக் கொண்டுதான் இருக்கின்றன. காக்கைவன்னியர்களால், எட்டப்பர்களால், இராணுவத்தோடு இணைந்து இயங்கும் முஸ்லீம் ஊர்காவல் படைகளால் இன்னோரன்ன பல வடிவங்களில் சிங்களப் பேரினவாதம் எழுதிய இந்த இரத்தச் சுவடுகள் ஒருபோதும் அழியாது. தமிழர்களால் காலா காலமாக நினைக்கப்படும்.

சந்திரிகா தேர்தல் காலத்தில் ஓட்டுப் பொறுக்கும் பிச்சைப் பாத்திரத்தோடு கண்ணீரும் கம்பலையுமாய் நின்று பேசிய காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. "நானும் ஒரு விதவை. இந்த நாட்டில் ஒரு விதவையின் கண்ணீரையும் நான் பார்க்க விரும்பாதவளாக இருக்கிறேன்" ஓட்டுப் பொறுக்கும் அரசியல் நாடகத்தின் போது சந்திரிகா சொன்னது. இதனை தென்னிலங்கையின் சுவர்களும் அழுதன. இதன் பொருள் என்னவென்றால் யுத்தமற்ற சமாதான பூமியைக் கொணர்வேன் என்பதாக மக்களுக்கு காதுகளில் மந்திரம் போல் ஒலிக்கச் செய்வதில் எப்படியோ சந்திரிகா வெற்றி அடைந்திருக்கலாம். ஆனால் கணவனை இழந்து விதவைகளாக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண்கள் பலரின் வாழ்வோடு உள்ள இந்தத் துயரம் சந்திரிகாவுக்கு தீரா இடும்பை தரும்.

1981-ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து இன்னமும் தொடர்ந்து நடக்கும் இவ் அனர்த்தங்களை வென்று, ஒரு இளம் சமுதாயத்தை ஆரோக்கியமற்றதாக்கி, போராட வலுவற்றவர்களாக்கி விட முயலும் இத் தந்திரங்களை வென்று கிழக்கில் மானுடம் எழும். கிழக்கில் புலிகள் பலமாகி வருகிறார்கள். கொடூரங்களால் அலைக்கழிக்கப்படும் மக்களும் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

கிழக்கில் கடலிலும், தரையிலும் சிறிலங்கா அரசு செயலிழந்து கொண்டு போகும் அச்ச நிலை குறித்து, இராணுவ ஆய்வாளர்கள், பாதுகாப்பு குறித்து பேசும் ஆலோசகர்கள், அவதானிகள் பலர் சந்திரிகாவுக்கு விளக்கியிருந்தனர். அது குறித்த அபாயத்தையும் அவர்கள் சொன்னார்கள். சந்திரிகாவோ, செயலிழந்து போகும் கிழக்குக் கடற்பிராந்தியத்தைக் காப்பதற்கு தனது கடற்படையை வலுவாக கட்டி அமைக்க முடியாது தோல்வி கண்டதனால் இந்திய கடற்படையுடனான கூட்டு போர் முயற்சிக்குத் தயாராகியிருக்கிறார். ஆனால் கிழக்கு ஒரு போதும் இருளாது. அது விடுதலைக்கான ஒளிச் சுவாலைகளை திக்கும் ஒளிபரப்பும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மலேசியாவில் வாழும் மனித நேயர்களிடையே சந்திரிகா அரசின் 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கை பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. சந்திரிகா அரசு மேற்கொண்ட இப் பயங்கரவாத நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து அகதிகளாய் அல்லலுறும் இலட்சக்கணக்கான மக்களின் துன்பியல் நிறைந்த வாழ்வு அவர்களையும் வீதிக்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்தியத் தூதரகத்தின் முன் மறியல் போராட்டங்களை அவர்கள் ஆரம்பித்தார்கள். "ஈழத்தமிழர்களைக் கொல்லாதே" என்ற கோஷத்தையே பிரதான கோஷமாக வைத்திருந்தார்கள். மறியல் போராட்டத்துக்கு பொலிசில் அனுமதி கேட்டபோது, அவர்கள், "வாழ்க, ஒழிக என்று குரல் எழுப்பக் கூடாது" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியத் தூதரகத்தின் முன் ஆறு ஆண்டுகளுக்கு பின் நடந்த பெரியளவிலான போராட்டமாக இதனை அவர்கள் கருதுகிறார்கள். இந்த மறியல் போராட்டத்துக்கு அங்கு வாழும் முழு ஈழத்தமிழர்களதும் ஒத்துழைப்பு பூரணமாக கிடைக்கவில்லை என்றும் அவர்கள் வருத்தம் தெரிவித்தார்கள். எனினும் எதிர்காலத்தில் அவர்களின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெறலாம் என்ற நம்பிக்கையையும் அவர்கள் தெரிவித்தார்கள். கோலாலம்பூரில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் முன் போராட்டம் நடத்தி மகஜரை அதன் பொறுப்பாளரிடம் கையளித்துள்ளார்கள். இதற்கிடையில் தமிழீழத் தேசியத்தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டங்களையும் அவர்கள் கொண்டாடியிருக்கிறார்கள். கலை நிகழ்ச்சிகள், மறியல் போராட்டங்கள், வெளிநாட்டுப் பிரச்சாரச் செயற்பாடுகள் என அவர்கள் தமிழீழ மக்களின் துயர்நிறைந்த வாழ்வை ஒளிபெறச் செய்ய துடியாய் இயங்கிக் கொண்டேயிருப்பார்கள்.

www.tamilarangam.net










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கேணல் கிட்டு நினைவு நிகழ்வுகள்



↑ ஜேர்மனி



← சுவிஸ்

↓ மத்திய கிழக்கு நாடுகளில் மாவீரர் நினைவு வழிபாடு ↓







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இந்தியாவிற்கு ஆரியம் - இலங்கைக்கு சிங்களம்

www.tamilarangam.net

தமிழீழத்தில் நடைபெற்றுவரும் சிங்கள சீமாட்டி சந்திரிகா அரசின் கொடுமை நினைத்துப் பார்க்கவே முடியாதது. பேரினவாத ஆதிக்கம் ஒவ்வொரு இனத்தையும் அடக்கி ஒழித்துக் கொண்டே வருகிறது. இந்தியாவில் எப்படி, ஆரியப் பார்ப்பனியம் தமிழர்களின் உரிமைகளை மதிக்காமல், அவர்களின் மொழி உணர்வையும், பண்பாடு கலாச்சாரத்தையும் சீரழித்து, திட்டமிட்டு நசுக்கி வருகிறதோ - தமிழ் இன உணர்வாளர்களை சிறைப்படுத்தி வெங்கொடுமை சாக்காட்டில் வதைக்கிறதோ அதைப்போன்றுதான் ஈழத்தில் நடக்கும் இனப் போராட்டம். இந்தியாவிற்கு ஆரியம்! இலங்கைக்கு சிங்களம்! இருபெரும் கொடுமையாளர்களாக இன்றைய அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவும், இலங்கை அதிபர் சதிகாரி சந்திரிகாவுமே இவர்களின் உருவங்கள் - ஒரு நாணயத்தின் இருபக்கங்களே. இந்தியாவில் வாழும் தமிழர்கள் உணர்வின்றி போராடாமல் இருக்கின்றார்கள். ஆனால் இலங்கை தமிழர்கள் படுபயங்கரமான இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு அதன் விளைவாக போராட துப்பாக்கி ஏந்த வேண்டிய நிலை ஏற்பட்டது. தமிழ் ஈழத்தையும் விடுதலைப்புலிகளையும், ஈழத்தமிழர்களையும் அழித்தே தீருவோம் என்று கங்கணம் கட்டும் சிங்களச் சீமாட்டியின் தாயாரும், பிரதமருமான பண்டார நாயக்காவிற்கு கேரளாவில் அரச மரியாதையுடன் மத்திய அரசு தமிழர்கள் வரிப்பணத்தில் (உட்பட) பலத்த பாதுகாப்போடு சிகிச்சை அளித்து வருகிறது. கொழும்பில் பெட்ரோல் தீ பிடித்து எரிந்த போது பதறிப் போய் தீயை அணைக்க தளவாடங்களுடன் படையை அனுப்பிய நரசிம்மராவ் அரசு, ஈழத்தமிழர்கள் கொல்லப்படும் போது மதில் மேல் பூனையாய், இஞ்சி தின்ற குரங்காக மவுனம் சாதிக்கிறார். நரசிம்ம (அய்யர்) ராவும் சிங்கள சந்திரிகாவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். இந்தியாவில் வாழும் தமிழனுக்கும் அடி விழுந்தால், அன்று தான் விழித்தெழுவான்.

**அ. தமிழ்ச்செல்வன்.**

## தமிழக அரசியல்வாதிகளை நம்பிப் பயனில்லை

சிங்கள அரசாங்கம் நடத்திய கொலை வெறி தாக்குதலால் கொல்லப்பட்ட எனது உயிருக்கு உயிரான ஈழ தமிழர்கள், கைக்குழந்தைகள் ஆகியவற்றின் சடல காட்சியினை தாங்கள் எனக்கு அனுப்பியிருந்த புகைப்பட பிரதி மூலம் கண்டதில் இருந்து எனது தமிழ் உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தமிழக மக்களாகிய நாங்கள் ஈழ தமிழர்களுக்கு என்ன செய்ய வேண்டும்? தங்களின் கட்டளைக்காக காத்துக் கிடக்கிறோம். எங்களது தமிழக அரசியல்வாதிகளை நம்பி பயனில்லை. அவர்கள் ஒரு போதும் உங்களுக்கு உதவமாட்டார்கள். (நீங்கள்) பிறர் உதவியை எதிர்பார்ப்பவர்கள் அல்ல என்பதும் எனக்கு தெரியும். ஆனால் தமிழக, இந்திய அரசியலை அடியோடு வெறுக்கும் எம்மை போன்ற இன உணர்வு உள்ள இளைஞர்கள் தங்களின் கை அசைப்பிற்கு காத்து கிடக்கிறார்கள் என்பதை தங்களுக்கு அறிவித்துக்கொள்கிறோம். தங்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் நடக்கின்ற 'ஈழத் தமிழர் படுகொலை எதிர்ப்பு போராட்டங்'களில் சில அரசியல் லாபத்திற்காக என வெளிப்படையாக அறியும் போது எனது மனது அதாவது என்னை போன்ற இளைஞர்களின் மனது மிகவும் வேதனை அடைந்துள்ளது. ஏன் நான் தமிழகத்தில் பிறந்தேன்? தமிழீழத்தில் பிறந்திருக்க கூடாதா? என எனது மனம் நாளும் எண்ணுகிறது. நம்பினால் நம்புங்கள் என் மனது எப்போதும் ஈழத் தமிழர் பற்றியே நினைக்கிறது.

இதுவரை ஏற்பட்ட இழப்புக்கள் நிச்சயம் ஒரு நாள் மீண்டும் புத்துயிர் பெற்று தமிழ் ஈழம் எனும் புதிய நாடு உருவாகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அந்த நிலை உருவானால் மனப்பூர்வமாக மகிழும் தமிழக இளைஞர்களில் ஒருவனாக நான் இருப்பேன் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**முத்துக்கிருஸ்ணன் - புதுக்கோட்டை**

## விடுதலையை நோக்கி

'தாய் நாடு காத்திடும் சாவு சாவன்று சர்க்கரை பாகடா பாகு' என்ற கனல் வரிகளுக்கு ஏற்ப ஈழ விடுதலை போர்க்களத்தில் இருக்கின்ற விடுதலைப் புலிகளுக்கு எனது வணக்கங்கள். நான் தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுக்கும் 'தமிழ்நாடு மார்க்சிய லெனினிய' கட்சியை சார்ந்தவன். தற்போது 'ஈழ விடுதலைக்கும் விடுதலைப்புலிகளுக்கும் துணைநிற்போம்' என்ற இயக்கத்தை எமது பகுதியில் நடத்தி வருகிறோம்.

# நேசக் கரங்களின்

தாமதமாகவேனும் தமிழகம் தற்போது விழித்து வருகிறது. எமது உழைக்கும் மக்கள் ஈழ விடுதலையையும், ஈழமக்களின் ஒரே பாதுகாப்பு அரணாகவும், தமிழ் தேசிய விடுதலை இயக்கமாகவும் விளங்கும் விடுதலைப் புலிகளையும் ஏற்றுக்கொள்கின்றனர். இங்குள்ள தலைவர்கள்தான் இந்திய (தரகு பார்ப்பனிய) அரசுக்கு அஞ்சி நடுங்குகிறார்கள். பஞ்சாயத்து, சட்டசபைத் தேர்தலில் இடங்களை கைப்பற்றுவதை விட உயர்ந்தது ஒன்றுமில்லை என்று செயல்படுகின்றனர். இவர்கள் எப்படி இருப்பினும் தமிழக மக்கள் தமிழ் தேசியத்தை, தமிழ்த் தேசிய விடுதலையை நோக்கி உயர்வார்கள். உங்கள் ஈழ விடுதலைப்போர் எமது மக்களின் உணர்வை உயர்த்தும்.

எமது பகுதியில் 'எரிமலை' இதழ் வருவதில்லை. தோழர் ஒருவர் மூலம் எரிமலை கிடைக்கப்பெற்றேன். எனக்கு குறைந்தது மூன்று இதழாவது அனுப்ப வேண்டுகிறேன். ஈழவிடுதலையை, விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் அனைத்து ஆட்களிடமும் 'எரிமலை' படிப்பதற்கு கொடுப்பேன். சிங்கள காடையர்களின், இந்திய தரகு பார்ப்பனிய அரசின் அவதூறுகளை முறியடிப்பதற்கும் ஈழ விடுதலை அழிக்கவொண்ணாது என்பதைப் பரப்புரைப்பதற்கும் இது அவசியமானது. எனவே உங்களை தோழமையுடனும், உரிமையுடனும் வேண்டிக் கொள்வது குறைந்தது மூன்று இதழாவது அனுப்புங்கள். சிறப்புச் செய்திகள், பிரசுரங்கள், நிழற்படங்கள் வெளியிட்டால் அனுப்பவும். எமது அமைப்பின் ஈழவிடுதலை தொடர்பான இப்பகுதிச் செய்திகளை அனுப்புகிறேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சூரியனை எரிப்பதற்கு 'சூரியகதிர்' நடவடிக்கையில் ஈடுபடும் சிங்கள இனவெறியர்கள் அழிவார்கள். தொன்மை சிறப்பு வாய்ந்த 'யாழ்ப்பாணம்' ஈழத்தமிழர்களின் இன்னிசையை இசைக்கும்.

**வேலன் - *தஞ்சாவூர்***

**"எங்கு என் தமிழர் இருக்கின்றார்களோ**
**எங்கு அவர் துயரால் இழிகின்றார்களோ**
**எங்கு அவர் உரிமை இழக்கின்றார்களோ**
**இனம் விளங்காமல், மொழிதெரியாமல்**
**எங்கு அவர் பல்வேறினத்திற் கடிமையாய்**
**எம்முன் னேற்றமும் இன்றி உள்ளார்களோ**
**அங்கு என் அறிவும் உள்ளமும், உயிரும்**
**அளாவி யிருக்க அருள்க, செந் தமிழே!..." என்று**
**உலகளாவிய தமிழின மக்களின் இழிநிலை போக்கவும்,**
**"உலகெலாம் பரவிய உயர் தமிழினத்தின்**
**நலமெலாம் மீட்கவும், நல்லரசு ஒன்றை**
**தமிழ் ஈழத்தில் தழைக்கச் செய்யவும்,**
**இமையாத விழியனாய், இளைக்காத நெஞ்சனாய்**
**அன்றன்றும் புதுப்புது போர்க்களம் காணும்**
**புரட்சி வேந்தனாய், பீடுறநிற்கும் பிரபாகரனை**
**ஈடிலா மறவனை, எம்மினத் தலைவனை**
**இனத்தோன்றல் ஒருவனை எச்சில் சோற்றுக்கு**
**மனச்சான்றைத் தின்ற மா கொடியன்கள்**
**காட்டிக் கொடுக்கும் கயமையை என்னென்போம்"**

# பாசக் குரல்கள்

என்று, தமிழின மீட்சிக்கென தோன்றிய முதல் படைத் தலைவன் பிரபாகரனைக் காட்டிக் கொடுக்கும் கயவர்களை எண்ணி மனங்கவன்றும், தமிழ்த்தாயின் அடிமைத் தளையறுக்கவும் எழுச்சிப் பண்பாடிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் தொடங்கிய உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எழுதுகிறோம்.

தாங்கள் தொடர்ந்து அனுப்புகின்ற 'எரிமலை' தமிழ் இதழும் 'தமிழ் ஈழம்' ஆங்கில இதழும் தமிழீழப் போராட்டத்தில் இளைஞர்களும் இளைஞைகளும் ஆற்றிவரும் திறன்களையும், பொது மக்களுக்கு ஏற்படும் பேரவலங்களையும் படம்படித்துக் காட்டுகின்றன. மேலும் ஒரு தேக்க நிலையிலிருந்து மாறி வருகின்ற இன்றைய குமுகத் தேவைகளின் வெளிப்பாடுகளாக மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், அறிவியல், கலைபண்பாடு ஆகிய நிலைகளில் புதிய கருத்துக்களை தாங்கியும் வருகின்றன. முடிந்தவரை இதழ்களின் கருத்துகளை மற்றவர்களிடம் பரப்பி வருகின்றோம்.

தமிழீழப் போராட்டத்தை ஒரு சிறு தீவில் நடக்கும் இனப்போராட்டமாகப் பார்க்காமல், உலகத்தின் ஒடுக்கப்பட்ட மக்களின் ஒரு பகுதியாகவும், தமிழினத்தின் ஒரு பகுதியாகவுமே பார்க்கின்றோம்.

இந்தியாவில் ஆரிய இனத்திற்கு எதிராகப் பல மொழிவழி தேசிய இனங்கள் தங்கள் விடுதலைப் போராட்டத்தை தொடங்கி இருக்கின்றன. ஆனால் ஆரியத்திற்கு நேர் எதிரான தமிழினம் "திராவிடம்" என்ற கருத்தியலுக்குள் முடக்கப்பட்டு, தன் தமிழின அடையாளங்களை மீட்பதற்கான போராட்டங்களையே நடத்த வேண்டியிருந்தது. இந்திய தேசிய மயக்கத்தையும் திராவிட தேசிய மயக்கத்தையும் போக்கி, தமிழ்த் தேசிய இனவுணர்வு ஊட்டியதில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், வெங்காலூர் அறிஞர் குணா ஆகியோரின் பங்கு முக்கியமானதாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முடிவு, இனவியல், நிலவியல், அரசியல் நிலைகளில் தாய்த் தமிழகத்தைச் சார்ந்து இருப்பதால், தமிழின விடுதலையை ஈழத்திலேயே முறியடிக்க ஆரியச் சார்புள்ள சிங்கள இன அரசுக்கு இந்திய ஆரிய அரசு மறைமுகமாக உதவிசெய்கின்றது. இந்நிலையில், சிங்கள தேசிய இனத்திலேயே தமிழீழ விடுதலையை ஆதரிக்கின்ற குடியாட்சி உணர்வு கொண்ட அரசியல் குழுக்களோடும், நம் உறவை நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டும். இலங்கையின் ஒற்றுமை பேசுகின்ற பொதுவுடைமைக் கட்சிகளும், இந்திய ஒற்றுமைக்குள் போலியான பாட்டாளி வகுப்பு அரசியல் நடத்துகின்ற கட்சிகளும் காலத்திற்கு ஒவ்வாதவை; குமுக இயங்கியலுக்கும் எதிரானவை.

எம்மினத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு என்றென்றும் துணை நிற்போம்; இணைந்து போராடுவோம்; வெற்றி பெறுவோம்,

**கண்ணன் - *திருச்சி***

## நெருப்பெரிந்த நிலம்

அண்மையில் 'நிதர்சன' வெளியீடான நெருப்பெரிந்த நிலம் (புலிப்பாய்ச்சல்) கண்டேன்; மெய்சிலிர்ப்புக் கொண்டேன்; வளமார்ந்த தமிழீழத்தில், சிங்கள இனவெறிக் கொடுநெறியர்களையும், 'ரிவிரேசா'வையும் முறியடிக்க தம்பி அவர்கள் அறைகூவல் விடுக்க, இளையகரங்கள் வீரம் ததும்பப் பாய்ந்த காட்சிகளைக் கண்டேன். சீரிய தலைமையும், கூரிய போர்ப்படையும் தமிழால் எழுந்து நிற்கையில், பாரிய அழிவுகளால் சீர்குலைக்கும் எதிரிகள் இற்றுவிழுவதும், தமிழீழம் பெற்று நாம் நிமிர்வதும் உறுதி... உறுதி...!

தமிழீழத் தேசியத்தலைவரைப் பற்றிய அவதூறை இந்திய வல்லாதிக்க அரசும், அவர்தம் எடுபிடிகளும் ஓயாது செய்துவந்துள்ள வேளையில், 'நெருப்பெரிந்த நிலம்' எனும் இவ்வொளிப்படம், எம்மால் சில கிராமங்களில் திரையிடப்பட்ட போது, உண்மை நிலையை அறிந்துகொண்ட மக்கள் நெஞ்சம் பதைத்தனர்; தமிழீழ மக்களைக் காக்கும் ஒரேபடை புலிப்படைதான் என்பதை உளமாற ஏற்றுக்கொண்டு வாழ்த்தினர்; ஈழ மக்கள் சிங்கள இனவெறியில் படுகொலைக்குள்ளாவதைப் படக்காட்சியில் கண்ணுற்றுக் கதறிவிட்டனர்; உண்மையான வீரர்களுக்கு என்றும் துணைநிற்க உறுதியும் அளித்தனர்.

அண்மையில் நாளேடுகள் வாயிலாகத் தம்பி அவர்கள் விடுத்த அறிக்கையினையே இவ்வாண்டின் தமிழ்ப் புத்தாண்டு, தமிழ் தேசியத் திருநாள் செய்தியாக நாங்கள் வெளியிட்டுள்ளோம். இவை பல்லாயிரக்கணக்கில் அச்சிடப்பட்டு மக்களிடையே எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றன.

**தமிழன்பன்**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# போரா ? சமாதானமா ? சந்திரிகா தீர்மானிக்கட்டும்

www.tamilarangam.net


சிறிலங்கா அரசு தமிழின அழிப்பு நடவடிக்கைகளுக்கென பெருமளவு பணத்தைச் செலவிட்டு வருகின்றது. எத்தனையோ நெருக்கடிகளிற்கு மத்தியிலும் பாதுகாப்புச் செலவிற்கென சிறிலங்கா அரசு, பெருமளவு பணத்தை ஒதுக்கி வருவதுடன், தனியாரிடமிருந்தும் தனியார் நிறுவனங்களிடம் இருந்தும் பாரிய தொகைப் பணத்தைப் பெற்று இராணுவச் செலவீனத்திற்குப் பயன்படுத்தி வருகிறது. பல அரச சொத்துக்கள், தோட்டங்கள் வெளிநாட்டு நிறுவனங்களிற்கு விற்கப்பட்டு அதன் மூலம் பெறப்படும் பணமும் பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கப்படுகிறது. இவ்வாண்டின் இராணுவச் செலவினம், ஒதுக்கீட்டை விடவும் மீறிச்செல்லலாம் என இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதாவது சிறிலங்காவின் பாதுகாப்பிற்கென ஒதுக்கப்பட்ட 38 பில்லியன் ரூபாவை விட, பாதுகாப்புச் செலவினம் அதிகரிக்கும். இதற்கு நிதி ஒதுக்கித் தருவதை விடத் தமக்கு வேறு வழி இருப்பதாக தெரியவில்லை என அரசாங்க வட்டாரங்கள் தெரிவிப்பதாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. 'புலிகளுக்கு எதிரான' எனக் கூறிக்கொள்ளும் யுத்தத்தில் நவீன திட்டங்கள் பலவற்றை அரசாங்கம் அமுலாக்க ஆரம்பித்துள்ளது. பல கோடி ரூபா இதற்காக செலவிடப்படவிருப்பதான செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்த நேரம் ஒரு நாட்டின் உயிர் நாடியான பொருளாதார இலக்கின் மீது தாக்குதல் நடந்துள்ளது. இது இராணுவ ரீதியில், அரசியல் ரீதியில் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததான நகர்வாக இருக்கும்.

பொருளாதார இலக்குகள் தாக்கப்படுவதால், பொருளாதார நெருக்கடியில் இருக்கும் ஒரு நாடு பாரிய பின்னடைவுகளை, பல முனைகளிலும் எதிர்கொள்ளும்.

பெப்ரவரி 31-ம் திகதி நடந்த மத்திய வங்கி மீதான வெடிகுண்டுத் தாக்குதலானது சிறிலங்கா அரசிற்கு இராணுவ ரீதியாக பெரும் சவாலாக அமைந்தது.

சிறிலங்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகப் பகுதி மீதான இந்தத் தாக்குதல் விடுதலைப் புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டது என கொழும்பிலுள்ள இராணுவ ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இத்தாக்குதலானது விடுதலைப்புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டது என சகல செய்தி ஸ்தாபனங்களும் தமது ஊகத்தை தெரிவித்தன. ஜனாதிபதியின் உத்தியோக வாஸஸ்தலமும் அப்பகுதியிலிருந்து சில நூறு யார் தூரத்திலேயே அமைந்திருந்தது. அதி உயர் பாதுகாப்புக் கொண்ட வர்த்தக மையமும், கடற்படைத் தலைமையகமும் உள்ள இப்பகுதிக்குள் விடுதலைப் புலிகள் தவிர்ந்த வேறெவரும் நுழைய முடியாது எனவும் அவ் ஆய்வாளர் தெரிவித்துள்ளார். ஆயினும், இத்தாக்குதலுக்கான பொறுப்பை எல்லாளன் படை ஏற்று அறிவித்தது. தமது அறிக்கையில், விடுதலைப் புலிகள் மரபுரீதியான போர்த் தந்திரோபாயத்தை யாழ்ப்பாணத்தில் கடைப்பிடித்தது பிழையெனக் கண்டிக்கவும் செய்தது.

மத்திய வங்கி தாக்கப்படக்கூடும் என ஏற்கனவே பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தெரிந்திருந்ததால், வங்கியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. 100-ற்கு மேற்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையிலீடுபட்டிருந்த சமயமே இத்தாக்குதல் நடந்துள்ளது. அநேகமான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இராணுவத்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டதுடன் மேலதிகமாக ஆயுத, வெடிமருந்துப் பயிற்சிகளையும் பெற்றிருந்ததால் இவர்களில் பலர் வங்கியின் வாசல் பகுதியில் பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்தனர். கோட்டைப் பகுதி புதன்கிழமைகளில், அதுவும் மாதத்தின் கடைசிப் புதனில் நெருக்கடி மிகுந்ததாகக் காணப்படுவது வழக்கம். காலை ஏறத்தாள 10.50 மணியளவில் மத்திய வங்கியை நோக்கி வந்து கொண்டிருந்த இரு இளைஞர்களில் ஒருவர் மத்திய வங்கிக் கட்டடத்தின் பாதுகாப்பு ஊழியர்கள் மீது தாக்குதல் நடாத்த மற்றைய இளைஞர் றொக்கட் லோஞ்சர் மூலம் வங்கியைச் சுற்றியிருந்த கட்டடங்களைத் தாக்கிக் கொண்டிருந்தார். வங்கியின் முன்புறமாக காவலில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு ஊழியர்கள் இளைஞனின் துப்பாக்கிச் சூட்டிற்கு இரையாகினர். ஏனைய பாதுகாப்பு ஊழி




யர்கள் தப்பி ஓட துப்பாக்கிச் சத்தங்களைக் கண்ட, கேட்ட மக்கள் தரையில் விழுந்து படுத்துக்கொண்டனர். கடற்படைக் காவலரணும் றொக்கட் லோஞ்சரின் தாக்குதலுக்குள்ளாகியதோடு, கடற்படையினர் சிலரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்து போயினர்.

துப்பாக்கிச் சூடுகளை அடுத்து அப்பாதையானது துப்பரவு செய்யப்பட (பாதுகாப்பு ஊழியர்கள் விரட்டியடிக்கப்பட) ஏற்பட்ட வழியினூடாக லொறி ஒன்று காலி முகத்திடல் பக்கமாக இருந்து வந்து கொண்டிருந்தது. மத்திய வங்கிக் கட்டடத்தை நோக்கி லொறி செல்லும் வரை இளைஞர்கள் இருவரும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு லொறிக்கு வழி எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தனர். லொறி இரும்புத் தடைகளையும் தகர்த்துக் கொண்டு இலக்கை அடைந்தது.

தாக்குதல் நடாத்திய இரு இளைஞர்களாலும் ஏற்கனவே அப்பகுதி அதிர்ச்சியிலிருக்க, சில கணங்களில் பாரிய வெடிச்சத்தத்துடன் அதி உயர் சக்தியுடைய வெடிமருந்து அடைத்த லொறி மத்திய வங்கியின் கட்டடத்தை தகர்த்தது.

சிறிலங்காவின் பொருளாதாரத்திற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருந்த சிறிலங்காவின் வர்த்தகப் பகுதியானது ஒரு சில நிமிடங்களில் மூச்சை இழந்தது. சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வரை இதனால் நட்டமேற்பட்டுள்ளதாக அறியப்படுகின்ற போதிலும் நட்டம் இதற்கும் மேல் இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

மத்திய வங்கிக்கு முன்னால் இருந்த சிலிங்கோ கட்டடம், ஏ.பி.என். அம்ரோ வங்கி, ஏயர் லங்கா, சுவிஸ் வங்கி, ரொய்டர் செய்தி நிறுவன அலுவலகம் போன்றவையும் பலத்த சேதற்குள்ளாகின. சூழ உள்ள கட்டடங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகியதால் உடனடியாகப் பாவிக்க முடியாத நிலையிலுள்ளன. இடிபாடுகளை அகற்றும் பணி இரண்டு நாட்களுக்கு மேல் தொடர முடியாமல் போயுள்ளது. தொடர்ந்து இடிபாடுகளை அகற்றி சடலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டபோது கட்டடங்கள் இடிந்து விழும் நிலை ஏற்பட்டதால் மீட்புப்பணி ஸ்தம்பிதம் அடைந்தது. எனினும் பின்னர் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



www.tamilarangam.net

பொருளாதார இலக்கொன்றின் மீதான தாக்குதலில் பொதுமக்கள் இடையில் சிக்கிக் கொல்லப்படுவது வருந்தத்தக்கதே. ஆயினும், சிறீலங்கா அரசாங்கம் நாளாந்தம் தமிழினப் படுகொலைகள் மூலம் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதையே இறுதித் தீர்வாகக் கொண்டுள்ளது. எனவே ஒரு மக்கள் மீதான இராணுவ அடக்குமுறைக்கு எதிரான தாக்குதல்களாக இவை நியாயப்படுத்தப்படுகின்றன. வெளிநாட்டு முதலீடு, சுற்றுலாப் பயணிகள் வருதல் தடைப்படுதல் என்பன சிறிலங்கா இராணுவ இயந்திரத்தைப் பலவீனமடையச் செய்யும் என்று நம்பப்படுகிறது. சுமார் நூறு பேர் கொல்லப்பட்டு 1400 இற்கும் அதிகமானோர் காயப்பட்ட இந்தச் சம்பவத்திற்கு போரின் மூலம் சமாதானம் காணுவதாகச் செயல்படும் சந்திரிகா அரசே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டுமென பல அரசியல், இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். யாழப்பாண நகர் கைப்பற்றப்பட்டபொழுது 5 இலட்சம் தமிழ் மக்கள் அகதிகளாகிப் பெரும் அவலத்துக்கு உள்ளாகியிருப்பதை அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு பெரும் அழிவுகளைச் செய்ய திட்டமிட்ட வேளையில் இச்சம்பவம் நடந்துள்ளதையும் அவர்கள் கோடிட்டுக்காட்டியுள்ளனர். இத்தாக்குதல் குறித்து, 'லண்டன் ரைம்ஸ்' பத்திரிகையில் எழுதிய கிறிஸ்தோபர் எனும் சர்வதேச செய்தியாளர், அவமானமடைந்து அகதிகளான தமிழ் மக்கள் வீடின்றி, வேலையின்றி, பசியுடனும் கோபத்துடனும் இருப்பதாகத் தெரிவித்தார். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தி உரிய தீர்வை முன்வைக்காத வரை சிறிலங்கா அரசு பாதாளத்தை நோக்கியே சென்று கொண்டிருக்க வேண்டும்.

**- தருமு**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## சிறுகதை

www.tamilarangam.net

# "எங்களை வாழவிடுங்கள்"

ஜனா கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் பத்து மணியாகியிருந்தது. இன்னும் இருபது நிமிடங்கள் இருக்கிறது விமானம் புறப்படுவதற்கு. ஒரு இனம்புரியாத சந்தோசம் அவன் மனத்தை ஆட்கொண்டது. நீண்டகால இடைவெளிக்குப்பின் தாய் நாட்டைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆனந்தம் அவனுக்கு. விமானத்தின் ஜன்னல் அருகிலே உட்கார்ந்து வெளியே பார்த்துக் கொன்டிருந்தான். அருகிலே இருந்த அவனது தங்கையும் தம்பியும் ஒரு இனிப்புப் பையை வைத்துப் போராடிக்கொண்டிருந்தார்கள். மெதுவான குரலில் அவர்களை அதட்டி அந்தப் பையை வேண்டி ஆளுக்குப் பாதியாகப் பிரித்துக் கொடுத்து விட்டு மீண்டும் திரும்பி ஜன்னல் பக்கம் உட்கார்ந்து கொண்டான். விமானம் புறப்பட்டு தரையைவிட்டு ஆகாயம் நோக்கி மெதுவாகப் பறக்க ஆரம்பித்தது. சில வருடங்களாவது தான் நடந்து திரிந்த இந்த நாட்டு மண்ணையும் மலைகளையும் தன்னுடன் பழகியவர்களையும் கூடப்படித்தவர்களையும் ஒரு கணம் நினைத்து வேதனைப்பட்டான். தன் தாய் தந்தையைத் திரும்பிப்பார்த்தான். சோகமே உருவாக அமர்ந்திருந்தனர் தாடையில் கையைவைத்தபடி. கண்ணிமைக்கக்கூட அவர்கள் மறந்திருந்தனர். அப்போதுதான் அந்தநாள் அவனுக்கு நினைவு வந்தது......

மாலை நான்கு மணிக்கு வேலைக்குப் போய்வந்து உணவருந்திவிட்டு சோபாவில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார் அவன் தந்தை பஞ்சலிங்கம். அவர் அருகில் வேலையால் வந்த களைப்புடன் படுத்திருந்தாள் அவன் தாய் மகேஸ்வரி. ஜனாவின் பார்வை தொலைக்காட்சியின் மீதிருந்தது. தொலைபேசியின் மணிச்சத்தம் பஞ்சலிங்கத்தின் அமைதியைக் குழப்ப அதை எடுத்துக் காதில் வைத்தார். அவரது நண்பன் கணேசன் வட நோர்வேயின் ஒரு நகரத்திலிருந்து பேசினார். அரைமணி நேரமாக அவர்கள் பேச்சு நீடித்தது. தந்தையின் முகத்திலும் பேச்சிலும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் மாறி மாறி வருவதை ஜனா அவதானித்தான். தொலைபேசியை வைத்தவர் சிறிது நேரம் எதுவுமே பேசவில்லை. "என்னப்பா பேசாமல் இருக்கிறியள் ஆர் ரெலிபோனில" படுத்திருந்தவாறே கேட்டாள் மகேஸ்வரி. "கணேசன் இருக்கிற இடத்தில சில பிரச்சனைகள் நடந்திருக்கு. மூண்டு நாளா நடக்குதாம். எங்களுக்கு தெரியாமல் போச்சு" என்றார் அவர். "என்ன பிரச்சனையாம்" மகேஸ்வரி கேட்டாள். "ரெண்டு மூண்டு வெளிநாட்டு ஆக்களின்ர வீட்டுக்குள்ள புகுந்து எல்லாத்தையும் அடிச்சு உடைச்சுப் போட்டாங்களாம். தமிழருக்கும் சேர்த்துத்தான். கனபேர் ஆஸ்பத்திரியிலையாம். ஒரு வீட்டையும் கொழுத்திப் போட்டாங்களாம். நாட்டைவிட்டு வெளிய போகாட்டி சுட்டுப் போடுவம் எண்டு கணேசனை மிரட்டிப்போட்டுப் போனவங்களாம். அங்க இனி இருக்கேலாதாம். அதுதான் அவையள் ஊருக்குப் போகப் போயினமாம்" என்று பஞ்சலிங்கம் சொன்னதுமே மின்னல் வேகத்தில் எழுந்து உட்கார்ந்தாள் மகேஸ்வரி. தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனாவின் காதுகளிலும் இவைகள் புகுந்தன. "ஏன்தான் இந்த வெள்ளைக்காரங்களும் இப்பிடியோ? மனிதநேயம் - மனிதாபிமானம் - மனித சுதந்திரம் என்று பேசிக் கொண்டு ஏன் இப்படி இனப் பிரிவினை, நிறப் பிரிவினை என்று பேதம் காட்டுகிறார்களோ. எல்லோரும் மனிதர்தானே. மதம், மொழி நிறத்தில்தானே வித்தியாசம்" என்று அவன் அங்கலாய்த்துக் கொண்டான். தாய் தந்தை இருவரின் கலக்கத்தைப் பார்த்ததும் மனதினுள் சிரித்துக் கொண்டான். "தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்" என்பார்கள். அதேபோல சில வருடங்களுக்கு முன் "இலங்கையிலே பிரச்சினை முடிந்துவிட்டது. தமிழர்களைத் திருப்பி அனுப்பப் போகிறோம்" என்று இந்த நாட்டு அரசு சொன்ன போது இவ்வளவு கலக்கம் கொண்டதில்லை. "எங்களுக்கு இந்த நாட்டு பிரஜா உரிமை கிடைச்சிட்டுத்து தானே. எங்களுக்குப் பிரச்சனை இல்லை. ஆரெண்டாலும் போகட்டும்" என்று அவர்கள் அலட்சியப் படுத்திக்கொண்டார்கள். ஆனால் இன்று நாங்களாகவே வெளியேற வேண்டிய நிலை என்று ஒரு கணம் மனதினுள் நினைத்துக்கொண்டான்.

இரவு படுக்கைக்குப் போன பஞ்சலிங்கத்திற்கும் மகேஸ்வரிக்கும் உறக்கம் வரவில்லை. அடுத்து என்ன செய்யலாம். அநியாயமாக உயிரிழக்க வேண்டிய நிலை வருமா? என்ற கேள்விகள் பஞ்சலிங்கத்தின் மனதில் அலைகளாக வந்த மோதின. நாட்டுக்குத் திரும்பிப்போக வேண்டிய நிலைவந்தால் பிள்ளைகளை என்ன செய்வது? இந்த நாட்டில் இந்த நாட்டுக் கலாச்சாரத்தையும், இந்த நாட்டு மொழியையும் படித்தவர்கள் ஊருக்குப்போனால் எப்படிப் படிக்கப் போகிறார்கள்? அவர்களின் எதிர்கால வாழ்வு பாழாகிவிடுமே? என்ன செய்வது என்ற எண்ணம் மகேஸ்வரியின் மனதில் வந்து வந்து போனது. வேற்றுநாட்டில் வேறு கலாச்சாரத்தின் மத்தியில் வேற்று மொழியைப் படித்தவர்கள், தாய்நாட்டில், தாய்மொழியை, கலாச்சாரத்தை பண்பாட்டைப் படிக்கமாட்டார்களா? தாய்நாட்டுக்குப் போவதால் எதிர்கால வாழ்வு பாழாகிவிடுமா? என்பதை மகேஸ்வரி நினைக்கவில்லை.

இரவு மூன்று மணி. திடீரென தொலைபேசியின் ஒலி இரவுநேர அமைதியைக் கிழித்தது. "இந்த நேரத்தில ஆர் எடுக்கிறது" என்றவாறே கட்டிலின் மேல்புறத்தில் மாட்டியிருந்த அதை எடுத்துக் காதில் வைத்தார் பஞ்சலிங்கம். "ஹலோ பஞ்சு நான் குலசிங்கம் கதைக்கிறன். ஆரோ எங்கட வீட்டுக்கு கல்லாலையும் போத்திலாலையும் எறிஞ்சு போட்டாங்கள். ஜன்னலும் உடைஞ்சுபோச்சுது. பொலிசுக்கு ரெலிபோன் எடுத்துச் சொல்லியிருக்கிறன். நீங்களும் கவனமா இருங்கோ. நான் பிறகு எடுக்கிறன் இப்பவைக்கிறன்" என்று சொல்லிவிட்டு வைத்தார் அவர். வெந்த புண்ணில் வேல் பாய்ந்தது போல இருந்தது பஞ்சலிங்கத்திற்கு. "இங்கேயும் பிரச்சினை வந்துவிட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டது" என மனைவிக்குச் சொன்னார். "நீ போய் பிள்ளையளை எழுப்பிக்கொண்டு வாப்பா... இந்த அறைக்குள்ள எல்லாரும் இருப்பம். விடிஞ்சாப்பிறகு மற்றதை யோசிப்பம்" என்று அவர் சொன்னதும் பிள்ளையளை எழுப்பிக்கொண்டு வந்த மகேஸ்வரி நடந்தவைகளை ஜனாவுக்கும் சொன்னாள். "வேண்டாம் இனி யோசிக்கிறதில பிரயோசனமில்லை. நாங்கள் உயிரோட இருக்கவேணுமெண்டா நாட்டுக்குப் போறதுதான் நல்லது" என்று முடிவெடுத்தனர். தமது அத்தியாவசியத் தேவைக்கு மட்டும் சில சாமான்களை எடுத்துக்கொண்டு மறுநாள் காலையே புறப்பட்டனர். இந்த நாட்டை விட்டுப் போவதற்கு பஞ்சலிங்கத்திற்கும் மகேஸ்வரிக்கும் விருப்பமே இல்லை. இந்த வாழ்க்கையும் பணமும் இனி எங்கள் நாட்டில் எப்படி? இங்கே இருவரும் வேலை செய்தால் நல்ல வருமானம் வரும். குழந்தைகளுக்கு மாதம் மாதம் அரசாங்க உதவிப் பணம்... இவையெல்லாம் இனி எப்போ? எப்படி மனம் வரும் இந்த நாட்டை விட்டுப் போக. "விமானம் தரையிறங்கப் போகிறது. எல்லோரும் உங்கள் பட்டிகளை அணிந்துகொள்ளுங்கள்" என்ற அறிவித்தல் ஜனாவின் நினைவுகளைக் கலைத்தது. தாய் நாட்டிற்கு வந்துவிட்டதான சந்தோசம் அவனுக்கு. எட்டிப்பார்த்தான். தொலைவிலே தெரிந்த காடுகள், மலைகள், மாடிக்கட்டிடங்கள் எல்லாம் விமானம் தரையிறங்க இறங்க அண்மித்துக்கொண்டு வந்தன. அவன் இந்த நாட்டை விட்டுப் போகும் போது அவனுக்கு ஆறு வயது. பதினொரு வருடங்களின் பின் அவன் திரும்பி வருகிறான். நிச்சயமாகப் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். விமானத்தை விட்டு வெளியே வந்தனர். குளிர் காற்றினையே சுவாசித்து உடல் நடுங்கிப் பழக்கப்பட்டுப் போன ஜனாவுக்கு இதமாக வீசிய வெப்பக்காற்று ஒரு சுகத்தைக் கொடுத்தது. வாடகைக் கார் ஒன்றைப் பிடித்து வீடு வந்து சேர்ந்தனர். அங்கே பஞ்சலிங்கத்தின் வயது முதிர்ந்த தந்தையும் தாயும் மகன் மருமகள் பேரக் குழந்தைகளைக் கண்டதும் ஆனந்தவெள்ளத்தில் மூழ்கினர்.

நாட்கள் நகர்ந்தன. ஜனாவுக்கும் புதுப் புது நண்பர்கள் கிடைத்தனர். பஞ்சலிங்கத்திற்கும் மகேஸ்வரிக்கும் வெளிநாட்டு வாழ்வை மறக்கமுடியவில்லை. இவர்களைப் போலவே வேறும் பல மேலை நாடுகளிலிருந்தும் பலர் நாடு திரும்பிக்கொண்டிருந்தனர். அவர்களுள் மகேஸ்வரியின் தங்கை ஜேர்மனியிலிருந்தும், பஞ்சலிங்கத்தின் தம்பி பிரான்சிலிருந்தும் அவரது மைத்துனர் கனடாவிலிருந்தும் வந்திருந்தனர். பல வருடங்களின் பின் ஒருவரையொருவர் சந்தித்து எல்லோரும் சுகம் விசாரித்துக்கொண்டனர். ஆனால், குழந்தைகளுக்கிடையில் மட்டும் பெரிய திண்டாட்டம். ஒருவருடன் ஒருவர் பேசமுடியவில்லை. காரணம் மொழிப் பிரச்சினை. புன்னகை ஒன்றின் மூலம் மட்டும் அவர்கள் அறிமுகமாகிக் கொண்டனர். ஒவ்வொரு பெற்றோர்களும் அவர்களை ஒவ்வொரு நாட்டு மொழிகளினால் உறவுகளை விளக்கப்படுத்தினர். இருந்தாலும் ஆசை தீர ஒருவருடன் ஒருவர் பேசி விளையாட முடியவில்லையே என நினைக்கும் போது மனதினுள் வேதனையாக இருந்தது.

காலச்சக்கரம் சுழன்றது. சிறு வயதிலிருந்தே மேலைநாட்டுக் கலாச்சாரத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட ஜனாவுக்கு தாய்நாட்டுக் கலாச்சாரம் பண்பாட்டு பழக்க வழக்கங்கள் புதுமையாகவும் வாழ்வுக்கு நல்ல வழிகாட்டிகளாகவும் தோன்றின. "இவைகளையெல்லாம் அம்மா அப்பா எனக்குச் சொல்லித்தரவில்லையே. தாய்மொழியைக் கற்றுக்கொடுப்பதில் கூட அக்கறை காட்டவில்லையே. ஆனால், கொஞ்சமாவது என்னால் தமிழ்மொழி கதைக்க முடிந்ததையிட்டு சந்தோசப்படுகிறேன்" தாய் தந்தையை நினைக்க கோபம் கோபமாக வந்தது அவனுக்கு. ஒருநாள் பஞ்சலிங்கத்தின் வீட்டில் எல்லோருக்கும் விருந்துபசாரம் நடந்துகொண்டிருந்தது. குழந்தைகள் எல்லோரும் தட்டுத்தடுமாறி ஓரளவாவது தமிழ் மொழி கதைக்கக் கற்றுக்கொண்டனர். முற்றத்தில் நின்ற மாமரத்திலே அவர்கள் ஊஞ்சல் கட்டி விளையாடிக்கொண்டிருந்தனர். வெளி விறாந்தையில் உட்கார்ந்தபடியே அவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தான் ஜனா. "ஏன் தம்பி உதில தனிய இருக்கிறாய். போய் சித்தியின்ர பிள்ளையோட கதையன்" மகேஸ்வரி சொன்னாள். அதைக் கேட்டதும் ஜனாவுக்கு கோபம் அதிகமாகியது. அவனது மனதினுள் உறைந்து கிடந்தவை வார்த்தைகளாக வெளிவர ஆரம்பித்தன. "எப்படிப் பேசுறது ஊமைப்பாசையிலா? எங்களுக்குத் தான் நீங்கள் தமிழ் கற்றுத் தரவில்லையே. எப்படிப் பேசமுடியும். வெளிநாடுகளில் இருந்தப்போ தமிழ் மொழி கற்றுக்கொடுக்க வேணுமெண்டு உங்களில யாராவது நினைச்சனீங்களா?" என்ற ஜனாவின் பேச்சைக் கேட்டு எல்லோரது பார்வையும் அவன்மேல் திரும்பியது. "வெளிநாடுகளுக்குப் போயிட்டா இனி அதுதான் நிரந்தரம் - சொந்தநாடு எண்டு எல்லாரும் நினைக்கிறீங்க. உங்களுக்கெண்டு ஒரு சொந்தநாடு, மொழி இருக்கெண்டதையே மறந்திடுறீங்க. எங்களுக்காவது சொல்லித் தந்திருக்கிறீங்களா? இன்று என்ன நடந்தது? அவங்கள் அடிக்க நீங்களாகவே ஓடி வந்திட்டீங்க." அவனது ஆவேசப்பேச்சு விளையாடிக்கொண்டிருந்த குழந்தைகளின் கவனத்தையும் ஈர்த்தது. எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். "இதோ பார்த்தீங்களா. என்னைச் சூழ்ந்து நிக்கிற எல்லோருமே என் உறவினர்கள். அவர்களோட ஆசை தீரப் பேசமுடியல்ல. இதோ சித்தி மகன் என் சகோதரன். அவனோட பேசமுடியல்ல. ஊமைப்பாசையிலும் அரைகுறைத் தமிழிலும் பேச வேண்டியிருக்கு. நீங்களும் அக்கறை காட்டேல்ல. சித்தியும் அவனுக்குத் தமிழ் தெரியவேணுமெண்டு நினைக்கல்ல. வெளிநாட்டில வாழுற எங்கட பிள்ளையளுக்கு இனி ஏன் தமிழ்மொழி தெரியவேணுமெண்டு நினைச்சீங்க ஆனால் இன்று.... நினைக்க நினைக்க என் மனது எவ்வளவு வேதனைப்படுது தெரியுமா?" அவன் கண்கள் கலங்கின. அவனது பேச்சில் நியாயமிருப்பதாக மற்றைய குழந்தைகளுக்கும் தெரிந்தது. ஆனால் இது பெரியவர்களுக்கு இது புரிந்ததோ என்னவோ?


**- பொன். சிவா**

**இச் சிறுகதை, 1995-ம் ஆண்டு மாவீரர் நாளையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டிக் கதைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது. சென்ற மாத இதழில் வெளியாகியிருந்த "காற்று வேலி" என்னும் சிறுகதையும் போட்டிக்கதைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டது என்பதை குறிப்பிடத் தவறியமைக்கு வருந்துகிறோம்.**

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Vasan Litho Printer (London) - 0181-6404366




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்